
www.padippakam.com

# கிராமத்தின் இதயம்

## ப. விக்னேஸ்வரன்




81 ஆம் ஆண்டு...
தசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் நடத்திய
மிழ்த் திரைக்கதைப் பிரதிப் போட்டியில்
தற்பரிசு பெற்றது.

இலங்கை ஒலி-ஒளி நேயர் மன்ற வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கிராமத்தின் இதயம்

( திரைக்கதைப் பிரதி )

( 1981 ஆம் ஆண்டு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய தமிழ்த் திரைக் கதை போட்டியில் முதற் பரிசு பெற்றது )

ப. விக்னேஸ்வரன்

இலங்கை ஒலி - ஒளி நேயர் மன்ற வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

# KIRAMATHIN IDAYAM

## (HEART OF VILLAGE)

### TAMIL FILM SCRIPT

***BY P. WIKNESWARAN***

All Right Reserved

**Price 100/-**
First Edition : 27. 05. 1990

*Published by:-*

**ILANKAI OLI-OLI NEYAR MANDRAM**
90/5, NEW CHETTY STREET, COLOMBO 13.

*Printed by :* **K. Satkurunathan**
**at The Prestige Printer.**
*57/22B, Jampettah Street, Colombo 13.*

படிப்பகம்

www.padippakam.com

# முகவுரை

ஈழத்துக் கலைத்துறையின் புதிய தேவை திரைக்கதைப் பிரதிகள். தொலைக்காட்சி என்ற ஊடகம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதனால் ஏற்பட்ட அதி முக்கிய தேவைகளில் ஒன்று இது. தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரிப்பவன் என்ற நிலையில், இந்தப் புதிய தேவையின் அவசரத்தை உணர்ந்து அதை ஈடு செய்யும் முயற்சிக்கு ஆரம்பமாக இருக்கட்டும் என்ற நினைப்பில் என்னால் எழுதப்பட்டு 1981ம் ஆண்டில் இலங்கை தேசிய திரைபடக் கூட்டுத்தாபனம் நாடளாவிய ரீதியில் நடத்திய திரைக்கதைப் பிரதிப் போட்டியில் முதற் பரிசு பெற்ற ''கிராமத்தின் இதயம்'' என்ற இந்தத் திரைக்கதைப் பிரதியை நூலுருவில் பிரசுரிக்கத் தீர்மானித்தேன். இதை ஓர் ஆதர்ச திரைக்கதைப் பிரதி என்று நான் கூறவர வில்லை. எனினும் ஓர் அறிஞர் குழுவினால் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்ட திரைக்கதைப் பிரதி என்ற வகையில் இது திரைக்கதை எழுத விரும்புபவர்களுக்கு ஓர் ஆதாரமாக அமையலாம் என நான் கருதுகிறேன்.

எமது நாட்டில் நாவல்கள், சிறுகதைகள் உருவில் சிறந்த ஆக்கங்கள் படைக்கப்பட்டுள்ளன. சிறந்த எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மனம் வைத்து முயன்றார்களேயானால் சிறந்த திரைக்கதைகளை ஆக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதற்குத் தேவையானதெல்லாம் சிறிது முயற்சி மட்டுமே. பல எழுத்தாளர்களைத் தொலைக்காட்சிக்குத் திரைக்கதை எழுதும்படி நான் கேட்கும் போதெல்லாம் அவர்கள் தமக்கு கமறாக் கோணங்கள் அமைப்பது, மற்றும் 'க்ளோஸப்', 'லோங் ஷொட்' போன்ற தொழில் நுட்ப சமாச்சாரங்கள் தெரியாதே எப்படித் திரைக்கதை எழுதுவது என்று என்னைக் கேட்பதுண்டு. என்னைப் பொறுத்தவரையில், ஒரு திரைக்கதை ஆசிரியர் இப்படியான தொழில் நுட்ப விடயங்களைப் பற்றி அதிகம் அக்கறை கொள்ளத் தேவையில்லை. அவை முழுக்க முழுக்க இயக்குனரின் விடயங்கள். சினிமாவை 'டிரக்டர்ஸ் ஆர்ட்' (Director's Art) என்று சொல்லுவார்கள். திரைப்படம் என்பது முழுக்க முழுக்க இயக்குனரின் படைப்பே. சிறந்த திரைக்கதை ஒரு சிறந்த திரைப்படத்தை உருவாக்க இயக்குனருக்கு உதவுகிறது, எனவே, திரைக்கதை என்பது திரைப்படத்தின் மூலாதாரம் மட்டுமே.

உலகின் தலைசிறந்த இயக்குனர்கள் எழுதிய திரைக்கதைப் பிரதிகள் புத்தக உருவில் வெளிவந்துள்ளன. அவற்றில்கூட இத்தகைய தொழில் நுட்பக் குறிப்புகள் இடம் பெற்றிருக்க வில்லை. உதாரணமாக இன்க்மார் பேர்க்மன் எழுதிய ''வைல்ட் ஸ்ரோபரீஸ்'' மற்றும் ''த செவந்த் சீல்'', விக்டோரியோ டீசீக்கா எழுதிய ''பைசிக்கிள் தீவ்ஸ்'', சேர்ஜி ஐசென் ஸ்ரெயின் எழுதிய ''த பற்றிள் ஷிப் பொற்றெம்கின்'' போன்ற பல புகழ் வாய்ந்த திரைப் படங்களின் திரைக்கதைப் பிரதிப் புத்தகங்களைப் பார்த்தால். இத்தகைய தொழில் நுட்பக் குறிப்புகளை நீங்கள் காணமாட்டீர்கள். ஆனால் சிலவற்றில் கடைசிப் பக்கங்களில் முழுத் திரைப்படத்தினதும் 'ஷொட் லிஸ்ற்' என்று சொல்லப்படுகின்ற காட்சிகளின் தொழில் நுட்ப விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இவற்றை இன்னுமொரு இயக்குனர் அல்லது தொழில் நுட்பக் கலைஞர் மாத்திரமே புரிந்து கொள்ள முடியும், ஆனால் சில ஆங்கிலத் திரைப்படங் களின் தயாரிப்புக்குப் பின் எழுதப்பட்ட பிரதிகளில் (Post Production Script) முழுத் திரைப் படத்தின் சகல தொழில் நுட்ப விபரங்களும் வெளிவந்துள்ளன.

திரைக்கதைப் பிரதி என்பது திரைக்கதை ஆசிரியரின் கற்பனை வடிவம் மட்டுமே, இந்தக் கற்பனை வடிவை உண்மை போன்று சித்திரிக்க முயல்கின்றார் இயக்குனர். இந்த முயற்சியில் நடைமுறைச் சாத்தியங்கள், தேவைகள் முதலியவற்றைக் கருத்திற் கொண்டு திரைக்கதைப் பிரதியைப் படப்பிடிப்புப் பிரதியாக (Shooting Script) மாற்றுகிறார் அவர்.

படிப்பகம்

www.padippakam.com

அநேகர் இந்தப் படப்பிடிப்புக்கான பிரதியைத்தான் திரைக்கதைப் பிரதி என்று எண்ணிக் குழம்புகிறார்கள். இது முற்றிலும் தவறானதாகும். ஒரு படப்பிடிப்புப் பிரதியைக் கற்பனையில் எழுதிவிட முடியாது. மேலும் விளக்கமாகப் பார்ப்போமேயானால், ஒரு திரைக்கதை ஆசிரியர் ஒரு வீட்டின் வரவேற்பறையில் சில கதாபாத்திரங்கள் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் இடம் பெறுவதாகக் கற்பனை செய்யலாம். மேலும் அந்தக் கதாபாத்திரங்களின் செயற்பாடுகளைக் கூடக் (Actions) கற்பனை செய்யலாம். ஆனால் அதைத் திரைப்படமாக உருவாக்கும்போது ஓர் உண்மையான வீடு, வரவேற்பறை முதலியன தெரிவு செய்யப்படுகின்றன. அந்த வரவேற்பறையின் நீள அகலம், ஒளிவரும் திசை, பாத்திரங்கள் நடமாடும் அல்லது செயற்படும் திசைகள் (Directions) என்பவற்றைக் கொண்டு கமராக் கோணங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. செட் (Set) போடுவதாயின் நாம் விரும்பியபடி போட்டுக்கொள்ளலாம் மேலும் பாத்திரங்களின் வசனங்களின் முக்கியத்துவம், உணர்ச்சி வெளிப்பாடுகளின் முக்கியத்துவம், செயற்பாடுகளின் முக்கியத்துவம் முதலியவற்றைக் கொண்டு 'குளோஸப்', 'லோங் ஷொட்' போன்ற விபரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள், இத்தகைய தொழில் நுட்ப விடயங்களை ஒருவர் கற்பனையில் எழுத முடியாது என்று நான் கூறியதை.

என்னைப் பொறுத்தவரையிலே ஒரு தேர்ந்த எழுத்தாளனுக்குத் திரைக்கதை எழுதுவது என்பது அப்படி ஒன்றும் பெரிய விடயமல்ல. கீழ்வரும் குறிப்புகள் ஒரு கதையைத் திரைக்கதையாக அமைப்பதற்கு உதவும் என்று கருதுகிறேன்.

1. எந்த எழுத்தாளனும் தான் எழுதும் கதைகளின் பாத்திரங்களை, சம்பவங்களை மனக் கண்ணில் காட்சிகளாத் தரிசித்தே எழுதுகிறான். ஆனால் சிறுகதை, நாவல் போன்றவற்றில் இந்தக் காட்சி விளக்கம் அவ்வளவாக இடம் பெறுவதில்லை. திரைக்கதைக்கு இது முக்கியமாக அமைகிறது. ஒரு திரைப்படப் பிரதியின் வலது பக்கத்தில் அமைவது எழுத்தாளனின் மனக்கண்ணில் வரும் இந்தக் காட்சி விளக்கங்களே.

2. சிறுகதைகள், நாவல்களில் எழுத்தாளரால் கூறப்படும் அல்லது வர்ணிக்கப்படும் சம்பவங்கள் திரைக்கதைகளில் செயலுருவில் எழுதப்படல் வேண்டும். உதாரணமாக கதை எழுதும்போது ''கந்தன் தன் ஆத்திரம் தீருமட்டும் வள்ளியின் கன்னங்களில் அறைந்தான். அதன்பின் தன் மனச்சுமை குறைந்த மாதிரி உணர்ந்தான்'' என்றல்லாம் எழுதலாம். ஆனால் திரைக்கதைப் பிரதியிலோ, காட்சி விளக்கப் பகுதியில் 'கந்தன் வள்ளியை அடித்தல்' என்று மாத்திரம் எழுதினால் போதுமானது. ஆத்திரம் தீருமட்டும், மனச்சுமை குறைந்த மாதிரி உணர்ந்தான், போன்ற உணர்ச்சி வெளிப்பாடுகள் இயக்குனரும் நடிகரும் சம்பந்தப்பட்ட விடயங்களாகும். ஆனால் இப்பிரதியில் வாசகர்களின் கவனத்திற்கென இத்தகைய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

3. ஒரு கதையில் பாத்திரங்களின் குணாதிசயங்களைப் பெரும்பாலும் கதாசிரியரே எடுத்துக் கூறுகிறார். உதாரணமாக 'கந்தசாமி என்னத்தான் முரட்டுச் சுபாவம் கொண்ட முன்கோபியாக இருந்தாலும் அவனுக்கு மிகவும் இளகிய மனது. மற்றவர்கள் படும் துன்பத்தைக் கண்டு பொறுக்கமாட்டான்' என்று கதாசிரியர் கதைகளில் வர்ணிப்பதை திரைக்கதைப் பிரதியில் செயலுருவில் காட்டுதல் வேண்டும்.

4. நாடகத்துக்கு உரிய முக்கிய அம்சமான, பாத்திரங்களுக்கிடையேயான உரையாடல் மூலம், உணர்வுகளை வெளிப்படுத்தத் தெரிந்திருத்தல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

5. காட்சிகள் தெளிவான ஒழுங்கில் எழுதப்படுதல் வேண்டும். காட்சிகளை சரியான முறையில் ஒழுங்குபடுத்துதல் இரண்டு வகைகளில் திரைக்கதை அமைப்புக்கு உதவி புரிகிறது.

(a) எந்த சிக்கலான கதையைக்கூட காட்சிகளைத் தெளிவாக ஒழுகுபடுத்துவதன் மூலம் சுலபமாக மக்களுக்குப் புரியவைக்க முடியும்.

(b) ஒரு சாதாரண கதையைக்கூட காட்சிகளை அமைக்கும் முறைகொண்டு விறு விறுப்பானதாக்கலாம். உதாரணம் அன்ட்ரே வஜிடாவின் 'அட்றிஃப்பட்' திரைப் படம்.

மேற் கூறியவற்றை அடிப்படையாகக்கொண்டு திரைப்படப் பிரதியொன்றை எழுதிவிட முடியும் என்று கருதுகிறேன். ஆனாலும் முடிந்தளவு பலவகையான திரைப்படங்களையும் பார்ப்பது, வெளிவந்துள்ள மேலை நாட்டுத் திரைக்கதைப் பிரதிகளை வாசிப்பது, மேலும் சினிமாக் கலை பற்றி, அதன் பரிமாணங்களைப் பற்றி ஆழமாக அறிந்திருப்பது போன்றவை ஒரு பண்பட்ட திரைக்கதைப் பிரதி எழுதுவதற்கு ஒரு எழுத்தாளனுக்கு உதவி செய்யும்.

எப்படித்தான் ஒரு கதாசிரியர் திரைக்கதை எழுதினாலும் கடைசியில், அதனைத் திரைப்படமாக்கும் இயக்குனரின் தீர்மானத்துக் கேற்பத்தான் அது இறுதி வடிவம் பெறுகின்றது என்பதைத் திரைக்கதை ஆசிரியர்கள் தெரிந்திருப்பது நல்லது.

இறுதியாக இந்தத் திரைக் கதைப் பிரதியை நூலுருவாக வெளியிட நிதியுதவி கோரி நான் விண்ணப்பித்தபோது அதை வரவேற்று தமது அமைச்சின் மூலம் ஒரு பகுதி நிதியை வழங்கிய கௌரவ இந்து கலாச்சார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எனது நன்றிகள். மேலும், இந்தத் திரைக்கதைப் பிரதியை நூலுருவில் வெளிக் கொணர அயராது பாடுபட்ட இலங்கை 'ஒலி-ஒளி நேயர் மன்றத் தலைவர் திரு. தம்பிஜயா தேவதாஸ் 'அவர்களுக்கும், இதனை நூலுருவில் அச்சிட்ட திரு. K. சற்குருநாதன் அவர்களுக்கும், *THE PRESTIGE PRINTER* உரிமையாளர் திரு. M. ரெங்கராஜ் அவர்களுக்கும் சக ஊழியர்களுக்கும், அவ்வப்போது ஒப்பு நோக்கி உதவிய திரு. M. வரதராஜன் அவர்களுக்கும், இநத புத்தகத்திற்கு அட்டைப்படத்தை வரைந்துதவிய திரு. சிறீதர் பிச்சையப்பா அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ப. விக்னேஸ்வரன்**

''கஜேந்திர்''
குமரவேள் கோவிலடி,
காங்கேசன்துறை.

படிப்பகம்

www.padippakam.com

# நன்றியுடன் நினைக்கின்றேன்

இந்தப்பிரதி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட ஒரு போட்டியில் முதலிடத்தைப் பெற்றதெனில் அந்த ஆற்றலை எனக்கு அளித்தவர்களை ஆத்மார்த்தமான நன்றியுடன் நினைவு கூர்வது இச்சந்தர்ப்பத்தில் அவசியமாகும்.

என் அறியாப்பருவத்திலிருந்தே தன் இசைமூலம் என் இசையார்வத்தை வளர்த்து, கலைகளில் நாட்டமுள்ளவனாக வளர்வதற்கு வேண்டிய ஊக்கத்தையும், ஒத்துழைப்பையும் தந்த, தந்துகொண்டிருக்கும் எனது தாயார்.

பாலர் வகுப்பு முதல் என்னுடன் ஒன்றாகப் படித்து எனது விளையாட்டுத் தோழனாக, கலையுலக நண்பனாக தன்னையறியாமலேயே எனது முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் உதவிய எஸ் லிங்கவேலாயுதம் அவர்களுக்கும்

தான் பார்த்த திரைப்படங்களின் கதைகளை ஆரம்ப 'டைட்டில்' காட்சியிலிருந்து கடைசி 'சுபம்' வரை காட்சிவாரியாகச் சொல்லி தன்னை அறியாமலே எனது திரைக்கதை எழுதும் ஆற்றலுக்கு மூலகாரணமாக இருந்த எமது தோட்டத்திற்கு கிடுகுபின்னுவதற்கு வரும் திருமதி. லட்சுமி பெரியான் அவர்கள்.

நான் சிறுவனாக இருந்தபோது தனது நாடக ஆற்றலால் எனைக் கவர்ந்து தனது வீட்டில் நடக்கும் ஒத்திகைகளின் பார்வையாளனாக்கி நான் வாலிபனாகி நடித்த நாடகங்களின் இறுதி ஒத்திகைகளுக்கு வந்து என்னை நெறிப்படுத்திய நடிகமணி அமரர் வீ. வீ. வைரமுத்து அவர்கள்.

என்னை முதன்முதல் நாடகத்தில் நடிக்கவைத்த கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள்.

எனது வாலிபப்பருவத்தில் எமது கல்லூரிக்கு அதிபராக வந்து எனது நாடக ஆர்வத்தை மேலும் வளர்த்த கே. சிவப்பிரகாசம் அவர்கள்.

நாடகத்துறையில் ஒரு நடிகனாக எனக்கு ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுத்தர உதவிய, நாடகங்களின் பிரதிகளை எழுதி நெறிப்படுத்திய காங்கேசன்துறை இளந்தமிழர் மன்ற ஸ்தாபகர் காலஞ்சென்ற என். கருணானந்தசிவம் அவர்கள், மற்றும் அம் மன்றத்தின் அங்கத்தவர்களும், சக நடிகர்களுமான என் நண்பர்கள்.

எனது சினிமாப்பார்வையை மிக ஆழமாக்க சகல வழிகளிலும் காரணகர்த்தாவாக விளங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நாடகத் தயாரிப்பாளர் திரு. ஜோர்ஜ் சந்திரசேகரன் அவர்கள்.

இவர்களை எல்லாம் நன்றியுடன் நினைவு கூர்வதோடு இலங்கையின் கலைகள், அவற்றின் தரம், கலைஞர்கள், அவர்களின் திறமைகள், இலக்கிய கர்த்தாக்கள், அவர்களின் ஆற்றல்கள் போன்றவற்றையும், எல்லாவற்றிற்கும் மேலாக மனிதர்களைப் பற்றியும் நான் மிக ஆழமாக புரிந்துகொள்ள ஒரு பல்கலைக்கழகம் போல் துணைபுரிந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் நன்றியைத் தெரிவிப்பது எனது கடமையாகும்.

ப. விக்னேஸ்வரன்
27. 02. 90.

படிப்பகம்

www.padippakam.com

# பாத்திரங்கள்

## ஆண்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிவராசா | 21 வயது |
| 2. | சிவகுரு | 25 வயது |
| 3. | அருணகிரி | 21 வயது |
| 4. | கோபால் | 28 வயது |
| 5. | கந்தசாமி | 22 வயது |
| 6. | சங்கரலிங்கம் | 58 வயது |
| 7. | சின்னான் | 50 வயது |
| 8. | சண்முகம் | 35 வயது |
| 9. | ஆறுமுகம் | 35 வயது |
| 10. | விதானையார் | 50 வயது |
| 11. | லோகநாதன் (மனேஜிங் டிரெக்டர்) | 50 வயது |
| 12. | வேர்க்ஸ் மனேஜர் | 45 வயது |
| 13. | மாமா (சகுந்தலாவின்) | 45 வயது |
| 14. | சிரிசேன | 38 வயது |
| 15. | பொன்சேகா | 35 வயது |
| 16. | தொழிற்சாலை ஊழியர்கள் | 10 பேரில் தமிழர்-5, சிங்களவர்-5 |

## பெண்கள்

| | | |
|---|---|---|
| 1. | சகுந்தலா | 19 வயது |
| 2. | யசோ | 19 வயது |
| 3. | செல்வி | 48 வயது |
| 4. | நிலும் | 22 வயது |
| 5. | வேர்க்ஸ் மனேஜர் மனைவி | 35 வயது |
| 6. | லோகநாதனின் மனைவி | 45 வயது |
| 7. | சங்கரலிங்கத்தின் மனைவி | 38 வயது |
| 8. | மீன்காரி | 55 வயது |
| 9. | பெண்குழந்தை சாந்தி | 02 வயது |



படிப்பகம்

www.padippakam.com

# பொதுப் பாத்திரங்கள்

1. சந்தையடிச் சனங்கள்
2. ஊர் இளைஞர்கள்
3. விழாவுக்கு வரும் பொதுசனங்கள்
4. ஊர்ப் பிரமுகர்கள்
5. தொழிற்சாலை ஊழியர்கள்
6. கொழும்பில் சண்முகத்திடம் பணம் பறிக்கும் இருவர்
7. சிவராசாவை அடிக்கும் ஆறு பேர் (யூனியன் விடயமாக)
8. வாச்சர் (யாழ்ப்பாண ஆஸ்பத்திரி)
9. பியோன்
10. தபாற்காரர் (மூன்று பேர்)
11. ஆஸ்பத்திரி தாதிகள்
12. சக நோயாளிகள்
13. செக்கியூரிட்டி காட்ஸ் இருவர்
14. பார் கீப்பர்
15. பார் ஊழியர்கள் இரண்டு பேர்



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :**

**ஒலி**

காட்சி : *1*
**இடம் :** ***சின்னானின் வீடு***
**நேரம்:** *காலை சுமார் 8 மணி.*

**பாத்திரங்கள் :**

சின்னான், செல்லி.

*யாழ்ப்பாணத்தின் மிகவும் ஒதுக்குப் புறமான ஒரு அழகிய கிராமத்தின் சில காட்சிகள் சின்னான் பனங்கூடலுக்குள் உள்ள ஒரு பனையில் கள் ளிறக்கிக் கொண்டு, முன்னால் இருக்கும் குடிசையை நோக்கி வந்து, கள்ளு முட்டியைக் குடிசைக்குப் பக்கத்தில் இருக்கும் பத்திக்குள் கொண்டு போய்க் கொண்டே :—*

*( கிராமிய சூழ்நிலையைக் குறிக்கும் ஒலிகள். மிகவும் மெல்லியதாகக் கிராமிய வாத்திய இசை பின்னணியில் )*

**சின்னான் :** செல்லி சங்கரலிங்கமையா வீட்டுப் போத்திலுகளைக் கொண்டா.

*பத்திக்குள் போய் முட்டியை வைத்து விட்டுக் குந்திக்கொண்டே :—*

**சின்னான் :** இவன் ராசன் எங்க போட்டான்...... விடிஞ்சு எட்டு மணியாகேல்ல... அதுக்குள்ளை ஆளைக் காணேல்ல.

*செல்லி குடிசைக்குள் இருந்து போத்தல்களுடன் வந்துகொண்டே :—*

**செல்லி :** ஏதோ ஆண்டு விழாவாம்... அந்த அலுவல்கள் பாக்க வேணுமெண்டு போட்டு, இப்பதான் போனான்.

*சின்னான் போத்தல்களை வாங்கி அவற்றுள் கள்ளை நிரப்பிக்கொண்டே :—*

**சின்னான் :** தாலியக்கட்டின ஆண்டுவிழா......வெய்யிலெண்டில்லை, மழையெண்டில்லை நான் பனைபனையா ஏறி உழைச்சு வைக்கிறன்... நேரத்துக்கு நேரம் வந்து திண்டு போட்டு ஊர்த்துளவாரம் பாக்கட்டும்..... அறிவு கெட்ட சென்மங்கள்.

**செல்லி :** அவனும் என்ன செய்யிறது...... அவன் சும்மா இருந்தாலும் ஊர்ப்பொடியள் அவனை விடாதுகள்...... தொட்டதுக்கெல்லாம் வந்து கூப்பிட்டுக் கொண்டு...

**சின்னான் :** ( ஆத்திரமாக ) நீ விடமாட்ட... எல்லாத்துக்கும் ஒவ்வொண்டு சொல்லிக் கொண்டு...... இவளவு காலமுந்தான் படிக்கிறன். யூனிவசிட்டிக்குப் போறன் கவுண்மெந்து ஏச்சண்டா வாறன் எண்டு திரிஞ்சு, எடுத்த சோதினையெல்லாம் பெயில்...... எனியெண்டாலும் என்னோடை வந்து தொழிலைப் பழகக் கூடாதே.



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :**

ஒலி

**செல்லி:** அவன் பச்சைப் பாலனால உந்த மரந் தடி எல்லாம் ஏறேலுமே...... அதுதானே சொல்லுறான், தன்ர படிப்பக்கொண்டே ஏதும் வேலை எடுக்கலாமெண்டு... சின்ன வேல கிடைச்சாலும் தான் முன்னேறிடு வன் எண்டு பிள்ளை நம்பிக்கையாச் சொல்லுது......

**சின்னான் போத்தல்களை நிரப்பி ஒரு பையில் போட்டுப் பத்தியின் ஒரு மூலையில் வைத்துவிட்டு, முட்டிகளைத் தூக்கிக் கொண்டு வெளியே வரல்:**

**சின்னான்:** (கோபமாக) அவர் பச்சைப் பாலன். நீ மடியில தூக்கி வச்சு பாலக்குடு... ஆத்தையும் மோனுமாச் சேந்து ஏதோ செய்து முடியுங்கோ... நானும் என்ர கைகால் வழங்குமட்டும் அடிச்சுப் போடுறன். சரி சரி, சங்கரலிங்கமையா வீட்டுக்கு மூண்டு போத்தல் நிரப்பி வைச்சிருக்கிறன்... அவன் வந்தா ஒன்பது மணிக்கு முதல் கொண்டு போய் ஐயா விட்டக் குடுக்கச் சொல்லு... அவன் வராட்டா நீ கொண்டுபோய்க் குடு. நான் முகத்தார் வளவுப் பனையளைப் பாத்துக்கொண்டு கோப்பிறேசனுக்குப் போட்டு வாறன்...

*சின்னான் போதல். செல்லி பின்னால் நின்றுகொண்டு:—*

**செல்லி:** சாப்பாடென்ன மாதிரியணை...

*சின்னான் படலையைச் சாத்திக் கொண்டே :—*

**சின்னான்:** சென்டுபோச்சுது... நான் போட்டோடியாறன்... மோன் சாப்பிட்டிட்டானே.

**செல்லி:** இன்னும் இல்லை.

*போய்க்கொண்டே :—*

**சின்னான்:** ஹூம்... சாப்பிடவுமில்லை, வெளிக்கிட்டிருக்கிறார்... இனி ஏதும் ஊர் வம்பை வாங்கிக்கொண்டு வருவார்.

காட்சி முடிவு



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :**

காட்சி: 2

இடம் : ஊர்ச்சந்தை

நேரம்: காலை சுமார் 8 மணி.

**பாத்திரங்கள் :**

சிவராசா, சண்முகம், விதானையார், மீன் விற்கும் பெண், சந்தை வியாபாரிகள், ஊர் மக்கள்.

**ஒலி**

*சிவராசா சைக்கிளில் வந்துகொண்டிருக்கிறான். சந்தையடியில், வெறியில் இருக்கும் சண்முகமும் மீன் விற்கும் பெண்ணும் இழுபறிபட்டுக்கொண்டு நிற்கிறார்கள்:—*

**மீன்காறி:** இண்டைக்கு மீன்காசை வைக்காட்டால் மானங்கெடுத்துப் போடுவன். எத்தினை நாள் நானும் கேக்கிறது.

**சண்முகம்:** எடியே... என்னோட எதிரிகட்டிக் கொண்டு இந்த ஊருக்குள்ள வியாபாரஞ் செய்துபோடுவியே.
சேமன்ர மகனடி நான்.

**மீன்காறி:** நீ சேமன்ர மகனெண்டா என்ன, எந்தப் பிரபுன்ர மகனெண்டா என்ன...தூ... மானங்கெட்ட உடம்பு வளக்கிற... மீன் வாங்கித் திண்ட கடன்தர லாயக்கில்ல... சேமன்ர மகனாம்...சேமன்...

*சண்முகம் ஆத்திரத்துடன் மீன் கடகத்தை எட்டி உதைத்துவிட்டுப் பிடிக்க வரும் மீன்காரியைத் தள்ளி நிலத்தில் வீழ்த்திவிட்டுக் காலால் உதைக்கப் போகிறான்.*

**சண்முகம்:** கேடுகெட்ட மீன்காறி...என்னைப் பாத்துக் கதைக்கவோ... இந்த ஊர்ப் பக்கம் வருவியே எனிமேல்...சண்முகம் ஆரெண்டதக் காட்டித்தாறன்... இங்க ஒரு படுவா என்ர அனுமதியில்லாம வியாபாரம் செய்யப்படாது.

*சிவராசா சைக்கிளை மரமொன்றில் சாத்திவிட்டு, ஓடிவந்து சண்முகத்தைப் பிடித்தல் :—*

**சிவராசா:** இதென்ன சண்முகண்ண இது... நடுறோட்டில நிண்டு கொண்டு...

**சண்முகம்:** விடடா கையை... ஆரவன்... என்னைப் பிடிக்கிறது...

*சண்முகம் சிவராசாவை நிதானித்துப் பார்த்தல்:—*

**சண்முகம்:** ஓ சிவராசன்... முற்போக்குவாதி... விடடா கைய... பனையேறி... உங்களுக்கெல்லாம் குடுத்த இடந்தானடா இப்ப கண்ட பதினெட்டுச் சாதியும் கதைக்க வெளிக்கிட்டிட்டுது.



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :**

**ஒலி**

**சிவராசா:** சண்முகண்ணை... ஏன் தேவையில்லாத கதையள் கதைக்கிறியள்... மனிசி காசக் கேட்டுது, வாங்கினாத் திருப்பிக் குடுக்கிறதுதானே... அதுக்கேன் வீண்கதை...

**சண்முகம்:** ஓகோ எண்டானாம்... அடி செருப்பால முந்தநாள் பெஞ்ச மழைக்கு நேற்று முளைச்ச புல்லு என்னோடை தலை நிமிந்து நியாயம் கதைக்குது... விடடாகைய...

சண்முகம் சிவராசாவின் கன்னத்தில் அடித்து, காலால் உதைத்தல். சிவராசா தாங்கிக்கொண்டு:—

**சிவராசா:** அண்ணை, எதுக்கும் ஒரு லிமிற் இருக்கு ...மரியாதையா மனிசீன்ர காசைக் குடுத்துப் போடுங்கோ.

**சண்முகம்:** நீ ஆரடா... அதை எனக்குச் சொல்லுறது, பொறுக்கி.

சிவராசாவுக்கு கன்னத்தில் மீண்டும் சண்முகம் அடித்தல்:—

**சண்முகம்:** எட காளான்...என்னை வெருட்டிற... விட்டனெண்டால் பிறங்காலால...

சண்முகம் காலைச்சுழற்றி பிறங்காலை ஓங்குதல். சிவராசா அதைக் காலால் தட்டி விட்டு இருவரும் உருண்டு பிரண்டு சண்டை பிடிக்கிறார்கள்.

சந்தைக்கு வந்தவர்கள் தள்ளி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். விதானையார் சனத்தை விலக்கிக்கொண்டு ஓடி வந்து சிவராசாவைப் பிடிக்கிறார்.—

**விதானை:** டேய் சிவராசா... இதென்ன இது... உனக்கு எப்ப பாத்தாலும் இதே வேலையாப் போச்சுது...

**சண்முகம்:** விதானையார், உவனை உப்பிடியே விடக் கூடாது. பொலிசிலை குடுக்க வேணும்...

**விதானை:** நீ சும்மா இரு சண்முகம்...

**சிவராசா:** பொலிசில இருக்கிறவையெல்லாம் அவற்றை குஞ்சியப்பர்மார் தானே...

**விதானை:** டேடேய் சிவராசா...இதுதானே உன்ரை முந்திரிக்கொட்டைத்தனம் எண்டு சொல்லுறது. நான்தானே அவனைப் பேசாமல் இருக்கச் சொல்றன்... நீ ஏன் வாய்காட்டிற... என்ன விசயம் எண்டு சொல்லு.



படிப்பகம்

www.padippakam.com

காட்சி விளக்கம் :

ஒலி

மீன்காரி: விதானையார், நீங்களும் இந்த அநியாயத்தப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறீங்கள்... இந்த சண்முகம் என்னட்ட மீன் கடன் வாங்கி மூண்டு மாசமாகுது. கேட்டா சண்டித்தனம். சேமன்ர மோனாம். தூ......ரோசங்கெட்ட சென்மம்.

விதானை: இந்தா... ஆருக்கு முன்னால கதைக்கிற தெண்டத யோசிச்சுக் கதை... சரி, நீ மீன் குடுத்தாய், சண்முகம் கடன் வாங்கினான்... இவன் எதுக்கு இதுக்க வந்தவன்.

சிவராசா: விதானையார், நீங்கள் இதில நிண்டிருக்க வேணும்... இவன் செய்த அட்டகாசம். பாவம் மனிசி. கடனைத் தாவெண்டு கேக்க, மனிசியத்தள்ளி விழுத்தி, மீன் கடகத்தை உதைச்சு...

விதானை: அதுதானே... அதைக் கேக்க நானிருக்கிறன்... பொலிஸ் இருக்கு, கோடு இருக்கு, சட்டமிருக்கு... நீ ஆர் தீர்ப்பு வழங்கிறதுக்கு. நீ உன்ர வேலையைப் பார்த்துக்கொண்டு போக வேண்டியது தானே...

சிவராசா: என்ன விதானையார். கண்ணுக்கு முன்னால அநீதி நடக்கிது என்னண்டு பாத்துக்கொண்டு போறது...

விதானை: அப்ப, நான் இந்த விதானை வேலையை விடுறன், நீ பார்.

சிவராசா: அதுக்கில்லை விதானையார்... மனிசின்ர கடன் ஒரு அஞ்சு ரூபா வந்துதில்ல... அதுக்கு எனி உங்கிளிட்ட வந்து சொல்லிப் பொலிசுக்குப்போய், பிறக்கிராசி வைச்சு வழக்காட முடியுமே.

விதானை: கனக்கக் கதையாதை... கொப்பன் சின்னான் இருக்கிற இடம் தெரியாது... உழைப்பாளி... நீ ஊர் சுத்திக்கொண்டு, பிரச்சினையளை வலியத் தலையில போட்டுக்கொண்டு திரி.

சிவ்ராசா: என்ன விதானையார், நான் வேணுமெண்டே....



படிப்பகம்

www.padippakam.com

காட்சி விளக்கம் :

சிவராசாவைத் தனியே கூட்டிப் போதல்.

ஒலி

விதானை: சரி, சதையாதை... இங்க வா...

விதானை: டேய் விசரா... அவன் சேமன்ர மோன்... ஆக்கள் ஒரு மாதிரி. நீ போய் விசர்த் தனமாக கொழுவிறதே... விவரம் தெரியாத பொடியனாயிருக்கிற, எதிரியின்ர பல மறிஞ்சு கொழுவவேணும்...

சிவராசா: எனக்கு எதிரியெண்டு ஒருதரும் இல்லை விதானையார்... பிழையா என்ன நடக்குதோ அதை எதிர்ப்பன். அவ்வளவுதான்.

விதானை: சரி சரி, உனக்கு உலகத்தைப்பற்றிச் சொல்லி விளங்காது. அனுபவத்தில புரிஞ்சு கொள்ளுவாய். இப்ப இதில நில்லாத. ஓடிப்போ... நான் மிச்சத்தைக் கவனிக்கிறன்...

காட்சி முடிவு



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :** | **ஒலி**

காட்சி: 3

இடம்: சிவராசாவின் வீடு.

நேரம்: காலை சுமார் 9 மணி.

**பாத்திரங்கள் :**

செல்லி, சிவராசா.

*சிவராசாவின் முகத்தில் கண்டல்காயங்களுடன் சைக்கிளில் வந்திறங்க வீட்டுப்படலையைத் திறந்து கொண்டு சைக்கிளை உருட்டிக் கொண்டு வளவுக்குள் போகிறான். தாய் செல்லி வீட்டு வாசலில் இருந்து அரிசி புடைத்துக்கொண்டிருக்கிறாள். சிவராசாவைக் கண்டதும் பதைத்து:—*

செல்லி: ஐயோ... இதென்ன மோனை, ஏன் உன்ரை முகமெல்லாம் உப்பிடி வீங்கிப் போயிருக்கு.

*சைக்கிளை ஸ்டான்ட் போட்டு திறுத்தியபடி :—*

சிவராசா: அதொண்டுமில்லையணை, சும்மா...

*செல்லி சுளகை வைத்துவிட்டு எழுந்து சிவராசாவை நோக்கி வந்துகொண்டே:—*

செல்லி: இதென்ன ராசா ஒண்டுமில்லையென்றாய்... முகம் உப்பிடிக் கண்டிப்போய் இருக்குது... என்ன நடந்தது... ஐயோ எனக்கு நெஞ்செல்லாம் பதறுது.

*சிவராசா வீட்டுக்குள் போய்க்கொண்டே :—*

சிவராசா: சும்மா கத்தாதையணை, அது ஒண்டுமில்லை, சைக்கிளாலை விழுந்திட்டன்.

*செல்லி பின்னால் வந்துகொண்டே :—*

செல்லி: நான் சொன்னனான்... உனக்கு உந்த சைக்கிள் ஓட்டம் வேண்டாமெண்டு... பாத்தியே உப்பிடி விழுந்து முறிஞ்சு போய் வந்திருக்கிறியே... ஏதும் பாடுமக்டாப் போயிருந்தா நான் தாங்குவனே...

*சிவராசா உள் வீட்டுக்குள் போய் சுவரில் தொங்கும் சிறு கண்ணாடியில் முகத்தைப் பார்க்கிறான் :—*

சிவராசா: எணை... ஒரு சீலேலை கொஞ்சம் தண்ணி தோச்சுக் கொண்டா...

*பக்கத்தில் சுவரில் லெனின், மாசேதுங், பாரதியார் படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன். பக்கத்தில் ஒரு மேசையில் புத்தகங்கள் அடுக்கியிருக்கின்றன. கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருக்கும் சிவராசாவின் பின்னால் தாய் வருவது தெரிகிறது:—*



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் : | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | இஞ்ச கொண்டாண... |
| | செல்லி: | விடு, நான் துடைச்சு விடுறன்... |
| காயங்களை ஈரத்துணியால் துடைத்துக்கொண்டே :— | செல்லி: | இதென்னண்டு மோனை உப்பிடி விழுந்தனி. இஞ்சபார் சிராச்சுப் போட்டுது... உவ அற்றண்டர் பறுதெத்திட்ட போனியெண்டா மருந்து போட்டுவிடுவா... |
| | சிவராசா: | அதெல்லாம் தேவையில்லையணை... அது தன்னில மாறிடும். இப்ப சாப்பாட்டைத் தா, பசிக்குது... |
| | செல்லி: | கெதியாச் சாப்பிட்டுட்டு சங்கரலிங்கமையா வீட்டுப் போத்திலுகளைக் கொண்டேக் குடு மோனே.. ஐயா வாத்து வைச்சிட்டு சொல்லிப்போட்டுப் போகுது... பிறகு செண்டுபோச் செண்டா வந்து சத்தம் போடும். |
| | சிவராசா: | அப்ப நீ சாப்பாட்டைப் போட்டணை... நான் கொண்டோடிப்போய்க் குடுத்திட்டு ஓடியாறன். |
| | செல்லி: | பிறகும் சைக்கிலிலையே போப்போறாய். |
| | சிவராசா: | சும்மா இரணை... |

காட்சி முடிவு



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :** | **ஒலி**

காட்சி : 4

இடம் : சங்கரலிங்கம் வீட்டுக்குச் செல்லும் ஒழுங்கை.

நேரம் : காலை சுமார் 9.30 மணி

**பாத்திரங்கள்:**

சிவராசா, சகுந்தலா,

சங்கரலிங்கம், அருணகிரி.

சகுந்தலா, கையில் புத்தகத்துடன் ஒழுங்கையில் வந்துகொண்டிருக்கிறாள். பின்னால் சைக்கிள் காண்டிலில் கள்ளுப் போத்தல் பாய்க்கை தொங்கவிட்டபடி சைக்கிளில் வந்து கொண்டிருந்த சிவராசா சகுந்தலாவுக்குப் பின்னால் வெகு அருகில் வந்து பெல்லை அடிக்கிறான். சகுந்தலா திடுக்குற்று வேலிக் கரையோரத்துக்குத் தாவி, சிவராசாவைப் பார்த்து:-

சகுந்தலா: நீங்களே...

சிவராசா சிரித்தபடி (சகுந்தலாவுக்குப்) பக்கத்தில சைக்கிளை மெதுவாக ஓட்டிவரல்) :—

சிவராசா: நல்லாப் பயந்திட்டீங்களே... இப்பதான் டியுஷனாலை வாறீங்களாக்கும்...

சகுந்தலா சிவராசாவின் முகத்திலிருக்கும் காயங்களைப் பார்த்துவிட்டு:—

சகுந்தலா: என்ன, சண்முகத்திட்ட நல்லா வாங்கினீங்களாம்...

சிவராசா: ஆர் சொன்னது உமக்கு......

குறும்பாகச் சிரித்தபடி:—

சகுந்தலா: யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டில பேப்பர் விக்கிற பொடியன் உந்த நியூசைச் சொல்லித்தான் பேப்பர் விக்கிறான்...

சிவராசா: பகிடியை விட்டிட்டுச் சொல்லும், ஆர் உமக்கு சொன்னது ..

சகுந்தலா: உதில சந்தையடியில பஸ்ஸால இறங்கி வரேக்க சனம் கூட்டம் கூட்டமா நிண்டு, சண்முகம் ... சிவராசன் ... அடிபிடி, விதானை எண்டெல்லாம் காதில விழுந்தது இப்ப உங்கட முகத்தைப் பாத்ததும் எல்லாம் விளங்கீட்டுது... எப்பிடி நல்ல அடியே...

சிவராசா: ஆருக்கு... அவருக்குத்தான் குடுத்தன்... போன வருஷம் அவற்றை மச்சான் ஆறு முகத்துக்கு... இந்த வருஷம் அவருக்கு ..

உரையாடலின்போது இடையிடையே சகுந்தலா கஷ்டப்பட்டுக் காற்றை உள்ளே இழுத்துச் சுவாசிக்கிறாள்.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சகுந்தலா. | கவனமா இருங்கோ... |
| | சிவராசா. | ஏன் சகுந்தலா, நான் செய்தது பிழையே... |
| | சகுந்தலா. | பிழையெண்டு ஆர் சொன்னது... அவை தரவளிக்குக் குடுக்கத்தான் வேணும்... எண்டாலும் அவங்கள் ஒரு மாதிரியான ஆக்கள்தானே... சும்மா தனைக்கிக்கொண்டே இருப்பாங்கள்.. |
| | சிவராசா. | அவேன்றை சண்டித்தனம் அவையோடேல்லோ... |
| | சகுந்தலா. | அவங்களுக்கு அடிபிடி சண்டைதான் பொழுதுபோக்கு... எனி நீங்களும் அவங்களோட சரிக்குச் சரி திரியப் போறீங்களே... எதுக்கும் கண்டபடி தனியத் திரியாதேங்கோ... இப்ப எங்க பயணம். |
| | சிவராசா. | உங்கட அப்பருக்குத்தான் கூல் ட்ரிங் கொண்டு வாறன்... |
| | சகுந்தலா. | ஏதோ பாரதிவிழா விஷயமாக கதைக்கவேணுமெண்டு ராத்திரி அண்ணை சொன்னார், எண்டவரே... |
| | சிவராசா. | இல்லை, அருணகிரி வீட்டில நிக்குதே... |
| | சகுந்தலா. | விடிய ஐஞ்சு மணிக்கு டவுணுக்குப் போய் இப்பதான் வாறன்... என்னைக் கேட்டா... |
| சகுந்தலா மூச்சுவிடல் :— | சிவராசா. | ஏன் ஒரு மாதிரிக் கஷ்டப்பட்டு மூச்சு விடுகிறீர்... |
| | சகுந்தலா. | என்னெண்டு தெரியேல்லை. கொஞ்ச நாளா மூச்சுவிடப் பெரிய கஷ்டமாயிருக்கு... |
| | சிவராசா. | அரும் டொக்டரிட்டக் காட்டேல்லையே |
| | சகுந்தலா. | சீ... நான் வீட்டிலகூடச் சொல்லேல்ல... பிறகு ஆஸ்பத்திரி டொக்டர் எண்டு திரிய படிப்புக் குழம்பிப்போம்... என்னும் ஆறு மாதந்தானே கிடக்கு சோதினைக்கு... முடியட்டும் பாப்பம்... |
| | சிவராசா. | அது உந்த டியூஷன் அது இதெண்டு திரிஞ்சு பெலவீனமாயிருக்கும். நல்லாச் சாப்பிடும், சரியாப் போயிடும்.. இந்த முறை யூனிவர்சிட்டி என்ரர் பண்ணுவீரே... |
| | சகுந்தலா. | பாப்பம்... |
| | சிவராசா. | என்னாலதான் முடியாமப் போச்சு... |
| | சகுந்தலா. | அது உங்கட கொழுப்பல்லோ... அங்க வீட்டில ஒருதர் இருக்கிறார் அண்ணைப் பிள்ளையர். ஐயா நெடுகப் பேசின படி... சும்மா பாரதி விழா, நாடகம் எண்டு திரிஞ்சதுதான் மிச்சமெண்டு... |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சங்கரலிங்கம் வீட்டுக் கொல்லைப் புறத்துக்குப் போகும் படலையால் சிவராசா போய்க் கொண்டு:- | சிவராசா: | நான் இப்பிடிப் பின் பக்கமா கொண்டு போறன்... நீர் ஒருக்கா அருணகிரிய வரச் சொல்லிவிடும்... |
| சகுந்தலா முன் கேற்றால் வீட்டுக்குப் போகிறாள். வெளி விறாந்தையில் சாய்வு நாற்காலியில் சங்கரலிங்கம் படுத்திருக்கிறார். சங்கரலிங்கம் கேற் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறார். | சங்கரலிங்கம்: | பிள்ளை ... டியூஷன் முடிஞ்சுதே ... எத்தினை மணி...? |
| சகுந்தலா கைக்கடிகாரத்தை பார்த்து:- | சகுந்தலா: | இப்ப 9.35 ஆகுதையா... அண்ணை நிக்கிறாரே... |
| | சங்கரலிங்கம்: | அங்க உள்ளுக்கை இருக்கிறான் போல... உங்கின வழி தெருவில சின்னானைக் கண்டியே பிள்ளை... நேரமும் பத்தாகுது... ஆளை இன்னும் காணேல்ல... |
| சகுந்தலா விறாந்தையோடு இருக்கும் அறைக்குள் சென்று கொண்டே | சகுந்தலா: | உங்க ராசன் கொண்டுவந்து, பின்னால கொண்டு போகுதையா ... அண்ணை... |
| கூப்பிட்டுக் கொண்டே அறைக்குள் போதல். அருணகிரி மேசையில் ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டு இருக்கிறான். | சகுந்தலா: | அண்ணை, ஏதோ பாரதி விழா விஷயமா ராசனோடை கதைக்க வேணுமெண்டாய் உங்க ஆள் வந்து நிக்குது, உன்னை வரட்டாம் ... |
| சகுந்தலா மேசையில் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு நிற்றல். அருணகிரி சகுந்தலாவைப் பார்த்து | அருணகிரி: | எங்க ஆள்...... |
| | சகுந்தலா: | ஐயாவின்ர கள்ளுக் கொண்டு வந்தது... பின் வளவுக்க போகுது, உன்னை வரட்டாம். சண்முகத்தோடு அடிப்பட்டுக் காயங்களோடு ஆள் வந்து நிக்குது... |
| அருணகிரி சிறிது பரப்பரப்புடன் எழும்பிப் போதல். | அருணகிரி: | சீ............ |



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்** **ஒலி**

**காட்சி 5**

**இடம்:** *சிவராசாவின் வீடு ,*
**நேரம்:** *காலை சுமார் 11 மணி*

**பாத்திரங்கள்**
சின்னான், செல்லி, சிவராசா.

சின்னான் படலையைத் திறந்து கொண்டு கையில் வெறும் முட்டிகள் சகிதம் வரும் போதே பலமாக ஏசிக் கொண்டு வரல்:-

**சின்னான்:** பாத்தியே ... உன்ர மோன் செய்த வேலைய... எனி என்னால ஊரில தலை காட்ட ஏலுமே... நிம்மதியாச் சீவிக்க ஏலுமே... போயும் போயும் அவங்க ளோடயல்லே கொழுவியிருக்கிறான் ...

செல்லி உள்ளேயிருந்து வரல்.

**செல்லி:** என்னப்பா... என்ன நடந்தது...

**சின்னான்:** என்ன நடந்ததோ ... உன்ர மோன் செதிருக்கிற வேலையைப் பாத்தியே, எங்க போட்டான்... என்னும் வரேல் லையே?

**செல்லி:** அவன் சங்கரலிங்கமையா வீட்டுக் கள்ளு கொண்டு போட்டான் ,... இப்ப என்ன நடந்து போச்சு ... பிள்ளை பாவம், சைக்கிளால விழுந்து மூஞ்சையெல்லாம் கண்டிப் போய் வந்தது ... இப்ப நீங்கள் சொன்ன தெண்டாப்போல கள்ளுப்போத்திலை குடுத்திட்டு வாறன் எண்டு ஓடுது... என்னும் சாப்பிடவுமில்லை......

சின்னான் பத்திக்குப் போய் அணி யங்களைக் கழற்றி வைத்தல்.

வெளியே வந்து கொண்டே:-

**சின்னான்:** எடி விசரி... விட்டனெண்டாப் பிறங் கையால. அவர் சைக்கிளால விழுந்த வராம் ... இவ கேட்டுக் கொண்டு நின்டிருக்கிறா ...மூஞ்சையப் பொத்திக் குடுத்திருக்கிறாங்கள் போல...சேமன்ர மோன் சண்முகத்தோட சந்தையடி யிலை அடிப்பட்டானாம்... போன வரி யம் சண்முகத்தின்ர மச்சான் ஆறு முகத்தோட சண்டை... எக்கணம் அவுங்கள் சேந்து ஆளை வெட்டிச் சரிக்கப் போறாங்கள்.

**செல்லி:** ஐயோ ............



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சிவராசா பின்னால் வந்து கொண்டே:- | சிவராசா: | நானென்ன ஐயா வலியவே சண்டைக்குப் போறன்... அவங்கள் செய்யிற அட்டூழியத்தைப் பார்த்துக் கொண்டு சும்மா போறதெண்டா நான் ஒரு மரக்கட்டையா இருக்க வேணும்... |
| | சின்னான்: | டேய்... அவங்கள் என்ன செய்தாலும் உனக்கென்னடா நீ என்ன பெரிய கவுண்மேந்து ஏச்சண்ட்டுப் பிரபுவே, உதெல்லாம் போய் விசாரிக்க... |
| | செல்வி: | அதுதானே மோனே... நீ உன்ரை பாட்டில போறதுக்கு ஏன் அவங்களோட எல்லாம் போய் முண்டுறாய்... எக்கணம் சங்கரலிங்கம் ஐயா கேட்டாலும் உதைத்தான் சொல்லுவார். அந்தாள் வெள்ளாம் மனிசனெண்டாலும் எவ்வளவு நல்ல ஆள். உன்னையும் தன்ர பிள்ளை மாதிரியல்லே நினைக்குது. |
| | சிவராசா: | அநீதி நடக்கேக்கை அதைத் தட்டிக் கேக்காட்டா நாங்கள் மனிசராயிருந்து வேலையில்லையணை... |
| | சின்னான்: | விட்டனெண்டாப் பிறங்கையால தெரியுமே... நீ உந்தக் கண்டகண்ட புத்தகங்களையெல்லாம் படிச்சுப்போட்டு ஏதோ சினிமாவில வாறவங்கள் மாதிரி நிக்கிற ... உனக்கு அவங்களால நாளைக் கொண்டு நடந்திட்டா நாங்கள் ஆரைப் போய்க் கேக்கிறது. |
| | சிவராசா: | நீங்கள் உப்பிடிப் பயப்பிடப் பயப்பிடத்தான் அவங்களும் ஆகத் தலைக்குமேல ஏறுறது. |
| | சின்னான்: | பொத்தடா வாயை... உனக்கு இப்ப வாய் கூடுது... |
| | செல்வி: | சரி சரி ... இப்ப என்ன, எல்லாம் முடிஞ்சுது... எனி ஒரு மாதிரிச் சங்கரலிங்கமையாட்டச் சொல்லிப் பாப்பம். ஏதும் வழிச் சொல்லுவார்... வாங்கோ சாப்பிட, ரெண்டு பேருக்கும் பசி... |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | | ஒலி |
|---|---|---|
| காட்சி 6<br>இடம்: கிராமத்து வீதி<br>நேரம்: காலை 9.00 மணி | | |
| சில நாட்களின் பின் ஏ-40 கார் ஒன்றில் இரண்டு லவுட்ஸ்பீக்கர் கட்டி வருகிறது. அதற்குள் சிவராசா, அருணகிரி ஆகியோர் இருக்கிறார்கள். கார் ஒரு இடத்தில் நிற்பாட்டப்பட்டு, ஒரு சினிமா பாடலின் ஒரு பகுதி போடப்படுகிறது. | | வாகனங்கள் மற்றும் தெருச்சந்தடி களைக் குறிக்கும் ஒலிகள்<br><br>சங்கே முழங்கு என்ற பாடலின் வரிகள் |
| பாரதி விழா பற்றிய அறிவித்தல் செய்யப்படுகிறது. காரின்பின்னால் ஓடி வந்த சிறுவர்கள் காரைச் சூழ்ந்து கொண்டு நோட்டீஸ் கேட்கிறார்கள். | | (சிறுவர்கள் நோட்டீஸ் கேட்டுச் சண்டையிடும் சத்தங்கள் பின்னணியில்) |
| | சிவராசா: | அபன்னார்ந்த ரசிகப் பெருமக்களே, வணக்கம், பாவலன் பாரதிக்கு விழா. காங்கேசன்துறை இளந்தம்ழர் மன்றத்தினர் எடுக்கும் பெருவிழா. மறன்க் காப்பாளர் சங்கரலிங்கம் அவர்கள் தலைமையில் இன்று மாலை 6.30 மணிக்கு, இரட்டைக் கால் பூவரசு மைதானத்தில் இடம் பெறும். பட்டி மன்றம், கவியரங்கு முதலிய சுவையான நிகழ்ச்சிகளுடன் மன்ற இளைஞர்கள் பெருமையுடன் அளிக்கும் ''அம்பிகாபதி அமராவதி'' நாடகமும் இடம் பெறும். அனைவரும் திரண்டு வந்து ஆதரவு தருக. தாய்குலத்துக்கு தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. வணக்கம்.<br><br>(இடைக்கிடையே சிறுவர்கள் நோட்டீஸ் நோட்டீஸ் என்று கத்தும் சத்தமும் காருக்குள் இருப்பவர்கள் அவர்களை விரட்டும் சத்தமும் ஒலிபெருக்கியினூடே கேட்கிறது.) |
| அறிவிப்பு முடிந்து பாடலுடன் கார் புறப்பட்டுச் செல்கிறது. சிறுவர்கள் பின்னால் ஓடுகிறார்கள். | | சங்கே முழங்கு (பாடல்) |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| காட்சி 7<br><br>இடம்: சங்கரலிங்கத்தின் வீடு<br>நேரம்: மாலை சுமார் 5 மணி<br><br>**பாத்திரங்கள்**<br>சங்கரலிங்கம், சண்முகம், சகுந்தலா, சண்முகத்தின் மைத்துனர் ஆறுமுகம்.<br><br>சகுந்தலா வீட்டு விறாந்தையில் தூணோடு சாய்ந்து கொண்டு இருந்து படித்துக் கொண்டிருததல். | | |
| கேற்றைத் திறந்து கொண்டு சண்முகமும் ஆறுமுகமும் வருகிறார்கள். | சண்முகம்: | பிள்ளை, ஐயா இருக்கிறாரே? .. |
| சகுந்தலா புத்தகங்களைப் பொறுக்கிக் கொண்டு எழுந்து கொண்டே:- | சகுந்தலா: | ஓம், வாருங்கோ... ஐயா (கூப்பிட்டு) உப்பிடிக் கதிரையிலை இருங்கோ .. ஐயா .. (கூப்பிட்டு) இங்க சண்முகம் மாமா வந்திருக்கிறார். |
| சகுந்தலா பக்கத்து அறைக்குப் போதல், சங்கரலிங்கம் உள்ளே இருந்து சண்முகத்தை உற்றுப் பார்த்தபடி வருகிறார். | சண்முகம்: | என்ன ஐயா பாக்கிறியள் ... நான் சண்முகம்... |
| | சங்கரலிங்கம்: | அட... எங்கட சேமன்ர மோன். |
| ஆறுமுகத்தை உற்றுப் பார்த்து:- | சங்கரலிங்கம்: | இவர் ஆர் தம்பி, விளங்குதில்லை .. |
| | சண்முகம்: | இது ஆறுமுகம்... நம்மட மனிசிக்காறீன்ரை சகோதரன். |
| கதிரையில் அமர்ந்தபடி:- | சங்கரலிங்கம்: | அட ஆறுமுகம் .. என்ன மச்சானும் மச்சானும் சோடியா வெளிக்கிட்டிட்டியள்... ஐயா பாடு எப்பிடி நானும் கண்டு கனகாலம். |
| | சண்முகம்: | அவரும் இப்ப வீட்டோடதான் ... இந்தக் கைநடுக்கம் தொடங்கினாப் போல ஒரு இடமும் வெளிக்கிடுறதில்லை... |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சங்கரலிங்கம்: | நான் இந்தக் கிழமையிலை ஒரு நாளைக்கு அந்தப் பக்கம் வாற னெண்டு சொல்லு இப்ப என்ன விச யம், இருந்தாப்போல இந்தப் பக்கம் .. |
| | சண்முகம்: | அதை எப்பிடி ஐயாவோட தொடங் கிறதெண்டு தெரியேல்ல... |
| | சங்கரலிங்கம்: | ஏதும் பாரதூரமாண விசயமே? .. |
| | ஆறுமுகம்: | பெரிய விசயமென்டில்லை இல்லைடக்கு உவன் சின்னான்ரை பொடியன் ஆக்கள் வைக்கிற பாரதி விழாவுக்கு ஐயா தான் தலைவரெண்டு கேள்வி... |
| | சங்கரலிங்கம்: | ஓ அந்த மன்றத்திலயிருக்கிற பெடி யள் எல்லாம் முந்தி நான் படிப்பிக் கேக்கை என்னட்டைப் படிச்சவங்கள். என்னில நல்ல சுவாசம் கேட்டாங் கள்... பின்னைச் சரியெண்டிட்டன்... |
| | சண்முகம்: | அது சரி ஐயா, உங்களுக்குத் தெரி யுந்தானே சின்னான்ர பொடியன் சிவராசன், போனமுறை தோட்டத் துக்க வந்த பறுவதத்தின்ர மாட்டை எறிஞ்சு முறிச்ச விசயத்தில ஆறுமுகத் தோட கொழுவிப் பிறகு ஐயா தலை யிட்டதால பேசாமல் இருந்திட்டம் .. இப்ப என்னிலையே கைவைக்கிற அள வுக்கு வந்திட்டார் பொடிப்பிள்ளை. ஐயா கேள்விப்பட்டிருப்பியள் எண்டு நினைக்கிறன், போனகிழமை சந் தேக்கை நடந்த விசயம் |
| | சங்கரலிங்கம்: | அது பார் சண்முகம், அவன் நல்ல பெடியன்.. ஏதும் அநீதியாய் நடக்கு தெண்டு தெரிஞ்சால் விடக்கூடா தெண்டு ஒரு குணம் .. |
| | ஆறுமுகம்: | ஐயா சொல்லுறதப் பார்த்தா, நாங் கள் ஏதோ அநீதியா நடக்கிற மெண்டல்லோ... |
| | சங்கரலிங்கம்: | இதுதானே உங்களுக்கு விளக்கம் குறைவெண்டிறது ... அநீதி எண்டு அவன் நினைக்கிறதை நயல்லோ சொல் லுறன் எல்லாம் போகப்போகச் சரியாய்ப் போயிடும். |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சண்முகம்: | எல்லாம் சரியாப் போகமுன்னம் எங்கட மானத்தை அவன் கெடுத்துப் போடுவான் அதுதான் ஐயா அண்டைக்குப் பிறகு எங்கட ஆக்கள் கொதிச்சுக் கொண்டு நிக்கிறாங்கள்... பாரதி விழாவிலை என்ன நடக்குமோ தெரியாது. எனி உங்கட பிள்ளை அருணகிரி அவங்களோடு சேந்து கொண்டு திரியிறது உங்களுக்குப் பரிய மானக்கேடு .. |
| | ஆறுமுகம்: | அருணகிரியிட்டச் சொல்லுங்கோ ஐயா, அவங்கட சகவாசம் வேண்டாமெண்டு |
| சகுந்தலா அறைக்குள் இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறாள். | சண்முகம்: | எனிப் பிள்ளை சகுந்தலாவும் அங்கினை போகவரேக்கை றோட்டில பஸ்ராண்டில நிண்டு ஏதும் கதைக்கப் பாப்பார். பிறகு சீர் கேடாய்ப் போம் |
| | சங்கரலிங்கம்: | உதென்ன வண் கதை கதைக்கிறாய் சண்முகம் சிவராசன்ர தாய் செல்வி, அவன் ரெண்டுமாதக் குழந்தையாயிருக்கேக்கயே கொண்டு வந்து பின் வளவு மாமரத்தில ஏணை கட்டிக் குழந்தையை போட்டிட்டுக் கிடுகு பின்னுவாள். அப்பிடி அவன் எங்கட பிள்ளையளோடை விளையாடி வளர்ந்தவன. உங்கட பேச்சைக் கேட்டுக் கொண்டு அவனோடை கதையாதை எண்டு என்ரை பிள்ளைகளைச் சொல்லேலுமே. |
| | சண்முகம்: | ஏதோ... ஐயா, எங்கட பொடியள் நிக்கிற நிலையைப் பாத்திட்டு எதுக்கும் எங்கட ஆள், அறிஞ்ச நீங்கள் சொல்லி வைப்பம் எண் மனம் கேக்காமல் வந்தம். ஏதும் ஏறுமாறா நடந்த பிறகு எங்களை நீங்கள் குறை சொல்லக் கூடாது. சரி, வரப் போறம் .. |
| | சங்கரலிங்கம்: | எனக்கும் உங்கட மனநிலை விளங்குது தம்பியவை ... எதுக்கும் கொஞ்சம் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சண்முகமும் ஆறுமுகமும் போவதற்கு எழும்புதல். | | பொறுமையாயிருந்து எல்லாத்தையும் வழிக்குக் கொண்டு வருவம் .. எங்கு எழும்பிட்டியள், இருங்கோ ... சகுந்தலா... |
| சகுந்தலா அறை வாசலில் வந்து நிற்றல்:- | சகுந்தலா: | என்ன ஐயா... |
| | சங்கரலிங்கம்: | மாமாவைக்கு ஏதும் குடிக்கக் கொண்டா பிள்ளை .. |
| சகுந்தலா அவர்களுக்குத் தெரியாமல் முகத்தை நெளித்துப் பழிம்புக் காட்டி விட்டு உள்ளே போதல். | சண்முகம்: | வேண்டாமையா... இப்பத்தான் குடிச்சிட்டு வாறம் வேண்டாம்பிள்ளை, நாங்கள் வாறம். |
| | ஆறுமுகம்: | ஐய, எதுக்கும் வடிவா யோசியுங்கோ... |
| | சங்கரலிங்கம்: | ஓம் ஓம் நான் யோசிக்கிறன். போட்டு வாங்கோ... |
| சங்கரலிங்கம் பார்த்துக் கொண்டு நிற்கிறார். சண்முகமும் ஆறுமுகமும் விறாந்தைப் படியால் இறங்குகிறார்கள். | | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்** | **ஒலி**

காட்சி **8**

**இடம்:** சிவராசாவின் வீடு

நேரம்: காலை சுமார் 9.00 மணி

**பாத்திரங்கள்**

சின்னான், செல்லி, சிவகுரு.

சின்னான் வீட்டு முற்றத்தில் இருந்து திட்டுக் கட்டையில் கத்தி தீட்டிக் கொண்டு இருக்கிறான். சிவகுரு படலையைத் திறந்து உள்ளே வரல்.

**சின்னான்:** உதார், புதாள் ஒண்டு வருகுது ...

செல்லி வீட்டுக்குள் இருந்து ஒரு கையில் ஒரு கோப்பையில் தேநீரும் மறு கையில் பனங்கட்டியும் கொண்டு வெளியே வந்து கொண்டு சிவகுருவைப் பார்த்தவாறே:-

**செல்லி:** இதென்ன, நல்ல மாறாட்டந்தான்... இது எங்கட சி குரு... எப்ப தம்பி கொழும்பால வந்தனி...

தேநீரையும் பனங்கட்டியையும் சின்னானிடம் கொடுத்தபடியே:-

**செல்லி:** எப்பன் தண்ணி குடிக்கிறியே...

**சிவகுரு:** வேண்டாமண, இப்பதான் சாப்பிட்டிட்டு வாறன்.

சின்னான் அவற்றை வாங்கியபடியே:-

**சின்னான்:** எட எங்கட ஆள்வாக்குஞ்சீன்ர சிவ குருவே .. ஆள் நல்லா வயக்கெட்டு அடையாளம் தெரியேல்ல...

சிவகுரு பக்கத்தில் இருந்த கல்லில் குந்திக் கொண்டே:-

**சிவகுரு:** சும்மா சொல்லுறியள்... நான் இங்க வ ு டி வைச்சுக் காச்சட்டை மாதத் துக்கு மாதும் தைக்க வேண்டிக் கிடக்குது ..

அது சா, எப்பிடி உங்கட பாடுகள்...

செல்லியும் சின்னானுக்குப் பக்கத்தில் குந்திக் கொண்டே:-

**செல்லி:** ஒரு மாதிரிப் போகுது .. இப்ப என்ன விசயம் கொழும்பால வந்தது...

**சிவகுரு:** ஒண்டுமில்லை ... எங்கட மன்றப் பாரதி விழா. ராசன் க யிதம்



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | போட்டிருந்தான், இந்த முறை கட்டாயம் வரச்சொல்லி. நானும் கொழும்புக்குப் போய் மூண்டு வரிசமாச்சு ரண்டுமுறைதான் ஊர்ப்பக்கம் வந்திருக்கிறன்... பின்ன, இதைச் சாட்டா வைச்சுக் கொண்டு ஒரு மாதிரி லீவெடுத்துக் கொண்டு, நேற்றுப் பி னேரம் மெயிலேறிக் காலமை வந்து சேர்ந்தன். |
| | சின்னான்: | தம்பி ஏதோ காரோடுறதா ..., ஆள் வாக்குஞ்சி சொன்னது... |
| | சிவகுரு: | ஓ... முதலாளிக்குப் பல பிஸ்னசுகள்... பெரிய ஒரு நெசவுசாலை ... இப்ப மின்சார நெசவாலை வைச்சிருக்கிறார்... சரியான சனம் வேலை செய்யிது ... நான் அவற்றை கார் மட்டும் ஓடுறது. |
| | செல்லி: | அங்க சம்பளம் ஞாயமாத் தருவினமாக்கும்... |
| | சிவகுரு: | ஓ... பரவாயில்லை... எங்கட ராசன் போட்டானே... |
| | சின்னான்: | அவனை இண்டைக்குப் பிடிக்கேலுமே. |
| எழுந்து கொண்டே:- | சிவகுரு: | அப்ப நான் வாறன் ... கிறவுண்ட் பக்கம் போனால் பொடியள் மேடை போடுவாங்கள் ... கூடமாட உதவி செய்யலாம்... நான் ஆறுதலா ஒரு நாளைக்கு வாறன்... |
| சிவகுரு போதல்:- | | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

காட்சி விளக்கம்

காட்சி 9

இடம்: பாரதி விழா நடைபெறும் மைதானம்

நேரம்: காலை சுமார் 7 மணி

**பாத்திரங்கள்**

சிவராசா, அருணகிரி, சகுந்தலா, சிவகுரு, சங்கரலிங்கம், சண்முகம், ஆறுமுகம், இளைஞர்கள், சில பிரமுகர்கள், விழாவுக்கு வந்திருக்கும் பொது சனங்கள், சண்முகத்தின் அடியாட்கள்.

1. மேடையின் முகப்பில் ''காங்கேசன்துறை இளந் தமிழர் மன்றத்தினரின் பாரதி விழா'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. பாரதியார் படம் ஒன்று மாலையணிவித்துத் தொங்குகிறது. திரை மூடப்பட்டுள்ளது. அறிவிப்பு இடம் பெறுகிறது:-

2. மேடையின் முன்னே சங்கரலிங்கம், சகுந்தலா உட்பட 4,5 பிரமுகர்கள் கதிரையில் உட்கார்ந்திருக்கிறார்கள். நிலத்தில் நடுவில் கயிறு கட்டி ஒரு பக்கம் பெண்களும், மறு பக்கம் ஆண்களும் இருக்கிறார்கள்.

3. சண்முகமும் ஆறுமுகமும் இன்னும் சில அடியாட்களும் கூட்டத்திடையே பரவலாக இருந்து கண்களால் சைகை காட்டுகிறார்கள்.

4. உட்பக்க மேடையில் நடிகர்கள் ஒப்பனையுடன் பரப்பரப்புடன் தயாராக நிற்கிறார்கள்.

5. சிவகுருவும் இன்னும் சில இளைஞர்களும் சண்முகம் ஆட்களைக் கவனித்த படியே சனத்தை அடக்குகிறார்கள்.

ஒலி

அறிவிப்பாளர்: அடுத்தது நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் கங்கேசன்துறை இளந் தமிழர் மன்றத்தினரின் மற்றுமொரு வெற்றிப் படைப்பு. அழியாத காதல் காவியம் ''அம்பிகாபதி அமராவதி'' (சபையோரின் விசில் சத்தம், கை தட்டல்) அம்பிகாபதியாக எஸ். சிவராசா, சோழ மன்னனாக எஸ். அருணகிரி, கம்பராக எம். பூலோகசிங்கம், அமராவதியாக ஆர். யோகலிங்கம், கதை வசனம் டைரக்ஷன் எஸ். சிவராசா. ''அம்பிகாபதி அமராவதி'' (மீண்டும் சபையோரின் விசில், கரகோஷம்) ஹார்மோனிய இசை; கரகோஷம்.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| 6. கடைசி அறிவிப்புடன் திரை மெல்ல விலகுகிறது. மேடையில் அம்பிகாபதியும் அமராவதியும் தோன்றுகிறார்கள். பாடல் காட்சி. | பாடல் - 1 அம்பிகாபதி தான் அமராவதி மேல் கொண்டுள்ள உண்மைக் காதலைக் கூறி ஆனால் நடைமுறையில் சாத்தியமாகாமல் இடையே இருக்கும் அந்தஸ்து பேதத்தைக் குறித்துப் பாட அமராவதி, என்னதான் தடைகள் குறுக்கே நின்றாலும் தங்களின் உண்மைக் காதலுக்கு அழிவில்லை என்று பாடுவது போல் அமைந்த பாடல். (மெல்லிய சோகம் இழையோடும் இசை) |
| கண்கொட்டாது அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் சகுந்தலாவின் கண்களில் இருந்து உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் பெருகுகிறது. | |
| திடீரென்று அம்பிகாபதியாக நடித்துக் கொண்டிருக்கும் சிவராசாவின் தலையில் கல்லொன்று வந்து விழுகிறது. தொடர்ந்து சண்முகம் குழுவினருக்கும் சிவராசா குழுவினருக்கும் இடையில் சண்டை இடம் பெறுகிறது; சனங்கள் அல்லோலகல்லோலப்பட்டு கலைந்து ஓடுகிறார்கள். | சனங்களின் கூக்குரல். |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| **காட்சி 10**<br>இடம்: சிவராசாவின் வீடு<br>நேரம்: காலை சுமார் 9 மணி | | |
| **பாத்திரங்கள்**<br>கிராமத்து இளைஞர்கள், சிவராசா, சின்னான், சங்கரலிங்கம், சிவகுரு, அருணகிரி, விதானையார், செல்லி. | | |
| சிவராசாவின் வீட்டுக்கு முன்னால் சில இளைஞர்கள் கட்டுப் போட்ட சிறு சிறு காயங்களுடன் ஆங்காங்கே குழுமி யிருந்து கதைத்துக் கொண்டு நிற்கி றார்கள். சின்னான் பின் பக்கத்தி லிருந்து கள்ளு முட்டிகளுடன் வரு கிறான். | சின்னான்: | பாத்தியளே தம்பியவை... அவர் ஒரு நர் ஊர்த்துளவாரம் பாத்து உழைச் சுக் கொண்டு வந்திருக்கிறதை... எனி யெண்டாலும் உதுகளை விட்டுப் போட்டுப் போய் தாய்தேப்பனுக்கு ஏதும் பிரயோசனமானதைச் செய் யுங்கோ. |
| உள்வீட்டுக்குள் தலையில் கட்டுடன் சிவராசா பாயில் படுத்திருக்கிறான். பக்கத்தில் சிவகுரு இருக்கிறான். | சிவகுரு: | கொப்பருக்கென்னும் கோவம் அடங் கேல்ல. |
| செல்லி குசினிக்குள் இருந்து:- | செல்லி: | கடவுளே, பரநாசமாய்ப் போவாங்கள் என்ர பிள்ளைக்கு இப்படிச் செய்த வங்களுக்கு முருகா, நீதான் சரியான வழி காட்ட வேணும்... |
| சின்னான் பத்திக்குள்ளிருந்து:- | சின்னான்: | மோன் கொழுப்பில திரியிறதுக்கு முருகன் என்ன செய்யிறது... |
| சிவராசா படுத்துக்கிடந்தபடி (லேசான சிரிப்புடன்):- | சிவராசா: | ஐயாவுக்கு நான் தன்ர தொழில் பழகேல்லயெண்டு கோவம். |
| | சிவகுரு: | ஏன் ராசன், எனி பழக வேண்டியது தானே... சும்மா இப்பிடியிருந்துதான் என்ன செய்யப் போறாய்... கொய்யா வுக்கும் எவ்வளவு சந்தோசமா இருக்கும். |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | என்ன சிவகுரு... என்னை வடிவாத் தெரிஞ்சு கொண்டு உப்பிடிக் கதைக் கிறாய். சுயமரியாதையைக் காக்க வேணும் எண்டு நினைக்கிறவன் தான் மானமுள்ள மனிசன். என்ரை சுயமரி யாதைக்கு இழுக்குவாற எந்தத் தொழி லையும் நான் செய்ய மாட்டன். |
| | சிவகுரு: | ராசன் நானும் எங்கட தொழில் செய்யாமல் விட்டிட்டுப் போய்க் கொழும்பில ஒரு முதலாளிக்கு கீழ வேலை செய்யிறன். என்னைக் கேட்டால் இப்பிடி ஆருக்கும் கீழ, எந்தப் பெரிய வேலை செய்தாலும் அது சுயமரியாதைக்கு இழுக்குதான்... நான் இதை எத்தினை முறை மனம் நோக உணர்ந்து சகிச்சுக் கொண்டு இருக்கிறன். சத்தியமா சொல்லுறன், நான் இப்ப சிலவேளை யில யோசிக்கிறனான். விட்டிட்டு வந்து எங்கட தொழிலைக் செய்வ மோவெண்டு... சுதந்திரமான தொழில் ஆனால் மனம் இடங்குடுத்தாலும் உடம்பு இடம் குடுக்குதில்லை... |
| | சிவராசா: | சிவகுரு, நீ சொலலுறது ஒரு நிலை யான அவமானமில்லை... பொருளா தாரத்தைப் பொறுத்தது. நாளைக்கு உனக்குக் காசு வந்திட்டா நீ முதலாளி. உன்னை மதிப்பாங்கள்... ஒண்டு கேக் கிறன் சிவகுரு... உன்னை கொழும்பில ஆரும் நீ பள்ளனெண்டு தாழ்த்தி அவமானப்படுத்தியிருப்பாங்களா. |
| | சிவகுரு: | அதெண்டா இல்லைத்தான்... |
| | சிவராசா: | அதுதான் சொல்லுறன்... தொழிலாளி முதலாளிப் பிரச்சனை என்னைப் பொறுத்தளவிலை எங்கட சாதிப் பிரச்சினைப்போல அவமானப்படக் கூடிய பிரச்சினையில்லை... இப்ப நான் மரமேறினால் என்ரை பிள்ளை மர மேறியின்ர பிள்ளையாய்த் தாழ்த்தப் பட்டுப் போவான்... எங்கட சந்ததியே தாழ்ந்துபோம்... அதுக்கு ஒரே வழி நாங்கள் உந்தத் தொழிலுகளைச் செய் |



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :** | **ஒலி**

யாமல் விட்டிட்டுப் பட்டணங்களில போய் வாழ்றதுதான்... பிறகு கள்ளு வேணுமெண்டவன் தானே ஏறிக் கள்ளுக் குடிப்பான்... சக்கூசு நாறினால் தானே கழுவுவான்... பிறகு எல்லாரும் ஒரே சாதிதான்... (சிரித்தல்)

**சிவகுரு:** அப்ப உன்ர உத்தேசம் என்ன.

**சிவராசா:** நீ எப்ப கொழும்புக்குப் போறாய்.

**சிவகுரு:** இரண்டு நாளாகும்...

**சிவராசா:** நானும் உன்னோட வரப்போறன்.

**சிவகுரு:** வந்து...

**சிவராசா:** ஏன், எனக்குச் சின்னதா ஒரு வேல எடுத்துத் தரமாட்டியே.

**சிவகுரு:** உன்ர விருப்பம் அப்பிடியெண்டா நான் முயற்சி செய்யிறன்.

*வெளியே சங்கரலிங்கம், அருணகிரி தலையில் பிளாஸ்டருடன், விதானையார் மூவரும் வருகிறார்கள். முற்றத்தில் நிற்கும் இளைஞர்கள் மரியாதையாக ஒதுங்குகிறார்கள். சின்னான் பத்திக்குள்ளால் வெளியே வந்தபடியே :—*

**சின்னான்:** வாருங்கோ ஐயா... வாருங்கோ விதானையார்.

**விதானை:** என்னவாம், மோன் என்ன சொல்லுறான்.

**சின்னான்:** உள்ளுக்க படுத்திருக்கிறான் ஐயா.

**விதானை:** அண்டைக்குச் சந்தையடியில வைச்சுச் சொன்னனான்.

**சின்னான்:** அவனுக்குத்தான் சொல்லுங்கோ ஐயா, புத்தி வரட்டும்.

*விதானை, சங்கரலிங்கம், அருணகிரி, சின்னான் நால்வரும் உள்ளே போகிறார்கள். செல்வி மூன்று முக்காலிகளைக் கொண்டு வந்து சிவராசாவின் பாயருகே வைக்கிறாள். சிவகுரு எழுந்து நிற்கிறான். சிவராசா எழும்ப முயற்சிக்கிறான்.*



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :** | **ஒலி**

**சங்கரலிங்கம்:** படு படு படு. இப்ப எப்பிடி இருக்கு.

**சிவராசா:** காயம் சின்னக் காயம்தான்... ரத்தம் போனதால கொஞ்சம் பெலவீனமா இருக்கு.

*சங்கரலிங்கம், அருணகிரியைப் பார்க்க அருணகிரி கொண்டுவந்த பார்சலை செல்லியிடம் கொடுக்கிறான்.—*

**சங்கரலிங்கம்:** செல்லி, அந்தப் பாசலை எடுத்து வை. கொஞ்சம் முட்டையள் இருக்கு. மோனுக்குக் குடு.

**விதானை:** ஓ... மோனுக்கு முட்டைய அவிச்சுக் குடு... திண்டுபோட்டுப் பேந்தும் ஆரோடையும் போய்த் தனகட்டும்.

*விதானையார் சிவராசாவை பார்த்து:—*

**விதானை:** என்னடா, அண்டைக்கு நான் சொன்னனான் எல்லே... சரி. எனி என்ன... நடந்தது நடந்திட்டுது... எனியும் அவங்களோட பகைமையை வளக்காமல் உன்ரை அலுவலைப் பாத்துப் பிழைக்கிற வழியைப் பார்... பொலிசு கிலி சொண்டும் வேண்டாம்... சேமன் கூட்டத்துக்கு ஊது பொழுது போக்கு... கோடு, கச்சேரி எண்டு செலழிக்க நீ காசு வைச்சிருக்கிறியே சின்னான்.

**சின்னான்:** அதுதான் ஐயா நானும் யோசிக்கிறன்.

**விதானை.** யோசிக்கிறதை விட்டுப் போட்டு மோனை எங்கிலையும் அனுப்பு... கொஞ்ச நாள் போக எல்லாம் சரியாப் போயிடும்... ஊர்ச்சண்டை நெறாள் நிலைக்காது. பிறகு கொஞ்சநாளால ஒரு உதவிக்கு அவங்கள் உங்களிட்ட வரவேணும். நீங்கள் அவங்களிட்டப் போகவேணும். இதுகளைப் பெரிசு படுத்திக் கோடு சச்சேரி எண்டு பகைமையை மேல வளக்கக்கூடாது.

**சின்னான்:** எங்கையன் போறதுக்கு அவன் ஓமெண்ட வேணுமே.

**சிவகுரு:** மாமா, இப்பதான் சிவராசன் என்னோட கதைச்சுக்கொண்டிருந்தான். என்னோட கொழும்புக்கு வரப்போறானாம்.



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்:**

**ஒலி:**

**விதானை:** அது மூளையுள்ள பிள்ளை செய்யிற வேலை.

**சங்கரலிங்கம்:** என்ன ராசன், உண்மையே.

**சிவராசா:** ஓமையா, நான் மனசில வஞ்சகம் சூதில்லாமல் உண்மையா நடக்கிறன். அதுக்கு இந்த ஊர் உதவாது... வீணா எனக்கு மட்டுமில்ல, என்ர ஐயா அம்மாவுக்கும் மனவருத்தத்தைக் குடுக்கிறதிலும் பாக்க, எங்கையும் கொழும்புப் பக்கம் போய் ஏதும் வேலை செய்வம்.

**விதானை:** தம்பி சிவராசன், எனக்கு உன்னை நல்லா விளங்கும். நேர்மையாய் இருக்கத்தான் வேணும். ஆனால் கொஞ்சம் ஒளிவு, மறைவு, க டுங் சாணாமல் நடக்கிற தன்மையும் வேணும். இல்லாட்டா எங்க போனாலும் கரைச்சல்ப்படுவாய்.

**காட்சி முடிவு**



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம் :** | **ஒலி**

காட்சி : 11
(சிலநாட்களின் பின்)

இடம் : சங்கரலிங்கத்தின் வீடு

நேரம்: காலை சுமார் 9 மணி.

**பாத்திரங்கள் :**

சிவராசா, சகுந்தலா, சங்கரலிங்கம். அவர் மனைவி. பாமா, மூன்று சிறுவர்கள் (ஒரே வயதில் இரண்டு ஆண், ஒரு பெண் வயது குறைவு)

சிவராசா சங்கரலிங்கம் வீட்டுக்குப் பின்புறம் அவரின் கள்ளுப் போத்தல்களைக் கொண்டுவருகிறான். கிணத்தடிக்குக் கிட்ட இருக்கும் குடிசையில் கொண்டுபோய் வைத்து விட்டு வருகிறான். தலையில் சிறு பிளாஸ்டர் மட்டும் இருக்கிறது. சகுந்தலா குசினியடியில் நின்று சிவராசாவைக் கண்டுவிட்டுக் கையில் ஒரு என்வலப்புடன் வருகிறாள். சிவராசா கிணற்றடியில் வரும்போது சகுந்தலாவைக் காண்கிறான் :—

சிவராசா: என்ன சகுந்தலா, இண்டைக்கு நீங்கள் டியூஷனுக்குப் போகேல்லையே ..

சகுந்தலா: இல்லை... காயமெல்லாம் எப்பிடி?

சகுந்தலாவின் முகம் வாட்டமுற்றிருக்கிறது :—

இருவரும் சிறிது நேரம் மௌனம்:

சகுந்தலா: நான் காலமேல டியூஷனுக்குப் போறனான். வீட்டில நிக்கமாட்டன் எண்டு உங்களுக்குத் தெரியுந்தானே.

சிவராசா: ஓம்...

சகுந்தலா: இண்டைக்குப் பின்னேரம் சிவகுருவோட நீங்கள் கொழும்புக்குப் போறதா அண்ணை சொன்னார்.

சிவராசா: ஓ... இங்க இருக்கிறதிலும் பாக்க எங்கையும் போயிடுறது நல்லதெண்டு யோசிச்சன்.

சகுந்தலா: அண்ணை தச்சமயம் சொல்லியிருக்காட்டா எனக்குத் தெரிஞ்சிருக்காது.

சிவராசா: பின்னேரம் பயணம் போறாக்க வந்து ஐயாவுக்கு உங்களுக்கெல்லாம் சொல்லாமல் போயிருப்பன் எண்டு நினைச்சீங்களே.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சகுந்தலா தரையைக் குனிந்து பார்த்துக்கொண்டு மௌனமாக நிற்கிறாள். கண்களில் இருந்து நீர் வழிகிறது. சிவராசா சிறிது அதிர்ச்சியடைந்து வேதனையுடன்:- | சிவராசா: | என்ன சகுந்தலா, உண்மையா நான் உங்களுக்குச் சொல்லாமல் போயிருப்பன் எண்டு நினைச்சீங்களே. |
| சகுந்தலா கண்களைப் புறங்கையால் துடைத்தபடி இல்லையெனத் தலையாட்டுதல்:- | சகுந்தலா: | ராசன், நீங்கள் இந்த ஊரிலை பிறந்து வளந்து இந்த 21 வருஷ காலத்திலையும் இதுதான் ஊரை விட்டுப் பிரிஞ்சு நீண்ட தூரம் போற பயணம் என்று நினைக்கிறன். |
| | சிவராசா: | ஓம்... |
| | சகுந்தலா: | அங்க ஒரு வேலை கிடைச்சு வாழ்க்கை நல்லா அமைஞ்சிட்டா எனி இந்த ஊர் ஒரு விஸிட்டிங் பிளேஸா மட்டும்தான் உங்களுக்கு இருக்கும். |
| | சிவராசா: | வாழ்க்கேல ஒவ்வொருதரும் இந்தக் கட்டத்தை அடையத்தானே வேணும் |
| | சகுந்தலா: | உங்களுக்குத் துக்கமா இல்லையே. |
| இடையிடையே சகுந்தலா கஷ்டப்பட்டு மூச்சு விடல் | சிவராசா: | துக்கம் எண்டு சாதாரணமாச் சொல் விட்டீங்கள் சகுந்தலா ... எனக்கு நெஞ்சே வெடிச்சிடும் போல இருக்கு. இந்த ஊரில உள்ள ஒவ்வொரு மூலைமுடுக்குக்கும், இங்க உள்ள என்னில அன்பு வைச்சிருக்கிற ஒவ்வொரு சீவனுக்கும் என்னோட உள்ள பிணைப்பின்ரை வலிமையை இப்பதான் உணர்றன் ... ஆனால் என்ன செய்யிறது சகுந்தலா, என்னைப் போல ஆக்கள் இப்பிடிச் சிறுமைப் பட்டுக் கொண்டு வாழேலாது ... அதை எதிர்த்தால் எனக்கு மட்டுமில்ல, என்னில அன்பு கொண்டவைக்கும் தொல்லை ... நான் ஒரு |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | குழப்படிகாறன் எண்டுதான் எல்லாருக்கும் தெரியிறன். |
| | சகுந்தலா: | இல்லை ராசன், ஒருதரும் உங்களைப் பிழையான ஆள் எண்டு கதைக்கிறேல்ல; |
| | சிவராசா: | பிறகேன் சகுந்தலா எனக்கு இவ்வளவு கரைச்சல்... எனக்கு விபரந் தெரிஞ்ச நாள் தொடக்கம் ஏதும் பிரச்சினை வந்தபடி. என்ரை பக்கத்தில ஞாயம் எண்டாலும் உனக்குத் தேவையில்லாத வேலை எண்டு என்னைத்தான் குறை சொல்லுகினம் ... நியாயமா நடக்காதவையிலையும் குறை, நடந்தாலும் குறை ... உண்மையா சகுந்தலா, எனக்கு நியாயம் எது அநியாயம் எது எண்டதே தெரியாமல் எல்லாம் குழம்பிப் போச்சு. |
| | சகுந்தலா- | நியாயம் அநியாயம் இருக்கு ராசன்... எங்களுக்கு எத்தினை நல்லாக்களைத் தெரியும், எத்தினை கூடாதாக்களைத் தெயும். அவையவை செய்யிற செயலைக் கொண்டு தானே கணிக்கிறம் ... நீங்கள் கொஞ்சம் தீவிரம்... நீங்கள் மட்டுமில்லை, எல்லாரும் நல்லவையாய் இருக்கவேணுமெண்டு நினைக்கிறீங்கள். |
| | சிவராசா: | அது பிழையா சகுந்தலா? |
| | சகுந்தலா: | அது பிழையில்லை ... அதால உங்களுக்குத்தான் பிரச்சினை ... இப்ப பாக்கேல்லையே பேசாமல் அம்மா ஐயாவோட ஊரில இருந்து நிம்மதியாத் தொழில் பாக்கிறதை விட்டிட்டு எங்கையோ தூரப்போய் உத்தியோகம் பாக்கிற அளவுக்கு உங்களை ஆக்கிப் போட்டுதே ... இதெல்லாம் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | சின்னப் பிரச்சினை ... நீங்கள் கொஞ்சம் உறுதியா நிண்டாக் காணும்... |
| உடனே சிவராசாவின் முகம் உறைந்த நிலையில் வருகிறது. | (பாரதியார் பாடல்) |
| (ஃபிறீஸ்) | பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயங்கொள்ளலாகாது பாப்பா மோதி மிதித்துவிடு பாப்பா - அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா. |
| | சிவராசா: நான் கொழும்புக்குப் போறது கூடாதே சகுந்தலா. |
| | சகுந்தலா: ராசன், எனக்கு என்னவோ என்ரை மனம் சொல்லுது ... நீங்கள் உங்கட குடும்பத் தொழிலை விட்டிட்டு என்ன வேலை செய்யப்போனாலும் கரைச்சல் படுவீங்கள் எண்டு ... ஆனால் உங்கட தொழில் செய்யாமல் ஒரு உத்தியோக காறனா வரவேணும் எண்டு சுயநலமா விரும்பிறன். |
| | சிவராசா: எனக்கு விளங்கேல்லை. |
| | சகுந்தலா: விளங்கிற நேரம் வரேக்கை சொல்லுறன். |
| சங்கரலிங்கம் வீட்டு முன் விறாந்தையில் இருந்து கொண்டு மகள் சகுந்தலாவைக் கூப்பிடுகிறார்:- | சங்கரலிங்கம்: சகுந்தலா ... பிள்ளை... |
| | சகுந்தலா: வாறனையா ... இங்க அலுவலா இருக்கிறன். |



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்** | **ஒலி**

சங்கரலிங்கம்: வரேக்கை அந்தப் போத்தலுகளைக் கொண்டா பிள்ளை.

சிவராசா: அப்ப நான் வாறன் சகுந்தலா. பின்னேரம் பயணம் போகேக்கை வாறன்.

சகுந்தலா கையிலுள்ள என்வலப்பைக் கொடுக்கிறாள்:-

சகுந்தலா: இந்தாங்கோ.

சிவராசா: என்ன இது.

சகுந்தலா: உள்ளுக்க என்ன இருக்குதெண்டு பாருங்கோவன்.

சிவராசா கவருக்குள் இருந்து ஒரு புகைப்படத்தை எடுத்துப் பார்க்கிறான். அதில் சங்கரலிங்கமும் அவர் மனைவியும் அருகருகே நிற்க, சிறுவர்களாக அருணகிரியும் சகுந்தலாவும் பக்கத்தில் நிற்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் அரைக்கு கீழே தளர்ந்து நிற்கும் காற்சட்டையும் வெற்றுடம்புமாக சிவராசா நிற்கிறான்:-

சகுந்தலா: இது எங்கட அம்மா சாக ஒரு மாதத்துக்கு முதல் மாமா கொழும்பில இருந்து வந்து நிக்கேக்கை எடுத்த படம்... இந்தப் படமெடுத்தது உங்களுக்கு நினைவிருக்கே.

சிவராசா சிரித்தபடி ஆமெனத் தலையாட்டுகிறான். அந்தப் படம் எடுத்த போது நடந்தவைகள் அவன் நினைவில் வருகின்றன.

(ஃபிளாஷ் பாக் காட்சிகள்)

சங்கரலிங்கம், அவர் மனைவி, சிறுவன் அருணகிரி, சிறுமி சகுந்தலா ஆகியோர் நல்ல ஆடைகள் உடுத்துப் படமெடுப்பதற்கு ஆயத்தமாக நிற்கிறார்கள். மாமா கமெராவை வைத்துச் சரிபார்த்துக் கொண்டு நிற்கிறார். சிறுவன் சிவராசா அரைக்



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| காற்சட்டையுடன் ஷேர்ட் இல்லாமல் மாமாவுக்குப் பின்னால் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறான். திடீரென சகுந்தலா:- | சகுந்தலா: | ஐயா, ராசனையும் கூப்பிட்டு நிக்கச் சொல்லுவமே. |
| | மாமா: | சகுந்தலா, சும்மா ஆடப்படாது பேசாமல் இங்க பாத்துக் கொண்டு நிக்கவேணும். |
| | சகுந்தலா: | மாமா, பாவம் ராசன்... அவனையும் கூப்பிட்டு நிக்கச் சொல்லுங்கோ. |
| | மாமா: | ராசனைப் பிறகு தனியா எடுப்பம், இப்ப பேசாமல் நில். |
| சகுந்தலா அழத் தொடங்குகிறாள் :- | சகுந்தலா: | அம்மா, ராசனையும் கூப்பிடுங்கோ. |
| | அம்மா: | இரம்மா... இதை எடுத்து முடிச்சிட்டு பிறகு ராசனையும் கூப்பிடுவம். |
| | சகுந்தலா: | இல்லை... முதல் ராசனையும் கூப்பிட்டு எடுத்திட்டுப் பிறகு தனிய எடுங்கோ. |
| | சங்கரலிங்கம்: | சரி சரி... ராசன் இங்க வந்து நில்... இவள் பிடிச்சா விடாள். |
| சிவராசா ஓடிவந்து புகைப்படத்தில் உள்ள நிலையில் நிற்றல். (ஃபிளாஷ் பாக் காட்சி முடிவு) | | |
| | சகுந்தலா: | இந்தப் படத்தை ஏன் தாறன் தெரியுமே? இதைப் பாக்கிற நேரமெல்லாம் நாங்கள் சின்னனிலை எப்பிடி ஒண்டா வளந்தம் அன்பா இருந்தம் எண்டு உங்களுக்கு நினைவு வரட்டுமெண்டு. |
| சிவராசாவின் முகத்தில் லேசான புன்முறுவல்:- | சிவராசா: | சகுந்தலா, அப்பிடி மரக்கட்டையில்லை என்ர மனசு... என்ர இளமைக் காலத்தோட சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சின்ன நிகழ்ச்சியும் என்ர |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
| --- | --- |
| | மூச்சோட கலந்திருக்கு... |
| | சகுந்தலா: போதும் போதும், நான் சும்மா சொன்னனான்... |
| சகுந்தலா பெருமூச்சு விடல். | |
| | சிவராசா: சகுந்தலா, உதைக் கட்டாயம் டொக்டரிட்டக் காட்டவேணும்... |
| | சகுந்தலா: எதை? |
| | சிவராசா: நீங்கள் மூச்சுவிடக் கஷ்டப்படுறீங்கள். |
| | சகுந்தலா: அதெல்லாம் சரியாய்ப் போயிடும். |
| | சிவராசா: நான் வரட்டே ... ரெண்டுமூண்டு இடத்தை போய்ச் சொல்லவேணும். |
| | சகுந்தலா: பத்திரமாப் போங்கோ... ஆ... எனக்கு ஒரு உதவி செய்யவேணும். |
| சிவராசா என்ன என்பது போல் பார்த்தல். | |
| | சகுந்தலா: நீங்கள் போற இடத்தில உங்கட மனசுக்கு எது சரியெண்டு படுதோ அதைச் செய்யுங்கோ... ஆனால் தயவு செய்து ஆரும் வலியச் சண்டைக்கு வந்தாலும் நீங்கள் பொறுமையா இருங்கோ. |
| | சிவராசா: சரி. |
| | சகுந்தலா: அப்பிடிப் பொறுக்கேலாமல் கோவம் வந்தால் என்னை நினையுங்கோ சரியா? |
| | சிவராசா: (சிரித்துக் கொண்டே) சரி போட்டு வாறன்: |
| சிவராசா போக சகுந்தலா பார்த்துக் கொண்டே நிற்கிறாள். | |
| | (காட்சி முடிவு) |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| காட்சி 12<br>இடம்: சிவராசா வீடு, தெரு சங்கரலிங்கத்தின் வீடு, றெயில்வே ஸ்டேசன்.<br>நேரம்: மாலை சுமார் 5 மணி | |
| **பாத்திரங்கள்**<br>சின்னான், செல்லி, சிவராசா, சிவ குரு, சிவராசாவின் சில நண்பர்கள், சங்கரலிங்கம், அருணகிரி, சகுந்தலா, சில சிறுவர்கள், ஐயர், கூட்டுப் பிரார்த்தனை சொல்லிக் கொடுப்பவர். | |
| சிவராசாவின் வீட்டுப் படலையடியில் சில இளைஞர்கள் சைக்கிளில் நிற்கி றார்கள். முற்றத்தில் சின்னானும் செல்லியும் நிற்கிறார்கள். சற்றுத் தள்ளி சிவகுரு நிற்கிறான். | |
| சிவராசா வீட்டுக்குள்ளிருந்து ஒரு சூட் கேசுடன் வருகிறான். முகத்தில் வேதனை கப்பிக் கிடக்கிறது. வந்து நிலத்தில் சூட்கேசை வைத்துவிட்டுக் குனிந்து சின்னானின் காலைத் தொட்டுக் கும்பிடுகிறான்:- | சின்னான்: சுகமா போட்டு வா. |
| செல்லிக்கு அருகே சிவராசா போக, அவள் அழுகையை அடக்க முடியாது சிவராசாவை கட்டிப்பிடித்து உச்சியில் முத்தமிடுகிறாள். | |
| சிவராசாவின் கண்கள் கலங்குகின்றன. சிவராசா மெல்ல மெல்ல சிவகுரு வுடன் வீட்டுப் படலையை நோக்கிப் போகிறான். | |
| சின்னானும் செல்லியும் வேதனையுடன் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். | பாடல் (2) (பின்னணியில் மிக வேதனை உணர்ச்சி கலந்த குரலில் ஒரு பாடல் ஒலிக்கிறது) |
| நின்ற இளைஞர்கள் சிவராசாவும் சிவகுருவும் வெளியேறுவது கண்டு சைக்கிள்களில் ஏறிக் கொள்கிறார்கள். எல்லோரும் புறப்படுகிறார்கள். | உலகில் எதுவும் நிலையானதல்ல. இன்பமும் துன்பமுமாக மாறி மாறி வரும். அன்பில் திழைத்தவர் அதைப் பிரிந்து போவதும், அல்லற்பட்டவர் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| சங்கரலிங்கம் வீட்டுக்குப் போய் இளைஞர்கள் வாசலில் நிற்க, சிவராசா உள்ளே போய், விறாந்தையில் நிற்கும் சங்கரலிங்கத்தின் காலைத் தொட்டுக் கும்பிடுகிறான். சங்கரலிங்கம் அவன் தோளில் தட்டுகிறார். சகுந்தலா அறை வாசலில் நிற்கிறாள். | கள் ஆதரவு பெறுவதும் இயற்கை. லௌகீகத் தேவைகள் நிறைந்த உலகில் அன்பு, பாசம் போன்ற உணர்ச்சிகளை மட்டும் கொண்டு வாழ்ந்து விட முடியாது. பொருள் நாடிப் பிரிபவர் சிலர், அருள் நாடிப் பிரிபவர் சிலர், அமைதி நாடிப் பிரிபவர் சிலர். வாழ்க்கையில் நிர்ப்பந்தத்தால் ஏற்படும் பிரிவுத் துயரைப் போல் வேதனை தருவது ஒன்றில்லை. இளமைக்கால நினைவுகள் மனிதனை என்றும் மகிழ்விக்கும் கனவுகள். |
| நிமிர்ந்து பார்த்த சிவராசா உணர்ச்சிப் பெருக்கோடு நிற்கிறான். | |
| சகுந்தலா தலையாட்டி விடை கொடுக்கிறாள். அருணகிரியும் சிவராசாவுடன் வந்து சைக்கிளில் ஏறிக் கொள்கிறான். சைக்கிள்கள் புறப்படுகின்றன. பார்த்துக் கொண்டு நின்ற சகுந்தலா அறைக்குள் போய்க் கதிரையில் ருந்து மேசையில் குனிந்து படுத்துக் குலுங்கிக் குலுங்கி அழுகிறாள். | அந்த இனிய நினைவுகளுடன் நினைவுகளாய் உணர்வுகளுடன் உணர்வுகளாய் ஒன்றிவிட்ட கிராமத்தை, பெற்றோரை, நண்பர்களை, மனதுக்கினியவர்களை விட்டுப் பிரிவது வேதனைதான். ஆனாலும் பிரியத்தான் வேண்டும். அதுதான் இயற்கையென்பது மெல்லும் பொருளமைந்த பாடல் ஒன்று. |
| சைக்கிள்கள் போகின்றன. சிவராசா படித்த பள்ளிக்கூடத்தைப் பார்க்கிறான். | பாடல் 2 தொடர்கிறது......... |
| (ஃபிளாஷ் பாக்) | |
| (அருணகிரி, சிவராசா, சகுந்தலா சிறுவர்களாக பள்ளிக்கூடம் வருகிறார்கள்) | |
| சைக்கிள்கள் போகின்றன. வயல்வெளி வருகின்றது. சிவராசா பார்க்கிறான். பழைய நினைவுகள். | |
| (ஃபிளாஷ் பாக்) | |
| (அருணகிரி பட்டம் பிடித்து விட சிவராசா கொண்டு ஓடப் பட்டம் மேலே எழும்புகிறது. சகுந்தலா பார்த்துக் கை கொட்டிச் சிரித்தபடி பின்னால் ஓடுகிறாள்) | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| சைக்கிள்கள் போகின்றன. சிவராசா பிள்ளையார் கோவிலைப் பார்க்கிறான். பழைய நினைவுகள். | பாடல் 2 தொடர்கிறது......... |
| (ஃபிளாஷ் பாக்) | |
| (பூசைவேளை. மணிக் கோபுரத்தில் இருந்து தொங்கும் கயிற்றைப் பிடித்து மணியடிக்கச் சிறுமி சகுந்தலாவும் வேறொரு சிறுவனும் போட்டி போட்டுக் கொண்டு ஓடுகிறார்கள். சிறுவன் கயிற்றைப் பிடித்து விடுகிறான். சகுந்தலா அழுது கொண்டு வருகிறாள். சிவராசா போய் அச் சிறுவனிடம் கயிற்றைப் பறித்து சகுந்தலாவிடம் கொடுக்கிறான். | |
| அவள் சந்தோஷமாக மணி அடிக்கிறாள். | |
| சிறுவர்களுடன் போட்டி போட்டு பிரசாதம் வாங்குகிறான். | |
| ஒருவர் தேவாரம் செல்லிக் கொடுக்க சிவராசா, சகுந்தலா, அருணகிரி ஆகியோர் ஏனைய சிறுவர்களுடன் இருந்து உரத்துப் பாடுகிறார்கள். | |
| ஒருவன் அருணகிரிக்கு அடிக்க சிவராசா போய் அவனை அடிக்கிறான். | |
| (ஃபிளாஷ் பாக் முடிவு) | |
| சைக்கிள்கள் றெயில்வே ஸ்டேஷனை அடைகின்றன. ட்ரெயின் நிற்கிறது. சிவராசாவும் சிவகுருவும் ஏறுகிறார்கள். ட்ரெயின் புறப்படுகிறது. நண்பர்கள் கை அசைக்கிறார்கள். ட்ரெயினில் இருவரும் இருக்கிறார்கள். கோட்டைப் புகையிரத நிலையத்தில் ட்றெயின் நிற்கிறது. சிவராசாவும், சிவகுருவும் இறங்கி வெளியே வருகிறார்கள். இருவரும் பஸ் ஒன்றில் ஏறுகிறார்கள். | பாடல் 2 முடிவு. |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| காட்சி 13<br><br>இடம்: கொழும்பில் ஒரு தெரு, சிவகுருவின் வீடு.<br><br>நேரம்: காலை சுமார் 8 மணி | | |
| **பாத்திரங்கள்**<br>சிவகுரு, சிவராசா, நீலும், சிறு பெண் குழந்தை. | | |
| சிவகுருவின் வீட்டுக்குப் போக வேண்டிய பஸ்தரிப்பில் பஸ் வந்து நிற்கிறது. சிவராசாவும் சிவகுருவும் இறங்குகிறார்கள். | | |
| பஸ் புறப்பட்டு போகிறது. இருவரும் சிவகுருவின் வீடு நோக்கி நடக்கிறார்கள். | சிவகுரு: | ராசன், நான் கொழும்பில வேலைக்கு வந்து மூண்டு வருஷமாகுது. |
| இருவரும் மௌனமாக நடக்கிறார்கள். | | |
| | சிவகுரு: | நான் எத்தினை தரம் ஊருக்கு வந்திருப்பன். |
| | சிவராசா: | நீ வேலைக்கு வந்ததுக்கு இதுதான் மூண்டாவது தடவையெண்டு நினைக்கிறன். |
| | சிவகுரு: | ஏன் நான் அடிக்கடி ஊருக்கு வாறேல்லை எண்டு நினைக்கிறாய். |
| | சிவராசா: | அதுதான் சொல்லுவாய், சரியான வேலையெண்டு. |
| | சிவகுரு: | அது நான் அப்புவுக்கு சொல்லுற பொய். |
| இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறார்கள். சிறிது நேரம் மௌனம். | | |



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்** — **ஒலி**

சிவகுரு: நான் அண்டைக்குச் சொன்னனே... எனக்கும் ஊரோடை வந்து எங்கட தொழில் செய்ய வேணும் போல இருக்கு ... ஆனால் உடம்பு இடம் குடுக்குதில்லையெண்டு...

*சிவராசா சிறிது குழப்பத்துடன் சிவ குருவைப் பார்க்கிறான்.*

சிவகுரு: அதில அரைவாசிதான் உண்மை ...

சிவராசா: அப்பிடியெண்டால்...

சிவகுரு: என்ரை குடும்ப நிலையும் என்னை ஊர்ப் பக்கம் வரவிடாது.

சிவராசா: குடும்ப நிலையா? உனக்கு உன்ர அப்பு மட்டும்தானே இருக்கிறார் ... அதில என்ன பிரச்சினை.

*சிவகுரு லேசான சிரிப்புடன் சிவ ராசாவைப் பார்க்கிறான்.*

சிவகுரு: நான் அதைச் சொல்லேல்லை ... இங்க உள்ள குடும்பத்தைச் சொல் லுறன்.

*சிவராசா அதிர்ச்சியுடன் சிவகுரு வைப் பார்க்கிறான்.*

சிவகுரு: ஓம் ராசன், நான் இங்க கலியாணம் செய்திட்டன் ... ஒரு பொம்பிளைப் பிள்ளையும் இருக்கு.

சிவராசா: ஆர் பொம்பிளை...

சிவகுரு: நிலும் எண்டு சிங்களப்பெட்டை ...

சிவராசா: சிங்களமோ... இதெப்ப நடந்தது...

சிவகுரு: நான் இங்க வந்து ஒரு ஆறு மாசத் தில ... நல்ல பெட்டை ... தாய் தேப்பன் இனசனம் கிடையாது. நல்லாத் தமிழ் கதைக்கும். நான் வேலை செய்யிற முதலாளி வீட்டில வேலைக்கு நிண்டது.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| இருவரும் மௌனமாக நடக்கிறார்கள். | | |
| | சிவகுரு: | என்ன ராசன், பேசாமல் வாறாய்... |
| | சிவராசா: | ஒண்டுமில்லை... |
| | சிவகுரு: | கடுமையா யோசிக்கிறாய்... |
| | சிவராசா: | நீ இந்தக் கலியாணத்தைச் செய்ய ஏதும் விசேசமான காரணங்கள்... |
| | சிவகுரு: | விசேசமா... என்ன, காதல்தான். ஊரில எண்டால் எங்கட சமூகத்தில உள்ள பெட்டையள் எல்லாரும் ஏதோ ஒரு விதத்தில சொந்தமா இருப்பினம்... அவையள்ள காதல் வர வாய்ப்பில்லை... அப்பிடியெண்டா என்னுமொரு ஊரில உள்ள எங்கட சாதிப் பெட்டையில காதல் வந்தால் தான் சாத்தியமாகும்... மற்றச் சாதிப் பெட்டையளப் பாத்து மனதுக்குள்ள விரும்பினாலும் சாதிப் பிரச்சனையள் வந்து அந்த விருப்பத்தை வேரோடு பிடுங்கிப் போடும்... இது நான் கொழும்புக்கு வந்த புதிசில ஏற்பட்ட ஒரு புது அனுபவம்... தீவிரமா முடிச்சுப் போட்டன்... ஆனால் நான் நிலுமைக் கலியாணம் கட்டேக்க இப்பிடி என்னையே நான் நினைக்க விடுறேல்லை... எங்கட சாதிப் பிரச் சனைகளை ஒழிக்க இதுதான் சரி யான வழியெண்டு நான் நினைச்சனான். |
| | சிவராசா: | ஏன், நீ சொல்லுறது சரிதானே... இப்ப சந்தோசமாத்தானே இருக்கி றாய்? |
| | சிவகுரு: | கடவுளேயெண்டு சந்தோஷமாத்தான் இருக்கிறன்... கடவுள் நிலும எனக் கெண்டே படைச்சுவிட்டிருக்கிறார்... ஆனாலும் ராசன், நான் தனிய இர வில இருட்டில கண்ண முழிச்சு அண்ணாந்து பாத்துப் படுத்துக் கொண்டு என்னை நானே உணரேக்க |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | எனக்கென்னவோ தனிமையாய்ப் போட்டன் போல ஒரு உணர்வு... எங்கட ஊர் ஏதோ ஆயிரக்கணக் கான மைல்களுக்கு அங்கால இருக் கிற மாதிரியும், நான் ஊருக்கு வந் தால் அந்த ஊர், அப்பு, என்ரை இனத்தவை, சிநேகிதர் எல்லோரோ டையும் அந்நியோன்னியமாப் பழக முடியாமல் அந்நியமாய்ப் போயிட்ட மாதிரியும் ஒரு உணர்வு... உண் மையாச் சொல்லுறன் ராசன் அதை அனுபவிச்சுப் பார்த்தால்தான் தெரி யும்... அந்த நேரம் என்ர நெஞ்சே வெடிச்சிடும் போல ஒரு இனம்புரி யாதவேதனை... அதாலதான் ராசன், எனக்கு நான் செய்திருக்கிறது பிழை யில்லையெண்டு தெரிஞ்சும் என்னைப் பெத்த அப்புவிட்டக்கூட இதைச் சொல்லாமல் மறைச்சு வைச்சிருக் கிறன்... எங்கட இனம், சுற்றத்தோட இருக்கேக்கை என்னதான் பிரச்சனைப் பட்டாலும் ஒரு பலம் மாதிரி... |
| | சிவராசா: | என்ன சிவகுரு, இப்பிடி ஒரு திற மான வேலை செய்து போட்டு இப்பிடி யோசிக்கிறாய். |
| | சிவகுரு: | இல்லை ராசன், நான் இப்பிடிக் கதைக்கிறதால ஏதோ நான் செய்த செய்கைக்காக வருத்தப்படுறன் எண்டு யோசியாதை... இப்பிடி ஒரு அருமையான பெண்சாதியை வைச்சுக் கொண்டு அப்பிடி யோசிச்சாப் பாவம், எண்டாலும் இது ஒவ்வொரு மனி சனிலுமுள்ள அடிப்படை உணர்வு. தன்ர பெற்றோர், தன்ர சகோதரம், தன்ர சுற்றம், தன்ர ஊர், தன்ர நாடு இவையில உள்ள வலுவான பிணைப்பு... இதில ஒண்டைப் பிரிஞ் சாலும் அதுக்காக மனம் சரியா ஏங்கும். |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| இருவரும் சிவகுருவின் வீட்டை அடைந்து விட்டார்கள். மத்திய தரத்திலும் சிறிது குறைந்த பகுதியிலுள்ள தொடர் வீட்டுத் தொகுதி (ஃபிளற்ஸ்) வரிசையாக உள்ள வீடுகளில் இருந்த ஒரு வீட்டு வாசலில் சிவகுருவின் மனைவி நிலும் கையில் ஒரு பெண் குழந்தையுடன் நிற்கிறாள். இவர்களைச் சற்றுத் தூரத்திலேயே கண்டுவிட்டு குழந்தைக்குக் காட்டிச் சிரிக்கிறாள். | | |
| | சிவகுரு: | இண்டைக்குக் காலமை வருவன் எண்டிட்டுப் போனனான், ஆள் வாசலிலேயே நிக்குது... |
| அருகில் வந்தவுடன் | நிலும்: | ட்ரெயின் லேட்டா... |
| சிவகுரு நிலத்தில் சூட்கேசை வைத்து விட்டுத் தாவி வரும் குழந்தையைக் கையில் வாங்கியபடி உள்ளே போக சிவராசா பின் தொடர்கிறான். நிலும் ஒதுங்கி நின்று வழிவிட்டு பின் சூட்கேசை எடுத்துக் கொண்டு உள்ளே போதல். | | |
| | நிலும்: | அப்பா ... ஒரே கரைச்சல் ... எப்ப பாத்தாலும் அப்பா... அப்பா எண்டு என்னை ஒரு வேலை செய்ய விடேல்ல... |
| | சிவகுரு: | ஆ ... எங்கட குட்டிக்கு அப்பா இல்லாட்டா இருக்கேலாதா ... அப்பாவை இறுக்கிக் கட்டிப்பிடிச்சு ஒரு கிஸ் தாங்கோ. |
| குழந்தை தகப்பனைக் கொஞ்சுதல். | சிவகுரு: | ஆ ... என்னுமொண்டு ...<br>ஆ ... என்னுமொண்டு ... |
| சிவகுரு சிவராசாவைக் காட்டி | சிவகுரு: | ஆ ... இந்த மாமாக்கு... |
| குழந்தை சிவராசாவைக் கொஞ்சுதல். | | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவகுரு: | ஆ... எங்கட செல்லக்குட்டி கெட்டிக் காரி சாந்திக்குட்டி ஆற்ற செல்வம்... அப்பாடயோ ... அம்மாடயோ ... |
| குழந்தை சிவகுருவைக் காட்டல். சிவகுரு பலமாகச் சிரித்தல். | | |
| | நிலும்: | இரு கள்ளி ... அப்பா போகட்டும். தாறன் உதை... எனி நான் பால் தர மாட்டன்... |
| | சிவராசா: | சாந்தியே பேர் .. |
| | சிவகுரு: | ஓம், சாந்தி. |
| திடீரென்று நினைவு வந்தவனாக:- | சிவகுரு: | ஆ... நிலும், இது சிவராசா... என்னிலும் வயது குறைவுதான் என்டாலும் என்ர பெஸ்ட் ஃபிரெண்ட் .. எனக்குச் சொந்தமும் ... ஒரு வேலை விசயமா வந்திருக்கிறான்... இங்கதான் இருக்கப்போறான் ... நாளைக்கு எங்கட முதலாளியப் பாக்கப் போறம்... இண்டைக்கு றெஸ்ட் எடுத்திட்டு நாளைக்குப் போவம், என்ன ராசன்... |
| சிவராசா தலையாட்டுதல். | | |
| | நிலும்: | குளிச்சிட்டுச் சாப்பிடுறீங்களோ ... சாப்பிட்டிட்டுப் பிறகு குளிக்கப் போறீங்களோ... |
| | சிவகுரு: | நல்ல கதை... ட்ரெயினுக்கை அவிஞ்சு போய் வந்திருக்கிறம் .. இந்தாரும், பிள்ளையைப் பிடியும் ... ராசன், அந்த அறையுக்கை போய் உடுப்பை மாத்திக் கொண்டு குளிச்சிட்டு வா ... நானும் குளிக்க வேணும்... |
| | சிவகுரு: | நிலும், ராசனுக்கு பாத்றூமைக் காட்டி விடும்... ராசன் போ... |
| சிவராசா எழுந்து போதல். | | |

-(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்** **ஒலி**

**காட்சி 14**

**இடம்:** எம். டீ. யின் வீடு,
நெசவுத் தொழிற்சாலை,
சிவகுருவின் வீடு.

நேரம்; பகல் நேரம்

காட்சித் தொடக்கம் - காலை நேரம்.

**பாத்திரங்கள்**

சிவராசா, சிவகுரு, லோகநாதன் (எம்.டி.), மனைவி, வேக்ஸ் மனேஜர், நிலும், குழந்தை, தொழிற்சாலை ஊழியர்கள், கோபால்.

பின்னணியில் பாடல் '2' வாத்திய இசையாக உரத்து ஒலிக்கிறது. (எந்தவித சம்பாஷணையும் பார்வையாளர்களுக்குக் கேட்காது அக்ஷன் மட்டுமே)

1. பெரிய வீட்டின் கேற்றைத் திறந்து கொண்டு சிவராசாவும் சிவகுருவும் உள்ளே போகிறார்கள்.

மதிற்சுவரில் எஸ். லோகநாதன் என்னும் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. உள்ளே விலை உயர்ந்த கார் முதலிய லோகநாதனின் செல்வச் செழிப்பைப் பறைசாற்றும் சாதனங்கள்.

2. கண்ணாடிக் கதவுக்கு வெளியே சிவராசாவும் சிவகுருவும் நிற்கிறார்கள். உள்ளே லோகநாதன் ஒரு சோபாவில் இருந்து பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார். பக்கத்தில் அவர் மனைவி இன்னொரு சோபாவில் இருந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறாள். பணியாள் (மேலை நாட்டுப் பாணியில்) டீ தயாரிப்பதற்கு வேண்டிய பொருட்களைத் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு அவர்கள் முன்னே வருகிறான். லோகநாதன் பேப்பரை



படிப்பகம்

www.padippakam.com

காட்சி விளக்கம் | ஒலி

மடியில் வைத்துவிட்டு நிமிர்கிறார். வெளியே நிற்கும் சிவகுருவையும் சிவராசாவையும் பார்த்து விட்டு சைகையால் அழைக்கிறார்.

பின்னணியில் பாடல் 2, வாத்திய இசையாக உரத்து ஒலிக்கிறது. (எந்த வித சம்பாஷணையும் பார்வையாளர் களுக்குக் கேட்காது அக்ஷன் மட்டுமே)

3. சிவகுரு சிவராசாவை வெளியே நிற்கும்படி சைகை காட்டி விட்டுக் கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போகிறான். சிவராசா வெளியே நின்று பார்த்துக் கொண்டு நிற்கிறான். சிவகுரு மிகவும் குழைந்து பணிவாக லோகநாதனுடன் கதைக் கிறான். மனைவி பார்த்துக் கொண்டு இருக்கிறாள். வெளியே நிற்கும் சிவ ராசாவை சிவகுரு சுட்டிக் காட்டுகிறான். லோகநாதன் நிமிர்ந்து சிவராசாவை தூர இருந்தபடியே பார்த்துவிட்டு பின் மேசையில் இருந்த றைட்டிங் பாட்டை எடுத்து அதில் ஏதோ எழு தித் தாளைக் கிழித்து சிவகுருவிடம் கொடுக்கிறார்.

பாடல் '2' இன் வாத்திய இசை தொடர்கிறது.

4. சிவகுரு மகிழ்ச்சியுடன் வெளியே வந்து சிவராசாவிடம் வேலை கிடைத் துவிட்டது என்று சொல்லிக் கூட்டிப் போகிறான்.

,,

5. ஒரு பெரிய பவர்லூம் தொழிற் சாலையின் முகப்புத் தோற்றம். சிவகுருவும் சிவராசாவும் உள்ளே போகிறார்கள்.

,,

6. தொழிற்சாலைச் சூழ்நிலை. ஒரு நீண்ட ஹோலில் வரிசையாக மின்தறிகள் வேலை செய்து கொண் டிருக்கின்றன. அதன் ஒரு தொங்க லில் ஒரு கண்ணாடி அறை. அதன் கதவில் ''வேர்க்ஸ் மனேஜர்'' என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. உள்ளே சிவகுருவும் சிவராசாவும் போகிறார் கள்.

,,

வேர்க்ஸ் மனேஜரிடம் கடிதத்தை சிவ குரு கொடுக்கிறான், அதைப் பார்த்த வேர்க்ஸ் மனேஜர் அதை ஃபைலில்



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
| --- | --- |
| வைத்துக் கொண்டே ஃபோமன் கோபாலைக் கூப்பிட்டு ஏதோ சொல்கிறான். கோபால் சிவ ராசாவைக் கூட்டிக் கொண்டு போகிறான். | பாடல் 2இன் வாத்திய இசை தொடர்கிறது. |
| 7. சிவராசாவும் சிவகுருவும் மகிழ்ச்சி யுடன் வீட்டுக்கு வருகிறார்கள். நிலும் வாசலில் குழந்தையோடு நிற்கிறாள். சிவராசாவுக்கு வேலை கிடைத்த செய்தியை நிலுமிடம் சிவகுரு சொல்கிறான். அவளும் மகிழ்ச்சியுடன் அறைக்குள் போய் இருவருக்கும் உணவு பரிமாறுகிறாள். | பாடல் வாத்திய இசை முடிகிறது. |

(காட்சி முடிவு)

காட்சி 15

இடம்: யாழ்பாண நூல் நிலையம் முன் / சுப்பிரமணியம் பூங்கா

நேரம்: மாலை நேரம்

பாத்திரங்கள்

சகுந்தலா, தோழி யசோ.

சகுந்தலாவும் யசோவும் யாழ்ப்பாணம் நூல் நிலையத்திலிருந்து வெளியே வருகிறார்கள். சகுந்தலாவின் முகம் வாடி இருக்கிறது

யசோ: என்ன சகுந்தலா நீர் நேற்றுத் துவக் கம் பாக்கிறல் ஒரு மாதிரி இருக் கிறீர், என்ன விசயம் ...



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சகுந்தலா: | ஒண்டுமில்லை யசோ... |
| | யசோ: | ஒண்டுமில்லை எண்டுநீர், உம்மட முகத்தைப் பாத்தா என்னத்தையோ பறிகுடுத்தவபோல கிடக்கு ... |
| இருவரும் மௌனமாக நடக்கிறார்கள். இருவர் முகத்திலும் ஒரு வகை இறுக்கம். | | |
| | யசோ: | ஒண்டுமில்லாட்டா விடும் ... ஆனா உம்மப் பாக்கப் பரிதாபமா இருக்கு... |
| சகுந்தலா கண்களில் நீர் முட்ட யசோவைப் பார்க்கிறாள். யசோ கெஞ்சும் பாவனையில் சகுந்தலாவைப் பார்க்கிறாள். | | |
| | யசோ: | ப்ளீஸ் சகுந்தலா உம்மைப் பாக்க வேதனையாயிருக்கு... |
| இருவரும் சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்னால் வருகிறார்கள். | | |
| | சகுந்தலா: | யசோ, நான் உம்மட்ட ஒண்டையும் மறைக்கிறேல்லை... உம்மட்ட என்ரை மனவேதனையெல்லாம் சொல்லிக் குழறி அழவேணும் போல இருக்கு... ஆனா இதை எப்பிடிச் சொல்லுற தெண்டும் தெரியேல்ல... |
| | யசோ: | வாரும், அங்க பாக்குக்குள்ள போய் இருந்து கதைப்பம்... |
| இருவரும் பார்க்கினுள் போகிறார்கள். ஒதுக்கமாக ஒரு சீமெந்து பெஞ்சில் வந்து அமர்கிறார்கள். யசோ சகுந்தலாவின் கையை ஆதரவாகப் பற்றி:- | யசோ: | என்ன சகுந்தலா, என்ன பிரச்சினை பயப்பிடாமல் சொல்லும், நான் முடிஞ்சா ஹெல்ப் பண்ணுறன்... |
| | சகுந்தலா: | யசோ, நான் உம்மட்ட சிலவேளை யில சொல்லுவன் சிவராசா எண்டு. |
| | யசோ: | உங்களோட சின்ன வயதில இருந்தே |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | ஒண்டா வளந்ததெண்டு... |
| சகுந்தலா ஆம் என்பது போல் தலையை ஆட்டி | சகுந்தலா: | அவர் கொழும்புக்குப் போயிட்டார். |
| சகுந்தலா மீறிட்டுவரும் அழுகையை அடக்கப் பிரயத்தனப் படுகிறாள். அவளையும் மீறி உடைத்துக் கொண்டு அழுகை பொங்குகிறது. இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக் குனிந்து முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் குலுங்கிக்குலுங்கி அழுகிறாள். யசோ ஆதரவாக சகுந்தலாவின் முதுகை வருடியபடி: | யசோ: | நீர் ஆரோ உம்மோட சின்னனிலயிருந்து ஒண்டா வளந்ததெண்டு சொல்லேக்க நான் சாதாரணமாத் தான் நினைச்சன். அவர் கொழும்புக்குப் போனதே உம்மில இப்பிடி ஒரு தாக்கத்தை ஏற்படுத்திற அளவுக்குப் பாசம் வைச்சிருப்பீர் எண்டு நான் நினைக்கேல்லை... |
| சகுந்தலா மெல்ல நிமிர்ந்து:- | சகுந்தலா: | அவர் இல்லாமல் எங்கட ஊரே சூனியமாகிட்டுது போல எனக்கு இருக்கு... அந்த வேதனையை அனுபவிச்சுப் பாத்தாத்தான் தெரியும் ... |
| | யசோ: | சகுந்தலா, இப்பிடி மனத்தை விட்டிட்டுப் நிக்கிறீர்... இது எவ்வளவு பிரச்சினையான விசயம் எண்டு உமக்குத் தெரியாதே... |
| | சகுந்தலா: | சாதிப் பிரச்சினையைத்தானே சொல்லுறீர். உண்மையைச் சொல்லுறன் யசோ, எனக்கு காதல் அதுஇதெண்டு ஒண்டும் தெரியாது. ஆனால் சிவராசா இல்லாமல் வாழ்க்கை இல்லை எண்டது மட்டும் உண்மை... அப்பிடி அவரோட வாழேலாமல் போனால் நான் கும்பிடுற கடவுள் உண்மையெண்டா இந்த உயிரை எடுத்திட வேணும்... |
| அப்போது கோட்டை முனியப்பர் கோயில் மணி அடிக்கிறது. | | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | யசோ: | சீ .. என்ன சகுந்தலா விசர்த்தனமாக் கதைக்கிறீர் ... கோட்டை முனியப் பற்ற மணியும் அடிக்குது ... எல்லாம் நல்லபடி நடக்கும், கவலைப்படா தயும் ... சிவராசாவுக்கு நீர் தன்னில இவ்வளவு அன்பு வைச்சிருக்கிறீர் எண்டு தெரியுமே. |
| | சகுந்தலா: | நான் அன்பு வைச்சிருக்கிறன் எண்டு தெரியும். ஆனா எப்பிடிப்பட்ட அன்பு எண்டு தெரியுமோ தெரியாது. |
| | யசோ: | ஏன் இருந்தாப்போல கொழும்புக்கு... வேலை ஏதும் கிடைச்சிருக்கா. |
| | சகுந்தலா: | அவருக்கு எங்கட ஊர் பிடிக்கேல்லை யாம். கொழும்பில வேலை தேடப் போட்டார். |
| | யசோ: | அதென்ன ஊர் பிடிக்காத கதை... |
| | சகுந்தலா: | யசோ, உமக்கு அவரைப் பற்றித் தெரியாது. சரியான நல்லவர்... ஒரு சின்னத் தீமையைக் கண்டாலும் பொறுக்க மாட்டார் ... ஆனால் முரட்டுத்தனமாய்த் தனியப் போய் மோதித் தனக்கே தீங்கையும் தேடிக் கொள்ளுவார். அதால அவருக்கு ஊரில சரியான பகை... |
| | யசோ: | நீர் சொல்ல வேண்டியதுதானே. |
| | சகுந்தலா: | எப்பிடி யசோ ... அவற்றை எண்ணங்கள் எல்லாம் சரி ... அணுகிற விதமும் பிழையெண்டு சொல்லேலாது... ஆனால் அவருக்கு ஆபத்தானது. அதால பெரியாக்கள் அவரை எப்பவும் கண்டிச்சபடி ... அதால அவர் மனமுடைஞ்சு விரக்தியா இருக்கேக்க நானும் சொன்னா என்ன மாதிரி... அதால நான் அவர் செய்யிறது பிழையெண்டு ஒரு நாளும் சொல்லுறேல்ல... நான் அவர் அப்பிடிச் செய்யிறது சரி எண்டு |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | சொல்லுறதான் அவருக்கு ஒரேயொரு ஆறுதல். |
| | யசோ: உம்மட நல்ல எண்ணத்துக்கு கடவுள் உமக்கு ஒரு குறையும் விட மாட்டார். கவலைப்படாதையும். |
| | (காட்சி முடிவு) |
| காட்சி 16<br>இடம்: நெசவுத் தொழிற்சாலை,<br>நேரம்: காலை சுமார் 10.00 மணி | |
| **பாத்திரங்கள்**<br>சிவராசா, கோபால், வேர்க்ஸ் மனேஜர், சிரிசேன (யூனியன் லீடர்), சகுந்தலா, செல்வி, அருணகிரி, தொழிற்சாலையில் வேலை செய்வோர். | |
| 1. தொழிற்சாலை முகப்பில் இருக்கும் கடிகாரம் 10 மணியைக் காட்டுகிறது. தொழிற்சாலை முன்பாக தொழிலாளர்கள் காக்கி முழுக்காற் சட்டையும் காக்கி ஷேர்ட்டும் அணிந்து குழுமி நிற்கிறார்கள். சிவராசாவும் இடையே சாதாரண உடுப்புடன் காணப்படுகிறான். தொழிற்சாலை சைரன். ஊதுகிறது. | சைரன் ஊதும் ஒலி.<br>தொழிற்சாலைச் சுற்றாடல் ஓசைகள். |
| 2. தொழிற்சாலையின் உள்ளே இருந்து தொழிலாளர்கள் வெளியே வருகிறார்கள். கையில் வெற்றுச் சாப்பாட்டுப் பெட்டிகள், சிறு பைகள். பஞ்சிங் மெஷினில் காட் அடித்துவிட்டு ஒரு சிறு கதவு வழியாக வெளியே | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
| --- | --- |
| போகிறார்கள். மற்றுமொரு சிறு கதவு வழியாக வெளியே இருந்து தொழிலாளர்கள் பஞ்சிங் மெஷினில் காட் அடித்துவிட்டு உள்ளே போகிறார்கள். அவர்கள் கையில் சாப்பாட்டு பைகள். சிவராசா உள்ளே போகிறான். | தொழிற்சாலைச் சுற்றாடல் ஓசைகள். |
| 3. சிவராசா கோபாலனிடம் போகிறான். கோபாலன் சிவராசாவை இயந்திரத்துக்கு அருகே அழைத்துப் போய் வேலை பழக்குகிறான். (சிவராசா சதாதாரண உடையில்) | " |
| 4. தொழிற்கூடத்தின் ஒரு பக்கத்தில் வேர்க்ஸ் மனேஜர் கண்ணாடி அறைக்குள் இருப்பது தெரிகிறது. எல்லோரும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். சிரிசேன உள்ளே நுழைகிறான். ஒருவரையும் இலட்சியம் செய்யாது ஆறுதலாக ஒரு மின்தறிக்குக் கிட்டப் போகிறான். சிவராசா நேரத்தைப் பார்க்கிறான். 11 மணி. | " |
| (தொடர்ந்துவரும் ஷொட்டுகள் ஒன்றின் மேல் ஒன்று ஓவர்லப் பண்ணி மிக்ஸ் பண்ணப்பட வேண்டும்) | " |
| 1. தொழிற்கூடம். சிவராசா தொழிலாளர் உடையில் ஃபோமனிடம் வேலை பழகுகிறான். | |
| 2. தொழிற்சாலைக்கு வெளியே தொழிற்சாலை மணிக்கூடு ஆறு மணியைக் காட்டுகிறது. தொழிலாளர்கள் ஷிஃப்ட் மாறுகிறார்கள். | " |
| 3. சிவராசா வேலை பழகுகிறான். சிறிசேன வருகிறான். சிவராசா நேரத்தைப் பார்க்கிறான். ஏழரை மணி. | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| 4. சிவராசா கடிதமெழுதுகிறான். | தொழிற்சாலை ஒலிகள். |
| 5. செல்லி படித்துப் பார்க்கிறாள். | |
| 6. அருணகிரி கடிதத்தைப் படிக்க சங்கரலிங்கம் கேட்டுக் கொண்டு இருக்கிறார். சகுந்தலா சந்தோசத் துடன் அக்கடிதத்தைத் தமையனிடம் வாங்கிப் போகிறாள். | |
| 7. சிவராசா கடுமையாக வேலை சொய்கிறான். | |
| 8. சகுந்தலா கடுமையாகப் பாடங் கள் படிக்கிறாள். | |
| 9. சிறிசேன எப்போதும் லேட்டா கவே வேலைக்கு வருகிறான். வேலை யில் அதிக சிரத்தை எடுப்பதில்லை. | |
| மேற்குறிப்பிட்ட ஷொட்களில் 4, 5, 6 ஆகியவற்றைத் தவிர மற்றைய காட்சிகள் மாறிமாறிக் காட்டப்படுகின்றன. | |

(காட்சி முடிவு)

காட்சி 17

இடம்: தொழிற்சாலைக் கன்டீன்

நேரம்: பகல் நேரம்

**பாத்திரங்கள்**

கோபால், சிவராசா, சிறிசேன.

கோபாலும் சிவராசாவும் தொழிற் சாலைக் கன்டீனில் பிளேய்ன்ரீ வாங் கிக்கொண்டு வந்து ஒரு மேசையில்



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| அமர்கிறார்கள். | | |
| | சிவராசா: | கோபாலண்ணை, நீங்கள் இங்க வேலைக்குச் சேந்து எத்தினை வருச மாகுது? |
| | கோபால்: | பத்து வருசமாகுது |
| | சிவராசா: | சேரேக்கையே ஃபோமனாத்தான் சேந்தனீங்களே? |
| | கோபால்: | (சிரித்து) அப்பிடி ஒருதரும் சேரேலாது .. சேந்து, வேலை பழகிப் பிறகு சீனியோரிட்டிப்படிதான் ஃபோமனா வர வேணும்... நானும் உன்னைப் போலதான் சேந்தனான் |
| அப்போது சிரிசேன வந்து ஒரு பிளேய்ன்ரீ வாங்கிக் கொண்டு கன்டீனின் மறுமூலையில் இருக்கும் நண்பர்களுடன் போய்க் கலந்து கொள்கிறான். சிவராசா சிரிசேனவைச் சுட்டிக்காட்டி:- | | |
| | சிவராசா: | கோபாலண்ணை, அங்க ... அதில போற ஆள் ஆர்... |
| கோபால் திரும்பிப் பார்த்துவிட்டு:- | | |
| | கோபால்: | அது சிரிசேன ... அவன்தான் இங்க எங்கட யூனியன் லீடர் ... ஏன் கேக்கிறாய்? |
| சிவராசா மீண்டும் சிறிசேனவைப் பார்க்கிறான். சிரிசேன அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறான்:- | | |
| | சிவராசா: | நானும் வந்த நாள் தொடக்கம் பாக்கிறன், ஒரு நாளும் நேரத்துக்கு வாறது கிடையாது. ஒழுங்கா வேலை செய்யிறது கிடையாது. வேர்க்ஸ் மனேஜரும் ஒண்டும் கண்டு கொள்ளுறதில்லை |
| | கோபால்: | எனி, அவன் யூனியன் லீடர்... ஏதும் கேட்டுக்கீட்டுக் கொழுவினால், அவன் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | ஸ்ரைக் அது இதெண்டு தொடங்கிட்டான் எண்டால் பிறகு மனேஜிங் டிரெக்டர் வேர்க்ஸ் மனேஜரைத்தான் குற்றஞ் சாட்டுவார். அது தான் அந்தாளும் ஏன் கஸரச்சல் எண்டு பேசாமல் இருக்கிறது. |
| | சிவராசா: | என்னண்ணை, இது அநியாயமாய்க் கிடக்கு... யூனியன் லீடர் எண்டாத் தொழிலாளர் தலைவன். அவரே இப்பிடி நடந்தால்? அவரல்லோ எல்லாத் தொழிலாளியளுக்கும் முன் மாதிரியா இருக்க வேணும். |
| | கோபால்: | சிவராசா, இப்ப நீ வந்து எத்தினை மாதம்? |
| | சிவராசா: | ஆறு மாசமாகுது... |
| | கோபால்: | என்னும் தொடர்ந்து இங்க வேலை செய்யிறதா உத்தேசமிருக்கா... |
| | சிவராசா: | ஏன் கோபாலண்ணை அப்பிடிக் கேக்கிறியள்... |
| | கோபால்: | நாங்கள் பிரச்சினையில்லாமல் வேலை செய்யவேணுமெண்டால் எங்கட வேலையை மாத்திரம் செய்ய வேணும். |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்**

**ஒலி**

ரசிகட் **18**

**இடம்:** தொழிற்சாலை

**நேரம்:** பகல் நேரம்

**பாத்திரங்கள்**

சிவராசா, வேர்க்ஸ் மனேஜர், கந்த சாமி.

தொழிற்சாலையுள் இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தொழி லாளர்கள் மும்முரமாக வேலையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சிவராசா வேலையில் கவனமாக இருக்கிறான். வேர்க்ஸ் மனேஜர் அறைக்குள் கந்தசாமி நுழைகிறான்.

தொழிற்சாலை ஓசைகள்.

சிறிது நேரம் அவனோடு வேர்க்ஸ் மனேஜர் உரையாடுகிறார். வேர்க்ஸ் மனேஜர் பியோனை விட்டு சிவராசாவைக் கூப்பிடுகிறார். சிவராசா பக்கத்தில் நிற்பவனைத் தன் இயந்திரத்தைப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு வேர்க்ஸ் மனேஜர் அறைக்குள் போகிறான்.

வே. மனேஜர்: சிவராசா வா ... எப்பிடி வேலையெல்லாம் போகுது ... ஏதும் பிரச்சினையள் இருக்கோ.

சிவராசா: நல்லாப் போகுது சேர் ... ஒரு பிரச்சினையுமில்லை.

வே. மனேஜர்: அப்பிடித்தான் இருக்க வேணும் ... கோபால் உன்னைப்பற்றி நல்லாய்ச் சொன்னான் ... நானும் இங்க இருந்து கவனிச்சுக் கொண்டுதான் இருக்கிறன் ... உன்னைப் பற்றி பேர்ஸனல் ஃபைலுக்கு நல்ல றிப்போர்ட் அனுப்பியிருக்கிறன்.

சிவராசா: தாங்க்யூ சேர்.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | வே. மனேஜர்: நான் இப்ப கூப்பிட்டது என்னெண்டா, கோபால் ஒரு கிழமைக்கு வர ஏலாதெண்டு சிக்நோட் அனுப்பியிருக்கிறான். |
| | சிவராசா: ஓம் சேர், அண்டைக்கு நெஞ்சுக்க ஏதோ செய்யுதெண்டார். |
| | வே. மனேஜர்: அதுதான், இவர் கந்தசாமி புதிசா வேலைக்கு வந்துதிருக்கிறார்... உனக்கு கீழ வேலை பழகப் போடுறன்... நல்லாச் சொல்லிக் குடுத்து உன்னைப் போலக் கெட்டிக்காறனாக்க வேணும். |
| | சிவராசா: செய்யிறன் சேர். |
| | வே. மனேஜர்: கந்தசாமி, இவர் சிவராசா ... நல்ல கெட்டிக்காறர் ... அவரோட இருந்து அவரைப் போலவே வேலை செய்யப் பழக வேணும், |
| கந்தசாமி தலை ஆட்டுதல். சிவராசா கந்தசாமியை மெஷினடிக்குக் கூட்டிக் கொண்டு போகிறான். | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| காட்சி 19<br><br>இடம்: சிவகுருவின் வீடு.<br><br>நேரம்: இரவு நேரம்<br><br>**பாத்திரங்கள்**<br>சிவராசா, சிவகுரு, நிலும், கந்தசாமி.<br><br>சிவகுரு, வீட்டு விறாந்தையில் இருக்கிறான். சிவராசா வேலை முடிந்து வருகிறான். | | |
| | சிவராசா: | என்ன சிவகுரு, இண்டைக்கு வெள்ளன வந்திட்டாய்... |
| | சிவகுரு: | இண்டைக்கு முதலாளி ஏதோ கொன்ஃபரன்ஸ் எண்டு ஜேர்மனிக்குப் போயிட்டார்... அதுதான் அவரைக் கொண்டு போய் எயர்போர்ட்டிலை விட்டிட்டுக் காரை வெள்ளணையே வீட்டில கொண்டு போய் விட்டுட்டு வந்திட்டன். |
| | சிவராசா: | என்ன ... எம். டீ. ஜேர்மனிக்குப் போட்டாரோ? |
| | சிவகுரு: | ஏன், ஃபக்டரியில ஒருதரும் சொல்லேல்லையே?... |
| | சிவராசா: | ஒருதருக்கும் தெரியாது போல ... எங்க, முதலாளியெண்டு ஃபக்டரிப் பக்கம் வந்தால் தானே ... நான் போய்ச் சேந்து இந்த ஆறு மாசத்துக்கும் ஒருக்காத்தான் வந்திருக்கிறார்... |
| | சிவகுரு: | அவருக்கு அது மட்டுமே ஃபக்டரி எத்தினை இருக்கு... |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| நிலும் உள்ளேயிருந்து ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து சிவராசாவிடம் கொடுக்கிறாள்:- | | |
| | நிலும்: | சிவராசா, உங்களுக்கு ஒரு லெட்டர் வந்தது. |
| சிவராசா கடிதத்தை வாங்கி உடைத்துப் படிக்கிறான். | | |
| | சிவகுரு: | நிலும்... சாந்தி எங்க... |
| | நிலும்: | தூங்குறா... இருங்கோ டீ எடுத்துக் கொண்டு வாறன்... |
| | சிவகுரு: | என்ன ராசன் புதினம்... |
| | சிவராசா: | அது அருணகிரி போட்டிருக்குது... சகுந்தலாவுக்குச் சோதினை முடிஞ்சுதாம்... சகுந்தலா நல்லாச் செய்திருக்காம். கட்டாயம் யூனிவர்சிட்டிக்கு என்ரர் பண்ணுமாம்... |
| | சிவகுரு: | கெட்டிக்காரப் பெட்டை தானே ஏதோ வருத்தமெண்டு சொன்னாய். |
| | சிவராசா: | ஓ... மூச்சுவிடக் கஷ்டப்பட்டது. சோதினை முடிய டொக்டரிட்டக் காட்டிறன் எண்டது, காட்டியிருக்குமெண்டு நினைக்கிறன்... |
| நிலும் டீ கொண்டு வந்து இருவருக்கும் கொடுக்கிறாள். இருவரும் அதை எடுத்துக் கொண்டே:- | | |
| | சிவராசா: | கோபாலண்ணைக்குச் சுகமில்லையாம், ஒருக்காப் போய்ப் பாக்கவேணும்... |
| | சிவகுரு: | ஆர், உன்ர ஃபோமனுக்கோ... |
| | சிவராசா: | ஓ... நெஞ்சுவலியாம்... அந்நாள் மாய்ஞ்சு மாய்ஞ்சு வேலை செய்யும்... அதே நேரத்தில சிறிசேன ஆக்கள், அவங்களும் கோபாலண்ணையப் போல ஃபோமன்மார்தான். தாங்களும் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | வேலை செய்ய வர்றவையள் எண்டே நினைக்கிறதில்லை... எனக்கு பாக்கப் பாக்க பத்திக் கொண்டு வரும் .. |
| | சிவகுரு: | சிரிசேன யூனியன் லீடர்... நீ சும்மா அவங்களோடை ஒண்டும் கதையாதை: அவங்கள் இருக்கிறதாலதான் முதலாளியும் ஓரளவு அடக்கமாயிருக்கிறார்... |
| | சிவராசா: | கோபாலண்ணையும் உதைத்தான் சொன்னவர்... எனக்கெண்டால் இவங்கள் தொழிலாளர் தலைவன் எண்ட பதவியத் தவறாப் பயன்படுத்திறாங்கள் போலப் படுகுது... |
| அப்போது கந்தசாமி கையில் ஒரு பார்சலுடன் வருதல். | | |
| | சிவகுரு: | ஆர் உதில வாறது... |
| | சிவராசா: | அட கந்தசாமி... உந்தப் பொடியன் இண்டைக்குத்தான் எங்கட ஃபக்டரியில வேலைக்குச் சேந்தது... எங்கட செக்ஷன் தான்... |
| . ந்தசாமி உள்ளே வந்து | | |
| | கந்தசாமி: | என்ன ராசன், உடனையே வந்திட்டியள் போல ... நான் பாத்தன் காணேல்ல... பிறகு ஃபனான்டோ விட்ட வீலாசத்தைக் கேட்டுக் கொண்டு வந்தன்... |
| | சிவராசா: | இரும் இரும்... என்ன விசயம்... |
| | கந்தசாமி: | இல்லை... சும்மா ஒரு பார்சல் தர வேணும்... |
| | சிவராசா: | என்ன பார்சல்? |
| | கந்தசாமி: | கொஞ்ச மாம்பழங்கள்... |
| | சிவராசா: | என்ன கந்தசாமி நீர், எனக்கேன் மாம்பழம்... |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | கந்தசாமி: | இது நான் ஊரில இருந்து வரேக்க கொண்டு வந்தது சும்மா எடுங்கோ... ஒரு ஐம்பது பழம் வேர்க்ஸ் மனே ஜருக்கும் குடுத்தனான்... அவருக்கு வலு சந்தோசம். |
| சிவராசா உள்ளே திரும்பி:- | | |
| | சிவராசா: | நிலும் அக்கா, ஒரு டீ கொண்டு வாங்கோ... |
| கந்தசாமி கதிரையிலிருந்து எழுந்து கொண்டு போய்க்கொண்டு: | | |
| | கந்தசாமி: | சீச்சீ... டீ ஒண்டும் வேண்டாம்... நான் அவசரமாய்ப் போக வேணும்... நாளைக்குப் பத்து மணிக்கெல்லே ஷிஃப்ட் என்ன... அப்ப நான் வாறன். நாளைக்குச் சந்திப்பம். |
| | சிவகுரு: | ஆர் ஆள்?... |
| | சிவராசா: | இண்டைக்குத்தான் வேலைக்குச் சேந்தது... கந்தசாமி எண்டு பேர். கோபாலண்ணைக்குச் சுகமில்லையெண்டாப்போல அந்த செக்ஷனை உன்னைப் பாக்கச் சொல்லி இருக்கிறார் டபிள்யூ. எம். கந்தசாமியை எனக்குக் கீழதான் வேலை பழகப் போட்டிருக்கு... |
| | சிவகுரு: | ஆள் பிழையான ஆள் போல கிடக்கு... லஞ்சம் குடுத்து ஆக்களை வளைக்கலாம் எண்ட கொள்கையுள்ளவன் போல கிடக்கு. எடுத்தவுடன் ஒட்டிப் பழகிறார்... ஆளில கொஞ்சம் கவனமாயிருக்க வேணும்... |
| | சிவராசா: | எனக்கும் ஆள் சேந்த அண்டே உந்தளவு ஃபிறெண்ட்லியாப் பழகிறதப் பாக்கச் சந்தேகமாத்தான் இருக்குது... டபிள்யூ. எம். முக்கும் மாம்பழம் குடுத்தாராம்... பாப்பம். |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| காட்சி 20 | | |
| இடம்: கொழும்பில் ஜனசந்தடி மிக்க ஒரு வீதி | | |
| நேரம்: பகல் நேரம் | | |
| பாத்திரங்கள்<br>சிவராசா, சண்முகம். | | |
| சிவராசா வீதியில் நடந்து வந்துக் கொண்டிருக்கிறான். சிறிது தொலைவில் இருவர் சண்முகத்தை அடித்து வீழ்த்திவிட்டு கையில் வைத்திருந்த சிறு பையைப் பறித்துக் கொண்டு ஓடுகிறார்கள். சண்முகம் பின்னால் சத்தமிட்டுக் கொண்டு ஓடுகிறான்:- | சண்முகம்: | கள்ளங்கள்... கள்ளங்கள்... பிடியுங்கோ, என்ர காசு ஐயாயிரம் ரூபா... |
| தெருவில் போவோரிற் சிலர் சுற்றி நின்று சண்முகத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். | | |
| | சண்முகம்: | ஐயா... என்னைப் பாக்கிறதை விட்டிட்டு அவங்களைப் பிடியுங்கோ. என்ர காசைப் பறிச்சுக் கொண்டு ஓடுறாங்கள்... ஐயாயிரம் ரூபா... |
| கையை பார்த்தபடி:- | சண்முகம்: | ஐயோ ... கத்தியால வெட்டிப் போட்டாங்கள்... |
| சிவராசா நெருங்கி வந்து:- | சிவராசா: | சண்முகண்ண... இதென்ன கோலம்... என்ன நடந்தது... |
| | சண்முகம்: | சிவராசவே... சிவராசா என்ர காசு ஐயாயிரம் ரூபாயைப் பறிச்சுக் கொண்டோடுறாங்களடா ... துரத்திப் பிடி.... |



படிப்பகம்

www.padippakam.com

காட்சி விளக்கம்

ஒலி

சிவராசா: எங்கை...

சண்முகம்: உந்தப் பக்கமாத்தான் ஓடினாங்கள்.

சிவராசா: எனி அவங்களைப் பிடிக்கேலாது. பொலிசில என்றி போடுவம். இதென்னண்ண கையில ரத்தம்.

சண்முகம்: கத்தியால குத்திப் போட்டாங்களடா...

சிவராசா: வாங்கோ, முதல்ல ஆஸ்பத்திரிக்குப் போட்டுப் பொலிஸில என்றி போடுவம்... ரத்தம் பெருகுது...

இருவரும் ஒரு டக்ஸியில் ஏறிப் போதல்.

(காட்சி முடிவு)

காட்சி 21

இடம்: கொழும்பில் ஒரு தேநீர்க் கடை

நேரம்: பகல் நேரம்

பாத்திரங்கள்

சிவராசா, சண்முகம்.

ஒரு தேனீர்க் கடையில் இருவரும் தேனீர் பருகிக் கொண்டிருக்கிறார்கள். சண்முகத்தின் முகத்தில் மணிக்கட்டில் பெரிய கட்டுகள்.

சிவராசா: என்னத்தில வெங்காயம் கொண்டு வந்தனீங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சண்முகம்: | வல்லிபுரத்தின்ர லொறியில காலம கொண்டு வந்து, பெற்றா மார்க் கட்டில குடுத்திட்டுக் காசை ரொக்க மாத் தந்தாங்கள், வாங்கிக் கொண்டு மத்தியானம் யாழ்தேவில போவம் எண்டு வந்தன் ... இவங்கள் எங்க நிண்டு வந்தாங்கள் எண்டு தெரி யேல்ல... |
| | சிவராசா: | அவங்கள் நீங்கள் காசு வாங்கேக் கையே கண்டிருப்பாங்கள் ... நீங்கள் காசை என்வலப்புக்குள்ள போட்டு பெனியனுக்க வைச்சுக் கொண்டு வந்திருக்கவேணும் ... இது பையில வைச்சிருக்க அவங்களுக்குப் பறிக்கிறது சுகமாப் போச்சு. |
| | சண்முகம்: | உவங்கள் ஆக்களையே கீறிக் காசு புடுங்கிப் கோட்டுவாங்கள் போல கிடக்கு ... நல்ல காலம், அவன் வீசுக்கின கத்தி கையில பட்டுது ... தப்பித தவறிக் கழுத்தில வயித்தில பிடிச்சிருந்தா கொழும்பு றோட்டில நான் சரி. |
| | சிவராசா: | சரி வாருங்கோவன், சிவகுரு வீட்டில நிண்டிட்டு ஆறிப் போகலாம். |
| | சண்முகம்: | வேண்டாமடா தம்பி, இப்ப அஞ்சு மணி ஆகுது... உப்பிடியே ரெண்டாங் குறுக்குத் தெருவுக்குப் போய், வல்லி புரத்தின்ர மச்சான்ர கடையில ஒரு அம்பது ரூபா வாங்கிக் கொண்டு போவம். |
| சிவராசா பொக்கற்றுக்குள் இருந்து ஒரு ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்து:- | | |
| | சிவராசா: | இந்தாங்கோ, இதை வச்சிருங்கோ. |
| | சண்முகம்: | இதென்ன... அம்பது ரூபா... வேண் டாம் ராசன், நான் கடையிலை போய் வாங்கிறன்... நீ ஏற்கனவே டக்சி அது இதெண்டு செலவழிச்சுப் போட்டாய். |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | அதுக்கென்ன, பரவாயில்லை... பிடியுங்கோ ... ஒரு மனிசருக்கு ஆபத்திலை உதவாத காசை என்னத்துக்கு... |
| சண்முகம் முகத்தில் சங்கடம், நன்றி, குற்ற உணர்வு கலந்த உணர்ச்சிகள் பிரதிபலிக்கக் காசை வாங்குகிறான். | | |
| | சண்முகம்: | ராசன், ஊரில நடந்ததெல்லாத்தையும் மனசில வைச்சிருக்காதை... |
| | சிவராசா: | என்ன சண்முகண்ணை இது... இப்ப போய் இதுகளைக் கதைச்சுக் கொண்டு... நான் அதெல்லாம் எப்பவோ மறந்திட்டன்... |

(காட்சி முடிவு)

**காட்சி 22**

**இடம்:** தொழிற்சாலைக் கன்டீன்

**நேரம்;** பகல் நேரம்

**பாத்திரங்கள்**

சிவராசா, கோபால், கந்தசாமி, பொன்சேகா, தொழிற்சாலை ஊழியர்கள்.

தொழிற்சாலைக் கன்டீனில் ஒரு மேசையைச் சுற்றி சிவராசா, கோபால், கந்தசாமி ஆகியோர் தேநீர் அருந்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று பேர் கூட்டாக வந்து எல்லோருக்கும் நோட்டீஸ் விநியோகிக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | என்னண்ண, நோட்டீஸ் குடுபடுது. |
| | கோபால்: | யூனியன் ஆண்டுக் கூட்டம் - உத்தியோகத்தர் தெரிவு நடக்கப் போகுது... எனிக் கொஞ்ச நாளைக்கு ஃபக்டரி அல்லோல கல்லோலப் படப் போகுது. |
| நோட்டீஸ் கொடுப்பவர்கள் சிவராசா ஆகியோருக்கும் கொடுக்கிறார்கள். எல்லோரும் அதை வாங்கிப் படிக்கிறார்கள். | | |
| | சிவராசா: | அட, எங்கட பொன்சேகாவே இந்த முறை தலைவர் பதவிக்குப் போட்டி போடுது. |
| | கோபால்: | நாங்கள் பொன்சேகாவுக்குத்தான் சப்போட் பண்ணவேணும். |
| அப்போது பொன்சேகா இவர்கள் இருந்த மேசையை நோக்கி வரல். | | |
| | கோபால்: | உங்க பொன்சேகா வருகுது. |
| பொன்சேகா ஒரு கதிரையை இழுத்துப் பக்கத்தில் போட்டு இருந்து கொண்டு கோபாலைப் பார்த்து:- | பொன்சேகா: | எப்பிடி கொம்ராட், இப்ப சுகமா... (சிங்களத்தில்) |
| | காபால்: | பரவாயில்லை, சுகம். (சிங்களத்தில்) |
| | பொன்சேகா: | எனக்கு நல்ல ஒரு டொக்டரைத் தெரியும், போய்ப் பாக்கிறியா... (சிங்களத்தில்) |
| | கோபால்: | பாப்பம்... (சிங்களத்தில்) |
| | பொன்சேகா: | வருத்தத்தோட விளையாடக் கூடாது... கவனமா இருக்க வேணும். (சிங்களத்தில்) |
| | கோபால்: | எலக்ஷன் நிலமையள் எப்பிடி இருக்கு (சிங்களத்தில்) |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
| --- | --- |
| | பொன்சேகா: அதுதான் சொல்லவந்தனான் ... (சிங்களத்தில்) |
| பொன்சேகா, சிவராசா கந்தசாமி ஆகியோரைப் பார்த்துவிட்டுத் தமிழில் பேசுகிறான். | |
| | பொன்சேகா: இந்த முறை எலக்ஷனில நாங்க கவனமா இருக்க வேணும்... போன முறை மாதிரி ஏமாந்திடக் கூடாது. என்ன கோபால். |
| சிறிது சிறிதாக வந்து மற்றைய தொழிலாளர்களும் அந்த மேசையடியில் சேர்கிறார்கள். | |
| | ஒருவர்: இந்த முறை சிறிசேன வெல்ல ஏலாது. (சிங்களத்தில்) |
| | பொன்சேகா: அதுதான் சொல்றன் கொம்ராட். என்ன சிவராசா, முதலாளியளின்ர கைக்கூலியளுக்கு நல்ல பாடம் படிப்பிக்கவேணும். |
| | சிவராசா: ஓம் பொன்சேகா, எங்கட யூனியனுக்கு ஒரு உண்மையான தலைவன் வேணும். |
| | பொன்சேகா: மிச்சம் சந்தோசம் கொம்ராட். ஆனா நீங்க என்னை பொன்சேகா எண்டு மட்டும் கூப்பிடக்கூடாது ... கொம்ராட் எண்டு கூப்பிட வேணும். நாங்கள் எல்லாம் உழைக்கும் வர்க்கம். தொழிலாள சகோதரர்கள். ஒருத்தரை ஒருத்தர் கொம்ராட் எண்டு கூப்பிட்டு மதிப்புக் குடுக்க வேணும். |
| | கந்தசாமி: கொம்ராட், பயப்பிடாதேங்கோ ... எங்கட தமிழ் வோட்ஸ் எல்லாம் உங்களுக்குத்தான்... முதலாளி வர்க்கத்தின்ர கைக்கூலி சிறிசேன ஒழிக. |
| புன்னகையுடன் கந்தசாமியைத் தட்டிக் கொடுத்து:- | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | பொன்சேகா: சந்தோசம் கொம்ராட், காசு தந்து தொழிலாளிகள வாங்கலாம் எண்டு எங்களை சீப்பாக எண்ணுவாங்கள் முதலாளிமார்... போன எலக்ஷனுக்கு சிறிசேனவுக்காகச் செலவழித்ததெல்லாம் முதலாளியின்ர பணம் தெரியுமா?... எனிமேலும் தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் குடுக்கிறவங்களுக்குத் தொழிலாளர்கள் ஆதரவு குடுக்கக் கூடாது. |
| அப்போது சிறிசேன கன்டீனுக்கு வந்து மறுமூலையில் போய் அமர்கிறான். பொன்சேகா முதலியோரைச் சுற்றிக் கூட்டமாக நின்றவர்களில் சிலர் மெதுவாகப் போய் சிறிசேனவுக்குப் பக்கத்தில் அமர்கிறார்கள். | |
| | ஒருவன்: தொழிலாள வர்க்கம் (சிங்களத்தில்) |
| | எல்லோரும்: வாழ்க... (சிங்களத்தில்) |
| கூட்டம் கலைந்து போகிறது. கந்தசாமி தாழ்ந்த குரலில்:- | கந்தசாமி: ராசன், நேற்று வெள்ளவத்தை மார்க்கட்டடியில வேர்க்ஸ் மனேஜரைக் கண்டனான்... அவர் எங்களையெல்லாம் சிறிசேனவுக்குத்தான் வோட் போடட்டாம்... அந்தாள் நல்ல மனிசன்... எங்கட நன்மைக்காகச் சொல்லுது... நான் சும்மா இப்ப பொன்சேகா அவைக்கு வால் கட்டியிருக்கிறன் ... நாங்கள் டபிள்யூ. எம். சொன்னபடி சிறிசேனவுக்கு ரகசியமா வோட் பண்ணுவம்... பிறகு ஆர் வெல்லுகினமோ அந்தப் பக்கம் நிப்பம் ... எங்களுக்கென்ன ... நாங்கள் எங்களக் கவனமாப் பாத்துக் கொள்ளுறதுதான் புத்தி... என்ன சொல்லுறீங்கள் கோபாலண்ணை... |
| கோபாலும் சிவராசாவும் ஒருவர் முகத்தை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்தல். | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
| --- | --- |
| காட்சி 23<br><br>இடம்: தொழிற்சாலை<br><br>நேரம்: பகல் நேரம் | |
| **பாத்திரங்கள்**<br>சிவராசா, கோபால், கந்தசாமி, சிறிசேன, பொன்சேகா, சிவகுரு, மனேஜிங் டிரெக்டர், வேர்க்ஸ் மனேஜர், ஊழியர்கள், ஜெனரல் மனேஜர். | |
| 1. வாக்குச் சாவடி போல் ஒரு இடம் அமைத்து, தொழிலாளர்கள் வரிசையில் போய் வாக்களிக்கிறார்கள். | (வாத்திய இசை பெருந்தொனியில் — வசனங்கள் இல்லை) |
| 2. பொன்சேகாவும் சிறிசேனவும் தத்தம் கூட்டத்தினரோடு கன்டீனில் இருந்து கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். | |
| 3. எலக்ஷன் மேற்பார்வையாளராக வேலை செய்யும் வேர்க்ஸ் மனேஜருடன் கந்தசாமி நின்று உதவி புரிகிறான். | |
| 4. வாக்குகள் எண்ணப்படுகின்றன. | |
| 5. சிவகுரு கார் ஓட்டிவர மனேஜிங் டிரெக்டர் அதில் வந்து இறங்குகிறார். ஜெனரல் மனேஜர் வரவேற்கிறார். | |
| 6. தொழிலாளர்கள் கோஷமிடுகிறார்கள். | |
| 7, எண்ணப்பட்ட முடிவுகள் ஒரு தாளில் எழுதப்படுகின்றன. | |
| 8. பொன்சேகா குழுவினர் ஒரு புறமும் சிறிசேன குழுவினர் ஒரு புறமும் குழுமி நிற்கிறார்கள். | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| 9. முடிவுகள் அறிவிக்கப்படுகிறது. | | (வாத்திய இசை பெருந்தொனியில் — வசனங்கள் இல்லை) |
| 10. பொன்சேகா குழுவினரிடம் ஒரே ஆரவாரம். | | |
| 11. சிறிசேன குழுவினர் தலையைத் தொங்கப்போட்டபடி போகிறார்கள். | | |
| 12. கந்தசாமி ஓடிவந்து, பொன்சேகாவை உயரத்தூக்குகிறான். எல்லோரும் கோஷமிடுகிறார்கள். | | |
| 13. ஒரு பியோன் வந்து ஒரு தந்தியை சிவராசாவிடம் கொடுக்கிறான். சிவராசா அதைப் பார்த்து விட்டு வெளியே ஓடி வருகிறான். | | (வாத்திய இசை முடிவடைகிறது) |
| வெளியே சிவகுரு காரில் சாய்ந்தபடி நிற்கிறான். சிவராசா ஓடி வந்து:- | சிவராசா: | சிவகுரு, நான் உடன ஊருக்குப் போக வேணும். |
| | சிவகுரு: | என்ன விசயம், திடீரென்று... |
| சிவராசா சிவகுருவிடம் தந்தியைக் கொடுக்கிறான். சிவகுரு தந்தியைப் படிக்கிறான். முகத்தில் அதிர்ச்சி: | சிவகுரு: | ட்றெயினுக்கு நேரமாகிட்டுது... |
| சிவராசா தொழிற்சாலைக் கடிகாரத்தைப் பார்த்து:- | சிவராசா: | இப்ப பதினொரு மணி, 11.55க்குத் தானே ட்றெயின்... நான் இப்பிடியே போறன். |
| பொக்கட்டுக்குள்ளிருந்த காசை எடுத்து எண்ணிப் பார்க்கிறான். | சிவராசா: | இருவது ருபா இருக்கு. சிவகுரு ஒரு முப்பது ருபா தா. |
| சிவகுரு காசு கொடுக்க, கோபால் வருகிறான். | கோபால்: | சிவராசா, என்ன விசயம்... |
| | சிவராசா: | கோபாலண்ண, நான் ஒருக்கா ஊருக்குப் போறன், லீவு போட்டுவிடுங்கோ. ஐயா பனையால விழுந்துபோனாராம். |
| சிவராசா ஓடிப்போக மற்றைய இருவரும் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். | | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்** | **ஒலி**

காட்சி 24

இடம்: யாழ். புகையிரத நிலையம், யாழ். வைத்தியசாலை,

நேரம்: இரவு 9.00 மணி

**பாத்திரங்கள்**

சிவராசா, சண்முகம், அருணகிரி, சில கிராமத்து இளைஞர்கள், வாச்சர்.

யாழ்ப்பாணம் ஸ்டேஷனில் ட்ரெயின் வந்து நிற்கிறது. சிவராசா தொழிற் சாலை உடுப்புடனேயே ட்றெயினை விட்டு இறங்கி வெளியே வருகிறான். வாசலில் அருணகிரி மற்றும் சில இளைஞர்கள் காத்து நிற்கிறார்கள். சிவராசா அருணகிரியை அணுகி:-

சிவராசா: ஐயாவுக்கு இது எப்ப நடந்தது.

அருணகிரி: நேற்றுப் பின்னேரம் ஒரு சின்ன வடலிப்பனை... அதில ஏறி இருக்கிறார்... அரைவாசிப்பனையில வரேக்க கங்குமட்டை வழுக்கி விழுந்திட்டார்... நல்ல காலம் அவ்வளவு உயரமில்லை.

எல்லோரும் முன்னால் நிற்பாட்டி வைத்திருக்கும் காரை நோக்கி விரைவாக நடக்கிறார்கள்.

அருணகிரி காரின் முன் கதவைத் திறக்கிறான். சிவராசா அதில் ஏறிக் கொண்டு:-

சிவராசா: இப்ப எப்பிடி இருக்கு...

அருணகிரியும் ஏறிக் கொண்டு கதவைச் சாத்தியபடி:-

அருணகிரி: ஆபத்தில்லையெண்டு டொக்டர் சொல்லிப் போட்டார்... ஒக்சிஜன் குடுத்திருக்கு... நினைவு இன்னும் வரேல்ல... அதிர்ச்சி தானாம்...

மற்றைய இளைஞர்கள் காரின் பின் சீட்டில் ஏறி அமர கார் புறப்பட்டுச் செல்கிறது.

சிவராசா: அம்மா என்ன செய்யிறா...

அருணகிரி: கொம்மா குளறினபடி... பனையால விழுந்திதெண்டா ஆரும் பயப்பிடுகினம்தானே... இப்ப அவதான் ஐயாவோட நிக்கிறா.

கார் ஓடிக் கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | இப்ப என்னை உள்ளுக்க் விடு வினமே. |
| | அருணகிரி: | சண்முகம் மாமா அங்க நிக்கிறார். எல்லாம் வாச்சரோட கதைச்சு ஒரு மாதிரிப் போய்ப் பாக்கலா மெண்டார். |
| | ஒரு இளைஞன்: | சண்முகமண்ணை பாவம் ... அந் தாள்தான் எங்கையோ நிண்டு கண் டிட்டு ஒடி வந்து தூக்கிக் காரைப் பிடிச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தது ... ராத்திரி முழுக்க இங்க நிண்டு, பிறகும் அவர்தான் இரவு 12 மணிக்கு யாழ்ப்பாணம் போஸ்ட் ஒஃபிஸில போய் உனக்குத் தந்தியும் அடிச்சவர். |
| | அருணகிரி: | அந்தாள் கொழும்பில நடந்த விச யத்த இங்க ஊர் முழுக்கச் சொல்லித் திரிஞ்சுது. |
| கார் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குமுன் போய் நிற்கிறது. கேட்டில் சண்முகம் நிற்கிறான். எல்லோரும் இறங்கி சண்முகத்திடம் போகிறார்கள். சண்முகம் சிவராசாவைக் கூட்டிக் கொண்டு வாச்சரிடம் போய்:- | அருணகிரி: | அங்க... சண்முகம் மாமா நிக்கி றார். |
| | சண்முகம்: | தம்பி, இவர்தான் நான் சொன்ன ஆள். அவற்ற மகன். . |
| வாச்சர் பெரும் உதவி ஒன்று செய்யும் முகபாவத்துடன் அவனைச் சிறிது தூரம் அழைத்துப் போய்:- | வாச்சர்: | தம்பி, இதால போய் அப்பிடித் திரும்பினால் வரும்... காயவாட்டு... சத்தம் கித்தம் போடாதயும், நேசம்மா பிறகு என்னைப் பேசுவா. |
| சிவராசா உள்ளே போதல். | | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| காட்சி 25<br>இடம்: சங்கரலிங்கம் வீடு<br>நேரம்: மாலை சுமார் 4 மணி | | |
| **பாத்திரங்கள்**<br>சிவராசா, சகுந்தலா, சங்கரலிங்கம். | | |
| சகுந்தலா விறாந்தைப்படியில் இருந்து றோட்டைப் பார்த்துக் கொண்டிருக் கிறாள். சிவராசா கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறான். சகுந் தலா எழுந்து கொண்டே:- | சகுந்தலா: | வாருங்கோ ... வாருங்கோ ... வந்து ஒரு கிழமையாகுது ... இப்பதான் வழி தெரிஞ்சுதாக்கும் ... சரியாப் பத்து மாதத்துக்குப் பிறகு பாக் கிறன். |
| சிவராசா வாசற் படி ஒன்றில் அமர் ந்தவாறே:- | சிவராசா: | ஐயா பாடுகேடாக் கிடக்க நான் ஒவ்வொரு வீட்டையும் விசிட் பண் ணவே இங்க வந்தனான் ... எங்க ஐயா. |
| சகுந்தலா ஹோல் வாசல் நிலையில் சாய்ந்தபடி:- | சகுந்தலா: | ஏன் படியில இருக்கிறீங்கள் ... இப் பிடிக் கதிரையில இருங்கோவன் ... ஐயா இண்டைக்குப் பின்னேரம் நான் ஸ்டேஷனுக்குப் போறதுக்குச் கார் பிடிக்கப் போட்டார். |
| | சிவராசா: | நாங்கள் சாதி குறைஞ்சனாங்கள், உங்கட வீட்டில கதிரேல இருக்க லாமோ. |
| சகுந்தலா வேதனையுடன் நிலத்தைப் பார்த்துக் கொண்டு நிற்றல். | சிவராசா: | நான் சும்மா பகிடிக்கு... இது என்ர வீடு மாதிரித்தானே... நான் எங்க |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | இருந்தாலும் என்ன ... அது சரி, இண்டைக்கு யூனிவேசிட்டிக்குப் போ நீர், எங்க எனக்கு ட்றீட். |
| | சகுந்தலா: | நான் யூனிவசிட்டிக்குப் போறதுக்கு நீங்களல்லோ எனக்கு ட்றீட் தர வேணும். அதுசரி, உங்கட ஐயாவுக்கு இப்ப எப்பிடி? |
| | சிவராசா: | ஐயாவுக்கு இப்ப சுகம்... எழும்பி நடக்கத்தான் இன்னும் ரெண்டு மூண்டு மாசம் செல்லும் போல கிடக்கு... ஆனால் அவர் எனித் தொழில் செய்யிற நினைவை விட்டுப் போட வேணும். |
| | சகுந்தலா: | ஏதோ... இந்தளவுக்குத் தப்பினதே பெரிய புண்ணியம்... நான் நேற்று மத்தியானம் ஆஸ்பத்திரிக்கு வந்து பாத்தனானில்லே. |
| | சிவராசா: | ஓ... அம்மா சொன்னா... ஹோர்லிக்ஸ் போத்தலுக்குத் தாங்ஸ். |
| சிவராசா சிரிக்க சகுந்தலாவும் சிரிக்கிறாள். | | |
| | சிவராசா: | ஆர், என்னுமொரு பிள்ளையோட வந்தீங்களாம். |
| | சகுந்தலா: | அது யசோ... என்ர பெஸ்ட் ஃபிறெண்ட். |
| | சிவராசா: | அப்ப நான்... |
| | சகுந்தலா: | என்ர ஃபெஸ்ட் ஃபிறெண்ட். |
| சகுந்தலா நாணத்தில் சிரிக்கிறாள். சிவராசா சிரித்துக் கொண்டு:- | சிவராசா: | சூ... இங்கிலிஸில அடுக்கு வசனம் இப்பவே உப்பிடியெண்டாப் பிறகு யூனிவசிட்டிக்குப் போனால் பிடிக்கேலாது. |
| | சகுந்தலா: | ஏன் யூனிவசிட்டிக்குப் போறாக்களுக்குக் கொம்பேதும் முளைக்கிறதே... |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | கொம்பு முளைக்கிறதோ இல்லையோ ஒரு கெப்பர் வாறது... பிறகு நாங்கள் எல்லாம் கண்ணுக்குத் தெரிய மாட்டம். |
| மனவேதனை முகத்தில் பிரதிபலிக்க: | | |
| | சகுந்தலா: | ராசன், என்னை நீங்கள் புரிஞ்சு கொண்டது இவ்வளவுதான்... என்ர மனத வேதனைப்படுத்திறீங்கள். |
| | சிவராசா: | என்னை நீர் புரிஞ்சு கொண்டது அவ்வளவுதான். |
| சகுந்தலா சிவராசாவின் முகத்தைக் கேள்விக் குறியுடன் பார்க்கிறாள். | | |
| | சிவராசா: | உம்மை உண்மையா வேதனைப்படுத்த என்னால முடியுமே. |
| | சகுந்தலா: | என்னை நீங்கள் வேதனைப்படுத்த மாட்டன் எண்டுறீங்கள்... நீங்கள் போய்ப் பத்து மாசமா எனக்கு ஒரு கடிதமும் போடேல்ல. |
| | சிவராசா: | ஏன் போடேல்ல, போட்டனான் தானே. |
| சகுந்தலா ஆச்சரியத்துடன் சிவராசாவைப் பார்த்தல். | | |
| | சிவராசா: | அருணகிரிக்கு. |
| | சகுந்தலா: | எனக்குப் போடேல்ல எண்டல்லோ சொன்னனான். |
| | சிவராசா: | அருணகிரிக்குப் போட்டாலென்ன, உமக்குப் போட்டால் என்ன. |
| | சகுந்தலா: | பிளீஸ் ராசன், எனி நான் யூனிவசிட்டிக்குப் போயிடுவன்... பேராதனைக்கு ... எனக்கு காயிதம் போடுங்கோ... நான் போன உடன உங்களுக்கு என்ர விலாசத்தை எழுதிறன். |



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்** **ஒலி**

சிவராசா: என்ர விலாசம் தெரியுமே?

சகுந்தலா: ஓம்.

சிவராசா: அப்ப, நீங்கள் எனக்குப் போட்டிருக்கலாமே.

*சகுந்தலா சந்தோசம் கலந்த அதிர்ச்சியுடன் சிவராசாவை நோக்கி:-*

சகுந்தலா: எப்பிடி ராசன்?

சிவராசா: போடுற மாதிரிதான்.

சகுந்தலா: உண்மையாவே சொல்லுறீங்கள்.

சிவராசா: பின்ன பொய்யே...

*சகுந்தலா மகிழ்ச்சியுடன்:-*

சகுந்தலா: எனிப் பாருங்கோவன், ஒவ்வொரு நாளும் போடுவன்... இப்ப உங்களுக்குப் பிரச்சனையள் ஒண்டுமில்லையே ராசன்.

சிவராசா: அதுதான் சொன்னனே ... கொழும்புக்குப் போனா எனக்குப் பிரச்சினை இருக்காதெண்டு.

சகுந்தலா: எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்குத் தெரியுமே ராசன் ... சண்முகம் மாமாவும் கொழும்பால வந்த நாள் தொடக்கம் உங்களப் புழுகினபடி.

சிவராசா: சண்முகம் உப்புடி இருப்பார் எண்டு நான் கனவிலும் நினைக்கேல்ல.

சகுந்தலா: உண்மையில ராசன், எங்கட ஊர்ச் சனங்களெல்லாம் ஒரு வஞ்சகமில்லாததுகள், அடிப்படையில எல்லாரும் நல்ல மனிசர்... சில சில நேரங்களில கொஞ்சம் கூடாதவையாயிருப்பினம் ... ஆனாலும் பெரும்பாலும் நல்லவை.

சிவராசா: நீங்கள் சும்மா உங்கட சொந்தக்காறர் எண்டதுக்காண்டிச் சொல்லுறீங்கள்... நான் இந்த ஊரை விட்டு கொழும்புக்குப் போனதுக்கு காரணமே



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்** | **ஒலி**

சண்முகம் கூட்டம் என்ர சாதிய இழுத்து என்னை அவமானப்படுத்தினதுதான்.

சகுந்தலா அப்பிடியே கதவு நிலையோடு இருத்தல்.

சகுந்தலா: ராசன், நான் கனக்க கதைக்கிறன் எண்டு நினைக்காதீங்கோ ... சண்முகம் மாமா உங்களோட சண்டை பிடிக்கேக்க உங்கள எளிய சாதி எண்டு பேசின மாதிரி எங்கட ஐயாவோட சண்டை பிடிக்கேக்க எளிய வாத்தி எண்டு பேசியிருக்கும் ... எப்பவும் சண்டை பிடிக்கேக்க ஒருதர் மற்றவரத் தாழ்த்திப் பேசுறது வழக்கந்தானே.

சிவராசா: அப்ப இப்ப யாழ்ப்பாணத்தில சாதிப் பிரச்சினை இல்லை?

சகுந்தலா: என்னைப் பொறுத்தளவிலை, இப்ப 1971ம் ஆண்டு... இந்த நிலையில யாழ்ப்பாணத்தைப் பாருங்கோ ... சாதிப் பாகுபாடு மனத்தளவில் இருக்கலாம்... ஆனால் உந்தக் கதையள், நாடகங்களில வாறமாதிரி, உயந்த சாதிக்கு முன்னால தாழ்ந்த சாதி சேட்டுப் போடக் கூடாது, ஒரே பள்ளிக்குடத்தில படிக்கக் கூடாது, கோயிலுக்கு போகேலாது, தேத்தண்ணிக் கடேக்க போகேலாது எண்டதெல்லாம் எனக்கென்னவோ பழங்கதை மாதிரித் தெரியுது... எனக்கிப்ப 18 வயது... நான் பாக்கிற யாழ்ப்பாணம் அப்பிடி இல்லை... எனக்குப் பாத்தால் இந்த எழுத்தாளர்மாருக்குத்தான் இந்தப் பிரச்சினையளை விட மனமில்லைப் போல கிடக்கு.

*சிவராசா சிரித்து:*

சிவராசா: நான் நினைக்கேல்ல, நீர் இவ்வளவு பேசுவீர் எண்டு... யாழ்ப்பாணத்தில சாதிப் பிரச்சினை எண்டு ஒரு ஆராய்ச்சியே நடத்துறீர் போல.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | சகுந்தலா: உண்மையா ராசன், இந்தச் சாதிப் பிரச்சினை எண்டது இல்லையெண்டால், அது எனக்கு சந்தோசத்தைத்தாற மாதிரி வேற ஒருதருக்கும் தராது. |
| | சிவராசா: உங்கட விருப்பம்போல நடந்தால் நல்லதுதான் ... அது சரி, இப்ப எப்பிடி உங்கட வருத்தம்... |
| | சகுந்தலா: அது தன்பாட்டில மாறீட்டுது. |
| அப்போது சங்கரலிங்கம் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே வரல். சிவராசாவும் சகுந்தலாவும் எழுந்து நிற்கிறார்கள். | |
| | சங்கரலிங்கம்: என்ன ராசன், சின்னானுக்கு இப்ப சுகம் போல... எப்ப நீ கொழும்புக்குப் போறாய்? |
| | சிவராசா: நாளை நாளையண்டைக்குப் போவம் எண்டு இருக்கிறன் ஐயா. |
| | சங்கரலிங்கம்: சிவகுரு வந்து நிண்டது போல இருக்கு... போட்டானே. |
| | சிவராசா: ஓமையா... நான் தந்தியைக் கண்டு போட்டு வர, அவனும் மெயில் ட்றெயினில வந்திட்டான் ... பிறகு நிலவரம் அறிஞ்சு திரும்பிப் போட்டான். |
| | சங்கரலிங்கம்: இண்டைக்கு சகுந்தலா பேராதனைக்குப் போறா... தெரியுந்தானே. |
| | சிவராசா: ஓமையா... |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| காட்சி 26<br><br>இடம்: தொழிற்சாலைக் கன்டீன்<br><br>நேரம்: பகல் நேரம்<br><br>**பாத்திரங்கள்**<br>சிவராசா, பொன்சேகா, கந்தசாமி, தொழிற்சாலை ஊழியர்கள். | |
| கன்டீனில் பொன்சேகாவைச் சுற்றி கந்தசாமியும் வேறு பல ஊழியர்களும் குழுமியிருக்கிறார்கள். அப்போது சிவராசா உள்ளே வருகிறான். பொன்சேகா சிவராசாவைப் பார்த்து விட்டு:- | பொன்சேகா: கொம்ராட், இங்க வாங்க. |
| சிவராசா இவர்களை நோக்கி வர பொன்சேகா பக்கத்தில் இருந்த கதிரையைத் தனக்கருகே இழுத்து வைத்து, சிவராசா அருகே வந்ததும் கதிரையைக் காட்டி: | பொன்சேகா: இப்பிடி உக்காருங்க... எப்பிடி ஃபாதருக்கு சுகமா?<br><br>சிவராசா: கொஞ்சம் பறவாயில்லை.<br><br>பொன்சேகா: அது சுறுக்கா மாறீடும்... இப்ப நாங்க ஒரு முக்கியமான விசயம் பேசுறம், நீங்க வந்தது நல்லாப் போச்சு. |
| சிவராசா என்ன விசயம் என்பது போலப் பொன்சேகாவைப் பார்த்தல். | பொன்சேகா: சொல்லுங்க கந்தசாமி.<br><br>கந்தசாமி: ராசன், வாற திங்கட்கிழமையிலை இருந்து எங்கட யூனியன் ஸ்ட்ரைக் செய்யிறதா இருக்கிறம். |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
| --- | --- | --- |
| பொன்சேகா ஒருவித சிரிப்பு முகத்தில் தவழ இவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான், மற்றவர்களும் இவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். | | |
| | சிவராசா: | ஏன் ஸ்ட்ரைக்? |
| | கந்தசாமி: | இவ்வளவு காலமும் சுரண்டல் வர்க்கத்தின் கைப்பொம்மையளின்ர கையில அகப்பட்டு உறங்கிக் கிடந்த எங்கட யூனியனுக்குப் புத்துயிர் அளிக்கும் முயற்சி. |
| கந்தசாமி பொன்சேகாவின் முகத்தைப் பார்க்கிறான். பொன்சேகா புன்சிரிப்புடன் தலையாட்டி ஆமோதிக்கிறான். | | |
| | சிவராசா: | யூனியனுக்குப் புத்துயிர் அளிக்கிறதுக்கு ஏன் ஸ்ட்ரைக் செய்வான்? |
| | பொன்சேகா: | என்ன கொம்ராட், தெரியாத மாதிரிப் பேசுறீர் ... தொழிலாளர்களிட ஒற்றுமை, உணர்ச்சி, முக்கியத்துவம், பலம் எல்லாத்தையும் காட்டுறது ஸ்ட்ரைக்தானே. |
| | சிவராசா: | கொம்ராட் பொன்சேகா, நான் ஒண்டை விளக்கமாச் சொல்லி வீடுகிறன் ... சிறிசேன யூனியன் தலைவர் ஸ்தானத்தை ஒரு தொண்டாக் கருதாமல் ஒரு பதவியாப் பிரயோகிச்சு, சலுகையளை அனுபவிச்சுக் கொண்டு, ஒரு சரியான தொழிலாளியா இருக்காமல் போனதுக்கு எதிராத்தான் உங்களைத் தலைவராத் தெரிவு செய்திருக்கிறம் ... தொழிலாளருக்குப் பலம் இருக்குதான், ஆனா அதை ஞாயமாக் காட்ட வேணும்... சும்மா பலமிருக்கெண்டதுக்காக அதைக் காட்டிக் கொண்டிருந்தால் சண்டித்தனமாப் போயிடும். |
| | ஒருவன்: | சிவராசா கனக்கக் கதைக்கிறான். (சிங்களத்தில்) |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | கந்தசாமி: | என்ன ராசன், தன்னைத் தலைவ ரெண்டு கூப்பிட வேண்டாம், தோழர் எண்டு கூப்பிட வேணுமெண்டு சொல் லுற கொம்றாட் பொன்சேகா, தொழிலாளருக்குப் பிழையான விச யத்தைச் செய்வாரே? |
| | ஒருவன்: | அதுதானே. |
| பொன்சேகா அவர்களைக் கையமர்த்தி ஆறுதலாக இருக்கச் சொல்லிவிட்டு, அதே புன்னகையுடன் சிவராசாவைப் பார்த்து:- | | |
| | பொன்சேகா: | கொம்ராட் சிவராசா, இப்ப நாங்கள் பிழை விடுகிறம் எண்டு ஏன் சொல் நீங்க? |
| | சிவராசா: | தொழிலாளர் ஸ்ட்ரைக் செய்யிற துக்கு ஒரு ஞாயமான கோரிக்கை வேணும். |
| | பொன்சேகா: | நீங்க இவ்வளவும் கதைக்க முதல் அதக் கேட்டிருக்க வேணும் ... நீங்க உங்கட எனேஜியை வீணா வேஸ்ட் பண்ணுறீங்க. |
| சிலர் கேலியாக நகைத்தல். பொன் சேகா அவர்களைப் பார்த்து ஒரு பெருமிதம் கலந்த அமர்த்தலான புன் னகை புரிகிறான். | | |
| | சிவராசா: | என்ன கோரிக்கை? |
| | பொன்சேகா: | நீங்க இப்ப உங்களுக்குக் கிடைக்கிற பணத்தைக் கொண்டு வசதியா வாழ முடியுதா? |
| | சிவராசா: | வசதியப் பற்றி எனக்குத் தெரியாது... மூண்டு நேரம் சாப்பிட்டு, மரியா தையா உடுத்து வாழ முடியுது. |
| | பொன்சேக : | வசதியெண்டு சொன்னா ... உங்கட முதலாளியப் போல உங்களால வாழ முடியுமா |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | முடியாது. |
| | பொன்சேகா: | ஏன் முடியாது? |
| | சிவராசா: | வருமானம் போதாது. |
| | பொன்சேகா: | ஆ... அந்த வருமானம் வர என்ன செய்ய வேணும்? |
| எல்லோரும் பொன்சேகா, சிவராசாவை மடக்குகிறார் என்று உற்சாகமாக இருக்கிறார்கள். | | |
| | ஒருவன்: | ஸ்ட்ரைக் செய்ய வேணும். |
| | சிவராசா: | உழைக்க வேணும். |
| | பொன்சேகா: | உங்கட உழைப்பு காணாதா? |
| | சிவராசா: | உழைப்பு காணாதெண்டில்ல ... எங்கட வருமானம் முதலாளியின்ர வருமானத்தில தங்கியிருக்கு. |
| | பொன்சேகா: | முதலாளிக்கு வருமானம் வர்றது ஆரால? |
| | சிவராசா: | தொழிலாளியால. |
| | பொன்சேகா: | அதுதான் கொம்ராட் சிவராசன், நான் சொல்றன்... அப்பிடி எங்களால வருமானத்தைப் பெற்று வசதியா வாழுற முதலாளீட்ட இருந்து நாங்களும் வசதியா வாழப் பணம் கேக்கத்தான் இந்த ஸ்ட்ரைக்... மூண்டு மாத போனசை ஆறு மாதமாக் கூட்டித்தர வேணும்... அடிப்படைச் சம்பளத்தை நூறு ரூபாவால கூட்ட வேணும்... இதுதான் எங்கட கோரிக்கைகள். |
| எல்லோரும் ஆரவாரமாகக் கை தட்டுகிறார்கள். | | |
| | சிவராசா: | உங்கள் எல்லாற்ற நன்மைக்காகவுந்தான் நான் சொல்லுறன்... தயவு |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | செய்து நான் சொல்லுறதக் கொஞ்சம் கேளுங்கோ. |
| | ஒருவன்: | நீ எங்களுக்கு ஒண்டுமே சொல்ல வேண்டாம்... திங்கட்கிழமை தொழிலாளர் உரிமைக்காக ஸ்ட்ரைக். (சிங்களத்தில்) |
| | சிவராசா: | (பலமாக) தயவு செய்து தோழர்களே, நான் சொல்லுறதக் கேளுங்கோ... தொழிலாள வர்க்கம் சீரழிந்து போவதற்கு நாம் எடுக்கும் கண்மூடித்தனமான நடவடிக்கைகள் காரணமாக இருக்கக் கூடாது. நாளைக்கு உங்களுக்கு வேலை இல்லாமற் போய், உங்கள் குடும்பம் நடுத்தெருவில நிண்டால் ஆர் வந்து காப்பாற்றப் போகினம். |
| எல்லோரும் சிறிது மௌனமாகிறார்கள். சிவராசா எழுந்து நின்று பொன்சேகாவைப் பார்த்து:- | சிவராசா: | எங்கட வருமானம் முதலாளியின்ர வருமானத்தில தங்கியிருக்கெண்டு சொன்னனான் ... உங்களுக்கு அது விளங்கினதா? |
| பொன்சேகா சிறிது ஆவேசமாக நிற்றல். சிவராசாவைப் பார்த்தல். | | |
| | சிவராசா: | கொம்ராட், நல்லாக் கேளுங்கோ... நான் இப்ப ஒரு நடுத்தர வருமானமுள்ள வீட்டில விறகு கொத்திறன் எண்டு வைச்சுக் கொள்ளுங்கோ... அவர் எனக்கு அதுக்குக் கூலியா ஐஞ்சு ரூபாதான் தருவார்... |
| சிவராசா எல்லோருடைய முகத்தையும் பார்க்கிறான். எல்லோரும் சிவராசாவைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். சிவராசா தொடர்கிறான். | சிவராசா: | ... ஆனால் அந்தளவு விறகை ஒரு பணக்கார வீட்டில கொத்தினால் அவர் எனக்கு பத்து ரூபா தருவார். |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| பொன்சேகா ஏளனச் சிரிப்புடன்:- | பொன்சேகா: | இல்லை, பணக்காரன் உமக்கு மூண்டு ரூபாதான் தருவான். |
| | சிவராசா: | அங்கதான் என்ர பொயின்ற் இருக்கு... உண்மையில நான் விறகு கொத்துறபோது எனக்கு தொழில் தாற நடுத்தரக் குடும்பத்தவர் தன்ர வருமானத்துக்கேற்ப ஐஞ்சு ரூபாதான் தர முடியும்... அதை வாங்கிறதுதான் நீதி... அதே போல பணக்காறன் எனக்குப் பத்து ரூபா தர முடியும்... தந்தால் நல்லது... இப்பிடி நீங்கள் சொல்லுற மாதிரி மூண்டு ரூபா தான் தந்தால் அது அநீதி... அங்க தான் நாங்கள் எதிர்த்துப் போராட வேணும். |
| | பொன்சேகா: | ஏன் எல்லாத் தொழிலாளர்களும் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட அளவு விறகு கொத்தி ஒரு குறிப்பிட்ட அளவு கூலியை நிர்ணயித்து தொழிலாளர் சட்டம் போட்டு வீட்டால் இந்தப் பிரச்சினைக்கே இடமில்லையே. |
| | சிவராசா: | கொம்ராட், நீங்கள் சொல்லுறது முற்றிலும் சரி. எப்போது? தொழில் கொடுப்போர் எல்லாம் ஒரே மட்டத்தில் இருக்கும்போது... சரி ஒரு அளவு விறகு கொத்தப் பத்து ரூபா என்று நிர்ணயித்துள்ளதாக வைத்துக் கொள்ளுவம்... அதைத் தர முடியாத நடுத்தர வர்க்கத்தினன் என்ன செய்வான்... தானே விறகைக் கொத்துவான்... அப்போது அவன் தரக் கூடிய ஐஞ்சு ரூபாவையும் ஒரு தொழிலாளி இழந்து விடுவான்... இப்போது புரிகிறதா, எமது கோரிக்கைகள் எமது முதலாளியின் வருமானத்துக்கேற்ப இருக்க வேணும். |
| சிலரது முகத்தில் சிறிது தெளிவு பிறக்கிறது. | | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | பொன்சேகா: நீங்க சொல்றதை நான் மறுக்கேல்ல. |
| | சிவராசா: இப்போ மூண்டு மாத போனஸை ஆறு மாதமாக் கூட்ட வேண்டும். அடிப்படைச் சம்பளத்தில நூறு ரூபா கூட்ட வேண்டும். இதுதான் எமது கோரிக்கை. |
| பொன்சேகா ஆம் எனத் தலையாட்டுதல். | |
| | சிவராசா: இப்போ இருக்கிற நிலை எத்தினை வருசமாக இருந்து வருகுது? |
| | ஒருவன்: ஐஞ்சு வருசமா. (சிங்களத்தில்) |
| | சிவராசா: சரி, இந்த ஐஞ்சு வருசத்தில எங்கட உற்பத்தி எவ்வளவு கூடியிருக்கு... முதலாளிக்கு வருமானம் எவ்வளவு கூடியிருக்கு? |
| எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தல். | |
| | சிவராசா: கொம்ராட் பொன்சேகா, அதுதான் சொல்றன்... தொழிற்சாலையள் ஒரு நாட்டின்ர பொருளாதார வளர்ச்சிக்கு உயிர்நாடி, அங்க தொழிலாளி கடுமையாக உழைக்க வேணும், அதனால உற்பத்தி பெருகி முதலாளிக்கும் நாட்டுக்கும் வருமானம் பெருக வேண்டும். வருமானம் பெருகும் போது, முதலாளி தொழிலாளிக்கு உரிய பங்கைக் கொடுத்து அவர்களை மேலும் உற்சாகப்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரித்து, நாட்டை, மக்களை வளம்படுத்த வேண்டும்... இதுதான் நியதி, இல்லையா? |
| ஒரு சில தொழிலாளிகளிடையே இருந்து சிறிது சலசலப்பு: | |
| | ஒருவன்: அதெண்டா உண்மை. (சிங்களத்தில்) |
| | சிவராசா: ஒரு நல்ல வருமானம் பெறும் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | முதலாளி அதற்குக் காரணமான தொழிலாளியைப் புறக்கணிப்பது எத்தனை கொடுமையோ அநீதியோ அத்தனை கொடுமையானது தொழிலாளர்கள் முதலாளியின், நாட்டின் வருமானம் தெரியாமல் அதிக சம்பளம் கேட்டுத் தொழிற்சாலையை இயங்க முடியாமற் செய்து, முதலாளிக்கு நாட்டுக்கு ஏன், கடைசியில் முதலாளி தொழிற்சாலையை மூடி விட்டால் தங்களுக்கே தீங்கைத் தேடிக்கொள்வது. |
| பொன்சேகாவின் முகத்தில் ஒருவித கலவரம். | | |
| | ஒருவன்: | நாங்கள் இப்ப என்ன செய்ய வேணும்? |
| | சிவராசா: | தோழர்களே, நாங்கள் வசதியாக வாழ வருமானம் தேவைதான் ... அதற்கு ஸ்ட்ரைக்தான் ஒரே வழியல்ல... அது கடைசி ஆயுதம். முதலில் இந்த ஐந்து வருடங்களில் கம்பனியின் வருமானம் எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்று பாக்க, வரவு செலவுக் கணக்கைக் காட்டச் சொல்லிக் கேட்போம். |
| பொன்சேகா அலட்சியமாக: | பொன்சேகா: | அவங்கள் முதலில எங்களுக்குச் சரியான கணக்கைத்தான் காட்டு வாங்கள். |
| | சிவராசா: | அப்பிடி அவங்கள் காட்டும் கணக்கில் நம்பிக்கையில்லாவிட்டால் நாங்கள் எங்கட யூனியன் மூலமா ஓடிட்டரை நியமித்துக் கணக்கை சோதிப்பம்... அப்பிடிச் சோதிச்சு அவையளின்ர வருமானம், எங்கட கோரிக்கையளை நிறைவேற்றப் போதுமானதெண்டால் நாங்கள் எங்கட கோரிக்கையளைச் சமர்ப்பிப்பம். பேச்சுவார்த்தைகளை நடத்துவம்... இயலாமற் போனால் கடைசி ஆயுதமாக வேலை நிறுத்தத்தைப் பிரயோகிப்பம் ... அதை |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | | ஒலி |
|---|---|---|
| | | விட்டிட்டுத் தொழிலாள வர்க்கம், முதலாளி வர்க்கம் எண்டு வர்க்கம் பிரிச்சுக் கொண்டு, ஒருத்தரையொருத்தர் கண்மூடித்தனமா எதிர்த்துக் கொண்டு நிக்கிறது அவ்வளவு நல்லதில்லை... தொழிலாளர் இயக்கம் எல்ட, உயர்ந்த கொள்கைகளுக்காக அமைக்கப்படுகின்ற அமைப்புகளின்ர புனிதத் தன்மையைக் கெடுத்துத் தவறாக வழிநடத்திச் செல்லக் கூடாது. என்னுடைய கருத்துக்களை உங்கள் முன் வைத்துவிட்டேன். இனி யோசித்து ஒரு முடிவுக்கு வாங்கோ. |
| சிவராசா அந்த இடத்தை விட்டுப் போகிறான். கந்தசாமி பொன் சேகாவிடம்: | கந்தசாமி: | கொம்ராட், போறபோக்கைப் பாத்தால் சிவராசா தலைவனாகிடுவான் போல கிடக்கு. |
| பொன்சேகா முகத்தில் ஆத்திரம் கொப்பளிக்கப் பக்கத்தில் நிற்கும் தொழிலாளியைக் கூப்பிட்டுக் காதில் ஏதோ சொல்கிறான். | | |

(காட்சி முடிவு)

**காட்சி 27**

**இடம்:** ஒரு இருண்ட பாதை

**நேரம்:** இரவு நேரம்

**பாத்திரங்கள்**

சிவராசா, சில அடியாட்கள்.

சிவராசா வேலை முடிந்து ஒரு இருண்ட பாதை வழியாக வந்து



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| கொண்டிருக்கிறான். சில அடியாட்கள் அவனைப் பிடித்துச் சரியாக அடிக்கிறார்கள். அவன் களைத்துச் சோர்ந்து விழும் சமயத்தில், ஒருவன் அவன் ஷேர்ட்டைப் பிடித்து உலுக்கி:- | ஒருவன்: | எனிமேல் யூனியன் விஷயத்தில தலையிடாத, தலையிட்டால் நீ உயிரோட இருக்க மாட்டாய், புரிஞ்சுதா. |
| சிவராசா கீழே விழுகிறான். | | |
| | (காட்சி முடிவு) | |

காட்சி 28

இடம்: சிவகுருவின் வீடு

நேரம்: பகல் வேளை

**பாத்திரங்கள்**

சிவராசா, சிவகுரு, கந்தசாமி, நிலும், கோபால்.

| | | |
|---|---|---|
| சிவராசா கட்டுகளுடன் கட்டிலில் படுத்திருக்கிறான். நிலும் அவனுக்கு ஹோர்லிக்ஸ் கொண்டு வந்து கொடுக்கிறாள். அப்போது கந்தசாமி வீட்டுக்குள் வருகிறான். | | |
| | கந்தசாமி: | என்ன நிலுமக்கா, என்ன குடுக்கிறியள்? |
| | நிலும்: | ஹோர்லிக்ஸ் குடுத்தனான். |
| | கந்தசாமி: | அதுதான் நல்லது ... சிவகுரு அண்ணை இண்டைக்கு வெள்ளணப் போயிருப்பார் என்ன... ராசன் இண்டைக்கு முதலாளி எயர்போட்டுக்குப் போறார்... எங்கட ஃபக்டரியில சில |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | புது மெஷினுகள் பொருத்தப் போயினமாம் ... அதுக்கு ஜப்பானி லிருந்து ஆக்கள் வருகினம். |
| | சிவராசா: | ஓம், சிவகுரு சொன்னது. |
| | கந்தசாமி: | இப்ப எப்படியிருக்கு? |
| | சிவராசா: | பறவாயில்லை... சிவகுருதான் விடுகுதில்லை. படுக்கையை விட்டு எழும்ப வேண்டாமாம்... ரெண்டு கிழமையா ஒரு இடமும் போகாமல் எனக்கு விசராய்க்கிடக்கு. |
| | கந்தசாமி: | நல்ல கதை... சிவகுரு அண்ணை சொல்ற மாதிரி இன்னும் ஒரு கிழமை றெஸ்ட் எடு. அண்டைக்கு நான் வந்திட்டுப் போன பிறகு பொன்சேகா வந்ததெண்டு கேள்வி, என்ன சொன்னான். |
| கோபத்தால் சிவராசாவின் முகம் மாறுகிறது. | | |
| | சிவராசா: | அவன் கள்ள ராஸ்கல் ... செய்யிறதையும் செய்து போட்டு வந்து பெரிசா வருத்தப்படுறான்... என்ன நடிப்பு, அதுவுமில்லாமல், இது சிறிசேன ஆக்கள்தான் செய்திருப் பாங்கள் எண்டு சொல்லுறான். |
| | கந்தசாமி: | அப்பிடித்தான் நானும் நினைக் கிறன். |
| | சிவராசா: | உனக்கென்ன விசரே... அவங்கள் ஏன் இதைச் செய்யிறாங்கள்... இது பொன்சேகாவின்ர வேலைதான் ... சிவகுரு கூடச் சொல்லுது... அண் டைக்கு நான் கன்ரீனில உண்மை கதைச்சது பிடிக்கேல்லை. |
| | கந்தசாமி: | உன்மேலை பிரசன், அண்டைக்கு நீ கன்ரீனில கதைக்கேக்க எனக்கு வலு சந்தோசம்... நீ கதைக்கக் கதைக்க |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | அவனால வாய் திறக்கேலாமப் போச்சு. |
| | சிவராசா: | பின்ன என்ன கந்தசாமி, எத்தினையோ தலைவர்கள் காலங்காலமாப் போராடி ஏற்படுத்தி விட்ட இந்தப் புனிதமான அமைப்புகளை இவங்களப் போல பச்சோந்தியள் வந்து கெடுக்கிறாங்கள். |
| | கந்தசாமி: | உணர்ச்சிவசப்படாத ராசன், இப்ப என்ன செய்யிறதா உத்தேசம்? பொலிஸ் என்னவாம்? |
| | சிவராசா: | அடிச்சது ஆர் எண்டு தெரியேல்லை... எப்பிடி நடவடிக்கையெடுக்கிறது ... எனக்குக் கந்தசாமி இந்த யூனியனும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம்... நான் தனிய இருக்கப் போறன் ... என்ர மனசாட்சிக்கு விரோதமில்லாமல் உழைப்பன். முதலாளிமார் அநீதி செய்தால் தனியாப் போராடுவன்... அதில நான் செத்தாலும் பறவாயில்லை. |
| அப்போது நிலும் வந்து கொண்டே:- | நிலும்: | ராசன், நீங்கள் யூனியனில இல்லாமல் இருக்கிறது சரியில்லை... பிறகு ஒரு நேரத்தில முதலாளிமாரும் உங்களுக்கு அநீதி செய்தால் யூனியனும் உதவி செய்ய மாட்டுது. |
| | சிவராசா: | நிலுமக்கா, ஒரு தொழிலாளிக்கு அநீதி இழைக்கப்படேக்கை, அவன் யூனியனில இருக்கிறானோ இல்லையோ அவனுக்கு நீதிக்காகப் போராடுற ஒரு அமைப்புத்தான் யூனியன். அரசியற் கட்சிகள் கூடத் துன்பப்படுகிறவனுக்கு உதவி செய்து அவனைத் தன் பக்கம் இழுக்கப் போட்டி போடேக்க, தொழிலாளர் யூனியன் தன்ரை மெம்பர் இல்லையெண்டதுக்காக ஒரு தொழிலாளிக்கு இழைக்கப்படுகிற கொடுமையளைப் பார்த்துக் கொண்டிருந்தால் அந்த |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | அமைப்பு இருக்கத் தேவையில்லை. இந்தா, கந்தசாமி இதை பொன்சே காவிட்டைக் குடு. |
| பக்கத்திலிருந்த ஒரு மேசையில் இருந்து ஒரு மடித்த காகிதத்தை எடுத்துக் கந்தசாமியிடம் கொடுத்தல்: | கந்தசாமி: | என்ன ராசன் இது? |
| | சிவராசா: | யூனியனில இருந்து நான் விலகிறதா எழுதியிருக்கிறன். |
| | நிலும்: | தம்பி, நல்லா யோசிச்சுச் செய்யுங்கோ. |
| | கந்தசாமி: | இல்லையக்கா, ராசன் சொல்றதும் சரி... மனதுக்குப் பிழையெண்டு தெரிஞ்சு கொண்டு ஒரு காரியத்தைச் செய்யேலுமே. |
| | நிலும்: | நீங்கள் யூனியனில இருக்கிறீங்கள் தானே. |
| கந்தசாமி இதை எதிர்பார்க்கவில்லை. ஒருவாறு சமாளித்துக் கொண்டு:- | கந்தசாமி: | நானும் விலகத்தான் போறன்... எல்லாரும் ஒரேடியாக விலகக்கூடாது... பாருங்கோவன், வாறகிழமை என்ர ராஜினாமாக் கடிதம். |
| | சிவராசா: | ஸ்ட்ரைக் எப்பவாம்? |
| | கந்தசாமி: | அது டேட் தள்ளுபட்டுக் கொண்டு போகுது ... எப்ப நடக்குமெண்டு தெரியேல்லை. |
| | சிவராசா: | அதெங்க... எனி முதலாளி பேச்சு வார்த்தையெண்டு கூப்பிட்டு ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குக் கூட்டிக் கொண்டு போனால் போதும், எல்லாரும் வெருண்டு பிறகு அங்க ஊத்துப்படுற வெளிநாட்டுத் தண்ணியோட அப்பிடியே முடங்க வேண்டியதுதான் ... அடுத்த சிறிசேனாவா மாறீடுவான் பொன்சேகா. தொழிலாளியளுக்கு மதிப்பில்லாமல் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | போறதே உப்பிடிப்பட்டவங்களால தானே. |
| அப்போது முதலாளியின் கார் முன்னால் வந்து நிற்கிறது. சிவகுருவும் கோபாலும் இறங்கி உள்ளே வருகிறார்கள். கோபாலைக் கண்டுவிட்டு கந்தசாமி மெல்ல நழுவுகிறான். | | |
| | கந்தசாமி: | அப்ப நான் வாறன் ராசன்... இந்த லெட்டரைப் பொன்சேகாவிட்டக் குடுக்கிறன். நீ நல்லா றெஸ்ட் எடுத்து ஆறுதலா வா. |
| கோபாலும் சிவகுருவும் வீட்டினுள் வருகிறார்கள். கோபால் வெளியேறும் கந்தசாமியைப் பார்த்து: | கோபால்: | நில்லன் கந்தசாமி, நானும் வாறன், பத்துமணி ஷிஃப்ட்தானே. |
| | கந்தசாமி: | இல்லை கோபாலண்ணை... நான் ஒருக்கா கடைக்குப் போட்டுப் பிறகு தான் ஃபக்டரிக்குப் போகவேணும், நான் வாறன். |
| நிலும் குசினிக்குள்ளிருந்து வந்து கொண்டே: | நிலும்: | என்ன உடனையே வந்தாச்சு ... முதலாளி எங்க? |
| | சிவகுரு: | முதலாளியையும் ஜப்பானில இருந்து வந்தவையையும் கோல்ஃபேஸ் ஹோட்டேலில வீட்டுட்டு நான் லைசென்ஸ விட்டிட்டுப் போட்டன், எடுப்ப மெண்டு வர, வழியில கோபாலைக் கண்டன்... ஏதோ ராசன்ர பிற மோஷன் விஷயமாக் கதைக்க கோபால் வந்திருக்கு. |
| | சிவராசா: | என்ன கோபாலண்ணை... என்ன விசயம்? |
| கோபால் சிவராசாவை நெருங்கி சட்டைப் பையில் இருந்த அப்ளிக்கேஷன் ஃபோமை எடுத்து சிவராசாவிடம் கொடுக்கிறான். | | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | கோபால்: | ராசன், ஃபக்டரியில புது மெஷினுகள் போடினம்... என்னுமொரு ஃபோமனை எடுக்கப் போகினமாம்... இண்டைக்குத்தான் அப்பிளிகேஷன் குளோஸிங் டேட்... இப்ப இருக்கிறவைக்க நீதானே சீனியர்... உனக்குக் கட்டாயம் கிடைக்க வேணும்... இந்த அப்பிளிக்கேஷன் ஃபோமை உடனே நிரப்பித்தா. |
| | சிவராசா: | அப்ப கந்தசாமி இதைப் பற்றிச் சொல்லவேயில்லை. |
| | கோபால்: | அவன் எங்க இதைப் பற்றிச் சொல்லப் போறான்... அவனும் அப்ளை பண்ணி இருக்கிறதாக் கேள்வி. |
| | சிவராசா: | என்னண்ணை ... அவன் எனக்கு எத்தினையோ பிறகு வந்தவன். |
| சிவராசா ஃபோமை நிரப்புகிறான். | | |
| | சிவகுரு: | அதுதான் உனக்குச் சொல்லாமல் ரகசியமா அப்ளை பண்ணியிருக்கிறான்... கோபால், ஆள் எப்பிடி? |
| | கோபால்: | சரியான கட்டுறோட் ... உவன் ஆரோட நிக்கிறான் எண்டே தெரியேல்லை... சிலவேளை பாத்தா, சிறிசேன ஆக்களைக் கூட்டிக் கொண்டு போய்க் குடிக்க வாங்கிக் குடுக்கிறான். சிலவேளை பொன்சேகாவைக் கூட்டிக் கொண்டு போய் வாங்கிக்குடுக்கிறான். |
| | சிவகுரு: | முதலாளி சிலவேளை வேர்க்ஸ் மனேஜர் வீட்ட போவார்... அங்க பாத்தாலும் நிப்பான்... வேர்க்ஸ் மனேஜர் வீட்டு வேலை முழுக்க இவன் தான் செய்யிறவன், சந்தைக்குப் போறது, குசினி கழுவுறது, லைட்டில் கட்டப் போறது... எளிய பொறுக்கி. |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| பூர்த்தி செய்த ஃபோமைக் கோபாவிடம் கொடுத்துக் கொண்டே: | | |
| | சிவராசா: | என்ன சிவகுரு, கந்தசாமியே இப்பிடி நடக்கிறான்... என்னோடையும் வலும் வாரப்பாடாய் இருக்கிறான்... சீ, கொழும்பில ஆரை நப்பிற தெண்டே தெரியேல்லை. |
| வெளியே தபால்காரன் வந்து நிலுமிடம் கடிதம் கொடுக்கிறான். அதை நிலும் கொண்டு வந்து சிவராசாவிடம் கொடுக்கிறாள். சிவராசா அதை உடைத்துப் பார்க்கிறான். பின் சிவகுருவைப் பார்த்து: | சிவராசா: | சிவகுரு, நாளைக்குக் காலமை நான் பேராதனைக்குப் போக வேணும். எத்தினை மணிக்கு ட்றெயின்? |
| | சிவகுரு: | என்ன... உடம்பு பலவீனப்பட்டுப் போய் இருக்கிறாய்... உப்பிடியே போகப் போறியோ? |
| | சிவராசா: | இல்லை சிவகுரு... எனக்கு மனம் ஒரு மாதிரிக் கிடக்குது... நாளைக்குக் கட்டாயம் போகவேணும். |
| | சிவகுரு: | சரி, அப்ப காலமை நான் வந்து ட்றெயினேத்தி விடுகிறன் ... இப்ப போட்டு வாறன்... வா கோபால். |
| இருவரும் காரில் போய் ஏறுகிறார்கள். | | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| காட்சி 29<br><br>இடம்: பேராதனை பல்கலைக் கழக வளாகம்.<br><br>நேரம்: காலை 9.00 மணி<br><br>**பாத்திரங்கள்**<br><br>சிவராசா, சகுந்தலா, பல்கலைக்கழக மாணவ, மாணவியர். | |
| சிவராசா காயங்களுக்கு சிறு சிறு மருந்துக் கட்டுகளுடன் பேராதனைப் பல்கலைக்கழக வளாக சுற்றாடலில் நடமாடுகிறான். | வசனங்கள் இல்லாது இசை மட்டும். |
| ஒரு மாணவனை சகுந்தலா இருக்கும் ராமனாதன் ஹோல் எங்கே என வினவுகிறான். | |
| மாணவன் ராமனாதன் ஹோலைச் சுட்டிக் காட்டுகிறான். | ,, |
| தூரத்தில் வரும் மாணவிகளிடையே சகுந்தலாவைக் கண்டு விடுகிறான். | |
| சகுந்தலாவும் சிவராசவைக் கண்டு விடுகிறாள். | |
| சக மாணவிகளிடம் ஏதோ கூறி தன் புத்தகங்களை அவர்களிடம் கொடுத்து விட்டு சிவராசாவை நோக்கி ஓடி வருகிறாள். | |
| சிவராசாவை அணுகி ஆவல் ததும்ப அவனைப் பார்க்கிறாள். மூச்சு இரைக்கிறது. சிவராசாவின் காயங் களைக் கண்டு துணுக்குறுகிறாள். | ,, |
| அவள் முகத்தில் மகிழ்ச்சி, ஆவல், ஆச்சரியம், சிவராசாவின் காயங் களைப் பார்த்து ஒரு பதட்டம், | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| வேதனை ஆகிய உணர்ச்சிகள் பிரதிபலிக்கின்றன· | | |
| சிவராசா ஒரு புன்சிரிப்புடன் நிற்கிறான். | | |
| சகுந்தலா சிவராசாவைப் பார்த்து:- | சகுந்தலா: | ராசன் ... என்னால நம்பமுடியேல்ல. |
| | சிவராசா: | சகுந்தலா... என்ர மனதில தாங்க முடியாத ஒரு வேதனை ... உங்களைப் பாத்தா ஆறும்போல ஒரு நினைவு... உடன வெளிக்கிட்டு வந்திட்டன்... |
| சகுந்தலா உணர்ச்சி வசப்பட்டு:- | சகுந்தலா: | ராசன், நான் உங்களுக்குப் பக்கத்தில எப்பவுமே இருந்தால் உங்களுக்கு உலகத்தில ஒரு கவலையும் வரவிட மாட்டன்... ஏன் ராசன், இதென்ன கோலம் ... என்ன காயங்கள். |
| | சிவராசா: | சகுந்தலா, எனக்குக் கொழும்பிலையும் பிரச்சினையள் தொடங்கீட்டுது. |
| | சகுந்தலா: | பாத்தீங்களே ராசன், நான் படிச்சுப் படிச்சு சொன்னன், உங்களைக் கவனமாய் இருக்கச் சொல்லி ... என்ன பிரச்சினையள்... என்ர காயிதம் கிடைச்சுதே? |
| | சிவராசா: | சகுந்தலா, நான் மனநிம்மதி இல்லாமல் இருக்கேக்க உங்கட கடிதம் கிடைச்சுது... உடன் உங்களிட்ட வந்தால் என்ரை வேதனை தீரும்போல இருந்தது. உடன வெளிக்கிட்டு வந்திட்டன் ... உங்களோடை ஆறுதலா இருந்து கதைக்கவேணும். |
| | சகுந்தலா: | ஐயோ ராசன், என்ர நெஞ்சு வெடிச்சிடும்போல கிடக்கு... ஏன் ராசன், என்ன பிரச்சினை?... இப்பிடிக் காயங்களோட வந்து நிக்கிறீங்களே... |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சகுந்தலா இருந்து கதைப்பதற்கு ஏற்ற இடம் தேடுவதுபோல் சுற்று முற்றும் பார்க்கிறாள். | | |
| | சகுந்தலா: | ராசன், வாங்கோ மேல மலையில இருக்கிற குறிஞ்சிக்குமரன் கோயிலுக்குப் போவம். அங்க போய் உங்களோட முருகனைக் கும்பிட்டால்தான் எனக்கு ஒரு அளவு மனம் ஆறுதலடையும். |
| இருவரும் குறிஞ்சிக்குமரன் கோயிலுக்குப் போகும் வழியால் போதல். | | |

(காட்சி முடிவு)

காட்சி 30

இடம்: குறிஞ்சிக்குமரன் கோயில்

நேரம்: பகல் நேரம்

பாத்திரங்கள்

சிவராசா, சகுந்தலா.

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சிவராசாவும் சகுந்தலாவும் குறிஞ்சிக் குமரன் கோயிலை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். சகுந்தலா கஷ்டப்பட்டு மூச்சு விட்டுக்கொண்டு, மிகவும் களைத்துக் காணப்படுகிறாள். | | |
| | சகுந்தலா: | ராசன், நீங்கள் சரியான கவனமாய் இருக்க வேணும்... எங்கடை ஊரைப் போலயில்லை ... ஊரிலையெண்டாலும் ஆரும் எதிர்த்தால் உங்களுக்கு ஆதரவாயும் எத்தனையோ பேர் இருப்பினம் ... இங்க அப்படியில்லை... நீங்கள் தனிய. |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | ஏன், சிவகுரு இருக்கிறான் தானே? |
| | சகுந்தலா: | அவர் தனிய என்ன செய்யமுடியும் ராசன்... அதுவும் அவர் கலியாணங் கட்டிப் பிள்ளையும் இருக்குதெண்டு நீங்கள் சொல்றீங்கள் ... அவர் முதல்ப்போல பொது விசயங்களில அக்கறை கட்டேலாதுதானே. |
| இருவரும் சிறிது தூரம் மௌனமாக வருகிறார்கள். | | |
| | சிவராசா: | சகுந்தலா, எனக்கு மட்டும் பவர் இருக்க வேணும், உலகத்தில இப் பிடிப் பிழையா நடக்கிறவங்களை யெல்லாம் நிக்க வைச்சுச் சுடுவன் ... உலகத்தில சுயநலம், போலிக்கௌரவம், வஞ்சகம், சூது, பொறாமை இதுகள் இல்லாவிட்டால் எவ்வவவு நிம்மதியாக இருக்கலாம். |
| | சிவராசா: | ராசன், உங்கட உணர்ச்சியன் எனக்கு நல்லா விளங்குது... ஆனா இதை நீங்கள் வேறையாரிட்டையும் சொன்னா, அதுக்குத் தத்துவரீதியான விளக்கம் குடுத்து உங்களை இந்த உலகத்திலை வாழத் தகுதியில்லாதவனாக்கிக் கதைப்பினம். |
| இருவரும் கோவிலுக்கு வந்து வணங்குகிறார்கள். பின் ஒரு நிழலான இடத்தில் போய் அமர்கிறார்கள். சிறிது நேரம் இருவரும் மௌனமாகத் தூரத்தில் தெரியும் மலைமுகடுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். | | |
| | சகுந்தலா: | ராசன், உங்களை ஒரு முக்கியமான விசயம் கேப்பன், உண்மையான பதிலைச் சொல்லவேணும். |
| | சிவராசா: | என்ன சகுந்தலா, நான் உங்களோட எப்பவும் பொய் கதைச்சிருக்கிறனே? |
| சகுந்தலா சிவராசாவின் முகத்தைக் கூறு குறிப்பாகப் பார்த்தல். | | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சகுந்தலா: | ராசன், இண்டைக்கு நீங்கள் துன்பப் பட்டு என்னிட்ட வந்திருந்தாலும் எனக்கு மனதில ஒரு மகிழ்ச்சி, நிம்மதி... ஏன் தெரியுமே? |
| சிவராசா கேள்விக்குறியுடன் சகுந்தலாவைப் பார்த்தல். | | |
| | சகுந்தலா: | நான் எனக்கு அறிவு தெரிஞ்ச நாள் தொடக்கம் என்ர மனதை, ஒரு பெண் எவ்வளவு தூரம் வெளிப்படையாக் காட்ட முடியுமோ அவ்வளவு தூரம் காட்டீட்டன்... ஆனா நீங்கள் அதைப் புரிஞ்சு கொண்ட மாதிரித் தெரியேல்ல. |
| | சிவராசா: | என்ன சகுந்தலா நீங்கள், உங்களை நான் புரிஞ்சு கொள்ளாமல் வேற யார் புரிஞ்சு கொள்ள முடியும். |
| | சகுந்தலா: | ராசன் ... நான் அப்படி உணரேல்லை. |
| | சிவராசா: | சகுந்தலா, நீங்கள் என்னில அக்கறை வைச்சிருக்கிறியள், அது தெரியும்... என்ர கொள்கையளுக்கு என்ர செய்கையளுக்கு ஆதரவு தர்ற ஒரேயொரு சீவன், அது தெரியும். எனக்கு வர்ற துன்பங்களைக் கண்டு அனுதாபப்பட்டுத் துடிக்கிற ஒரு சீவன் அதுவும் தெரியும். |
| | சகுந்தலா: | அவ்வளவுத்தான் உங்களுக்குத் தெரியுமா? |
| சிவராசா ஒருவித தயக்கத்துடன் சகுந்தலாவைப் பார்த்தல். | | |
| | சகுந்தலா: | நீங்கள் சொன்ன அக்கறை, அன்பு, ஆதரவு, அனுதாபம் இவையளோடை என்னையே என்ரை வாழ்க்கையையே உங்களுக்குத் தர துடித்துக் கொண்டிருக்கிறன் ராசன் அது உங்களுக்குத் தெரியாதா? |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சிவராசா ஒருவித தயக்கத்துடன் சகுந்தலாவைப் பார்க்கிறான். | | |
| சகுந்தலா ஆவலுடன் சிவராசாவைப் பார்க்கிறாள். | | |
| | சிவராசா: | தெரியும். |
| சகுந்தலா மகிழ்ச்சியுடன்:- | சகுந்தலா: | உண்மையாவே ராசன்... ஆனால் நான் ஒரு கணங்கூட உங்கட பேச்சிலையோ செய்கையிலையோ பார்வையிலையோ அதை உணரேல்லை. |
| | சிவராசா: | சகுந்தலா, நான் என்ர உணர்ச்சியளை எல்லாம் வெளிப்படையாக் காட்டிக் கொள்ளக்கூடிய நிலையில இல்லை... உங்களைப் பொறுத்த மட்டில் நான் ஒரு ஹிப்போகிறட்... நான் ஒரு பொய்யன். |
| | சகுந்தலா: | எங்களுக்கிடையில இருக்கிற சாதி வேறுபாட்டைச் சொல்றீங்களா? |
| சிவராசா மௌனமாக இருத்தல். | | |
| | சகுந்தலா: | சின்ன வயதில தொடக்கம் என்னோட, எங்களோடை பழகுறீங்கள்... எந்தச் சந்தர்ப்பத்திலையாவது நாங்கள் உங்களிலும் பாக்க உயர்ந்த சாதியெண்டு நடந்து உணர்ந்திருக்கிறீங்களா ராசன். |
| | சிவராசா: | சகுந்தலா, செய்கைகளிலை நான் உணரேல்ல... ஆனா நீங்கள் அண்டைக்குச் சொன்னீங்களே மனத்தளவிலை எண்டு, அந்த மனத்தளவிலை நான் உணருறன்... என்னதான் ஒண்டாப் பழகினாலும் விருப்பம் இருந்தாலும் அந்த மனம் இடங்குடுக்குதில்லை பயப்பிடுகுது. |
| | சகுந்தலா: | என்ன ராசன், பயமா... உங்களுக்கா சாதிப் பாகுபாடு இருக்கக் கூடாது எண்டு தீவிரமா நிக்கிற உங்களுக்கா |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | என்னை ஏற்றுக் கொள்ளுறதில பயம். |
| | சிவராசா: | சகுந்தலா, பயம் எண்டு நான் சொல்றது என்ர கோழைத்தனமல்ல என்ர விசுவாசம்... சாதிப்பாகுபாடு இருக்கக்கூடாது, அதை ஒழிக்க வேணும்... அது என்ரை கொள்கை தான்... ஆனால் அந்தக் கொள்கையை என்னை அன்போட வளத்த சங்கரலிங்கமையா வீட்டிலையே பிரயோகப்படுத்த விரும்பேல்ல... தீட்டின மரத்திலையே கூர் பாக்கிற மாதிரி. |
| | சகுந்தலா: | ராசன், இதுதான் உங்கட முடிவா? |
| | சிவராசா: | சகுந்தலா... என்னைக் குழப்பாதீங்கோ. உங்கட முகத்தைப் பாத்து என்னால பேச முடியேல்ல... ஆனால் சகுந்தலா, என்ர பலவீனத்தை நான் உணருறன்... ஒருதனுடைய பொது லட்சியத்திலை எப்பிடி சுய உணர்ச்சியள் பாதிக்குது எண்டு எனக்கு இப்ப விளங்குது... நான் உண்மையான லட்சியவாதியாயிருந்தால் உங்களை ஏற்றுக் கொண்டு, உலகத்துக்கு வழி காட்டி இருக்க வேணும். |
| | சகுந்தலா: | அப்படி நீங்கள் சமுதாயத்துக்கு வழி காட்டியாயிருக்க நான் எண்டைக்கும் உங்களுக்குத் துணையா இருப்பன் ராசன். |
| | சிவராசா: | சகுந்தலா, காலம் வரட்டும்... எல்லாம் நல்லபடியா முடியும். |
| இருவரும் எழுந்து மலையிலிருந்து இறங்கி வருகிறார்கள். | | |
| சகுந்தலாவுக்கு மூச்சிரைக்கிறது. உடம்பு வியர்க்கிறது. தள்ளாடுகிறாள். அப்படியே சிவராசாவின் மார்பில் சாய்கிறாள். சிவராசா பதட்டத்துடன் கேட்கிறான். | சிவராசா: | சகுந்தலா... என்ன செய்யுது? |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சகுந்தலா சிவராசாவின் மார்பில் சாய்ந்தபடியே களைப்புடன் அண்ணாந்து சிவராசாவின் முகத்தைப் பார்த்து ஒரு வேதனையான புன்முறுவலுடன் ஒன்றுமில்லையெனத் தலையசைக்கிறாள். சிவராசாவுக்கு அவள் மேல் இரக்கம் பிறக்கிறது. மனம் வேதனைப்படுகிறது. அவளது வலது கையை எடுத்து மென்மையாக முத்தமிடுகிறான். | | |
| | | பெண்மனத்தின் மகிழ்ச்சித் துள்ளலை வெளிப்படுத்தும் இனிமையான இசை. |
| சகுந்தலா நிம்மதியுடன் கண்ணை மூடி சிவராசாவின் மார்பில் முகம் புதைக்கிறாள். இருவரும் ஒரு கல்லில் அமர்கிறார்கள். சகுந்தலா சிவராசாவின் மடியில் தலை வைத்துக் கண்மூடி இருக்கிறாள். | | |
| நினைவுக் காட்சிபோல்: சிவராசாவும் சகுந்தலாவும் அழகிய மலையகப் பின்னணிக் காட்சிகளில் இருவரும் ஒருவருடன் ஒருவர் கைக்கோத்து ஆதரவுடன் அணைத்தபடி நடக்கிறார்கள். | பாடல் 3 | இரு அன்பு உள்ளங்களின் சங்கமத்தில் பிறக்கும் குதூகலத்தை வெளிப்படுத்தும் இசைச் சொற்களுடன் கூடிய பாடல். |
| | | பாடல் 3 முடிவு. |
| சிவராசா சகுந்தலாவின் தலையை வருடியபடி: | சிவராசா: | சகுந்தலா... என்ன செய்யுது? |
| | சகுந்தலா: | ராசன், அந்த மூச்சுவிடக் கஷ்டமாயிருக்கிற வருத்தம் கொஞ்ச நாள் தன்ர பாட்டில விட்டிருந்தது... இப்ப பழையபடி கடுமையாயிருக்குது. |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | சிவராசா: அதுதான் சொன்னனான், டொக்டரிட்டக் காட்டச் சொல்லி... போய்க் கண்டீல ஆரும் டொக்டரிட்டக் காட்டுவமே? |
| சகுந்தலா ஆம் எனத் தலையாட்டுதல். | |
| | (காட்சி முடிவு) |

காட்சி 31

இடம்: கண்டி நகர்

**பாத்திரங்கள்**

சிவராசா, சகுந்தலா, வைத்தியர்,

| | |
|---|---|
| 1. கண்டி மாநகரின் சில அழகிய தோற்றங்கள். | |
| 2. ஒரு கிளினிக்கின் முகப்புத் தோற்றம். | |
| 3. உள்ளே டொக்டரின் முன்னே சிவராசாவும் சகுந்தலாவும் அமர்ந்திருக்கிறார்கள். | |
| | டொக்டர்: நீங்கள் கண்டியிலா இருக்கிறீங்கள்? |
| | சிவராசா: இல்லை டொக்டர், இவ யூனிவர்சிட்டில படிக்கிறா. |
| | டொக்டர்: இது ஒருக்கா எக்ஸ்றே எடுத்துப் பாக்கவேணும் ... நீங்கள் கண்டி ஜெனரல் ஹொஸ்பிட்டலுக்குப் போனால் நல்லது. |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| இருவரும் எழுந்து வெளியே வருகிறார்கள். நடந்து கொண்டே: | சிவராசா: | சகுந்தலா, நாளைக்கு நான் வரட்டே? |
| | சகுந்தலா: | வேண்டாம் ராசன்... நான் என்ர றூம்மேட்டோட போறன் ஹொஸ்பிட்டலுக்கு. |
| | சிவராசா: | பிறகு கவனயீனமா விட்டிடுவீர்... கட்டாயம் காட்ட வேணும், டொக்டரின்ர முகத்தைப் பாக்க எனக்கு ஐமிச்சமாய்க் கிடக்கு. |
| | சகுந்தலா: | நான் கட்டாயம் காட்டுவன் ராசன்... எனக்கும் இப்ப தாங்கேலாமல் இருக்கு. |
| | சிவராசா: | இப்ப என்ன செய்வம்? |
| சகுந்தலா சிரித்துக் கொண்டு: | சகுந்தலா: | இப்பிடியே நடந்து பேராதனைக்குப் போவமே. |
| | சிவராசா: | என்ன, பகிடியே. |
| | சகுந்தலா: | ராசன், எனக்கு இப்பிடியே எவ்வளவு தூரமெண்டாலும் உங்களோட நடந்து போக வேணும்போல இருக்கு... அப்பிடி நடக்கேக்க எனக்கு இந்த உலகமே மறந்து போகுது... ஒரு துன்பமும் தெரியிறேல்லை... எங்கட இவ்வளவு கால வாழ்க்கையில இப்பிடி ரெண்டு பேரும் நெருக்கமாத் தனியத்திரியிறது இண்டைக்குத்தான் முதல் தடவை... அதை விட எனக்கு மனம் வரேல்ல. |
| | சிவராசா: | எங்களுக்கு நல்ல காலம் இருந்தால் எல்லாம் நல்லபடியா நடக்கும். |
| | சகுந்தலா: | அந்த நம்பிக்கை எனக்கு இருக்குது ராசன். |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| காட்சி 32<br><br>இடம்: தொழிற்சாலைக் கன்டீன்<br>தொழிற்சாலை வரவேற்புக் கூடம்<br><br>நேரம்: காலை 10.00 மணி | |
| **பாத்திரங்கள்**<br>கோபால், சிவராசா, தொழிற்சாலை ஊழியர்கள், அருணகிரி. | |
| கோபாலும் சிவராசாவும் கன்டீனில் ஒரு மேசையிலிருந்து டீ குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது ஒரு பியோன் வந்து சிவராசாவிடம் ஒரு பேப்பர்த்துண்டைக் கொடுத்து டெலிவரி புக்கில் கையெழுத்துப் பெற்றுச் செல் கிறான். சிவராசா பேப்பர்த் துண்டைப் பார்க்கிறான். | |
| | கோபால்: என்ன சிவராசா பேப்பர்? |
| | சிவராசா: அது இன்ரவியூவுக்கு வந்திருக்கு. |
| | கோபால்: எப்பவாம்? |
| | சிவராசா: இருபதாந்திகதி. |
| கோபால் கையில் உள்ள கடிகாரத்தைப் பார்க்கிறான். அதில் 15ம் திகதி தெரிகிறது. | |
| | கோபால்: இன்னும் ஐஞ்சு நாள் இருக்கு. |
| சக தொழிலாளி ஒருவன் இவர்களை நோக்கி:- | தொழிலாளி: சிவராசன், உன்னட்ட ஆரோ வந்திருக்கினம் முன்னால. |
| சிவராசா எழுந்து போகிறான். தொழிற்சாலை வரவேற்புக் கூடத்தை அடைகிறான். | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| அங்கு ஒரு கதிரையில் அருணகிரி அமர்ந்திருக்கிறான். அவன் முகம் வாடியிருக்கிறது. | சிவராசா: | அருணகிரி .. |
| சிவராசா அருணகிரிக்குப் பக்கத்தில் ஒரு கதிரையில் அமர்கிறான். | | |
| | அருணகிரி: | வீட்ட போனன், வீட்டுக்காரமனிசி சொல்லிச்சுது, நீ வேலைக்குப் போட்டாயெண்டு... சிவகுருவுமில்லை. |
| | சிவராசா: | இண்டைக்கு எனக்குக் காலமை ஐஞ்சு மணி ஷிஃப்ட்... அது சரி, இப்ப என்ன விசயம், திடீரெண்டு கொழும்புக்கு ஏதும் வேலை விசயமோ? |
| | அருணகிரி: | இல்லை ... தங்கச்சியின்ர விசயமா வரவேண்டிப் போச்சு. |
| | சிவராசா: | என்ன... தங்கச்சியின்ர விசயமோ? |
| | அருணகிரி: | உனக்குத் தெரியுந்தானே ராசன்... சகுந்தலா இப்ப கொஞ்சக் காலமா மூச்சுவிடக் கஷ்டப்படும்... நாங்கள் முந்திச் சொல்லச்சொல்லக் கேக்கேல்ல... அது சும்மா எண்டிட்டு இருந்திட்டுது .. இப்ப யூனிவர்சிட்டிக்குப் போய் அங்க கொஞ்சம் வருத்தம் கூடினவுடன கண்டிப் பெரியாஸ்பத்திரியில போய்க் காட்டியிருக்கிறா... அங்க டொக்டேர்ஸ் எக்ஸ்றே எடுத்துப் பாத்திட்டு, ஏதோ சந்தேகப்பட்டு மகரகமவுக்குப் போகச் சொல்லியிருக்கினம். |
| | சிவராசா: | மகரகமவுக்கோ... அப்பிடியெண்டால் கான்ஸர். |
| | அருணகிரி: | இல்லை... அப்பிடி அவையளொண்டும் சொல்லேல்ல... லங்ஸ் சம்பந்தப் பட்டதாலே எதுக்கும் அங்கபோய் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | ஒருக்காக் காட்டிறது நல்லதெண்ட வையளாம்... அதுதான் சகுந்தலா லெட்டர் போட்டு, நான் பேரதெனியாவுக்குப் போய் அவவைக் கூட்டி வந்தனான். |
| | சிவராசா: | இப்ப சகுந்தலா எங்க? |
| | அருணகிரி: | இப்ப வெள்ளவத்தேல மாமன்ட வீட்டில நிக்கிறா... நேற்று மகரகமைக்குப் போனது... அங்கையும் எக்ஸ்றே, ரத்தம் எல்லாம் எடுத்தது. திங்கட்கிழமை வரட்டாம். |
| | சிவராசா: | இண்டைக்கு வெள்ளிக்கிழமை ... என்ன அட்ரஸ்... |
| | அருணகிரி: | ராசன் ... சகுந்தலா உன்னிட்ட வருத்தத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாமெண்டு சொன்னது. |
| | சிவராசா: | ஏனாம்? |
| | அருணகிரி: | நீ கொஞ்சம் எண்டமுன்ன அப்செட்டா போயிடுவியாம்... வருத்தம் மாறினாப் பிறகு உன்னிட்டச் சொல்லுவம் எண்டு சொன்னா. |
| இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருக்கிறார்கள். | | |
| | சிவராசா: | சரி, நீ மாமா வீட்டு விலாசத்தைச் சொல்லு. |
| | அருணகிரி: | நம்பர் 45, ராஜசிங்க றோட். |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

காட்சி விளக்கம்

காட்சி 33

இடம்: தொழிற்சாலை போர்ட் றூமுக்கு வெளியேயுள்ள அறை. ஃபோர் மன் நேர்முகப் பரீட்சை.

நேரம்: காலை 10.00 மணி

பாத்திரங்கள்

சிவராசா, கந்தசாமி, வேறு சில ஊழியர்கள், பியோன்.

1. போர்ட் றூமுக்குள் போகும் வாசலில் உள்ள கலண்டரில் நவம்பர் 20ம் திகதி.

2. போர்ட் றூம் நுழைவாயில் மூடியிருக்கிறது. (தள்ளுக்கதவு)

3. போர்ட் றூமுக்கு முன்னால் இருக்கும் அறையிலுள்ள கதிரைகளில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் (ஒரு சிறு தொகையினர்) அமர்ந்திருக்கின்றனர். சிவராசாவும் ஒரு கதிரையில் இருக்கிறான்.

4. கந்தசாமி வெள்ளை ட்ரவுஸர் வெள்ளை முழுக்கை ஷேர்ட், ரை, சப்பாத்து முதலியவற்றை அணிந்து கொண்டு, பெரிய ஃபைல் கட்டை ஒரு ப்ரவுன் பாய்க்கில் வைத்துக் கொண்டு வருகிறான். நேராகப் போய் சிவராசாவுக்கு பக்கத்தில் அமர்கிறான்.

ஒலி

கந்தசாமி: ராசன், நீங்கள் வந்து கனநேரமே?

சிவராசா: ஒன்பதரைக்கு இன்டர்வியூ எண்டு போட்டிருக்குது, நான் 9.20க்கு வந்திட்டன்.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| ஒரு சிறு சிரிப்புடன்: | கந்தசாமி: | ஓ... எனித் தெரியாதே, ஒன்பதரை எண்டால் பத்துக்குததான் தொடங்கும்... அதுதான் நான் இப்ப வந்தனான்... உங்கட நம்பர் என்ன? |
| | சிவராசா: | ஒன்பது. |
| | கந்தசாமி: | எனக்கு ரெண்டு... அதென்னண்டு எனக்கு உங்களுக்கு முதல் வருகுது... அவை சீனியோரிட்டிப்படி கூப்பிடேல்லையா. |
| | சிவராசா: | அல்ஃபபற்றிக்கல் ஓடரில கூப்பிடுறது தானே வழக்கம். |
| | கந்தசாமி: | ஓ ... எனக்கு கே ... உங்களுக்கு எஸ் தானே ... எனக்கு இதில நம்பிக்கையில்லை. சும்மா போட்டனான்... நீங்கதானே எங்களில எல்லாருக்கும் சீனியர் ... கட்டாயம் உங்களுக்குத்தான் ஃபோமன் போஸ்ட். |
| | சிவராசா: | அப்ப ஏன் இன்ரவியூ வைக்கினம். |
| | கந்தசாமி: | எல்லாம் சும்மா ஃபோமலிட்டி தானே... நான் சும்மா எக்ஸ்பீரியன்ஸா இருக்கட்டுமெண்டு போட்டு அப்ளை பண்ணினனான்... ஆனா இண்டைக்கு 20ம் திகதி... எனக்கு வந்த நம்பரும் ரெண்டு... என்ர பிறந்த திகதியும் ரெண்டு... உங்கட பிறந்த திகதி என்ன? |
| | சிவராசா: | ஒன்பது. |
| | கந்தசாமி: | பாத்தீங்களே... எண் கணித சாத்திரத்தில விசயமிருக்கு ... உங்கட பிறந்த நம்பர் ஒன்பது ... இப்ப உங்கட இன்ரவியூ நம்பரும் ஒன்பது... லக்தான். |
| | சிவராசா: | ஆனா நான் ஒரு புத்தகத்தில வாசிச்சனான்... ஒன்பதுக்கு ரெண்டு சென்மத்துப் பகை எண்டு... இண்டைக்கு 20ம் திகதி... |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| போர்ட் றூமுக்குள் இருந்து ஒரு பியோன் கையில் ஃபைலுடன் வெளியே வந்து, அதைப் பார்த்து, எல்லோரது நம்பரையும் கூப்பிட்டு பெயருடன் சரி பார்க்கிறான். | | |
| | பியோன்: | நம்பர் வண் — நொம்பர எக்காய்... அல்பிரட் பண்டார..., நம்பர் ரூ — தெக்காய் ஆறுமுகம் கந்தசாமி ... நம்பர் த்றீ — துண ஐயாத்துரை மார்க்கண்டு. |

— ஃபேட் அவுட் —

(காட்சி முடிவு)

காட்சி 34

இடம்: மகரகம புற்றுநோயாளர் ஆஸ்பத்திரி

நேரம்: மாலை 5.00 மணி

பாத்திரங்கள்

சிவராசா, அருணகிரி, சங்கரலிங்கம், சகுந்தலா, மாமா.

| | | |
|---|---|---|
| சகுந்தலாவின் கட்டிலடியில் சங்கரலிங்கம், அருணகிரி, மாமா ஆகியோர் நிற்கிறார்கள். சிவராசா வருகிறான். | | |
| சகுந்தலா மகிழ்ச்சியுடன்: | சகுந்தலா: | அங்க... ராசன் வருகுது. |
| சிவராசா கட்டிலடியில் வந்து: | சிவராசா: | எப்பிடி இருக்குது? |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
| --- | --- | --- |
| | சகுந்தலா: | டொக்டர் ஒண்டுமில்லையெண்டு சொல்லிப் போட்டார்... நாளைக்கு யாழ்ப்பாணம் போகட்டாம்... அங்க கொஞ்ச நாளைக்கு மருந்தெடுக்கச் சரியாப் போயிடுமாம்... அப்பாடா... |
| சிவராசாவைத் தவிர மற்றவர்கள் முகத்தில் சந்தோசமில்லை. | | திங்கட் கிழமை வந்தது... இண்டைக்குப் புதன் கிழமை... இந்த மூண்டு நாள் இருக்கிறே எனக்குப் போதுமெண்டாகீட்டுது... இதுகள் எல்லாம் என்னண்டுதான் இங்க மாதக்கணக்கில இருக்குதுகளோ. |
| | சிவராசா: | அதுதானே... உந்தப் பெரிய வருத்தங்கள் உந்தச் சின்ன வயசில வருமே. |
| சகுந்தலா பெலவீனமாகச் சிரித்தல். | சகுந்தலா: | எப்பிடி உங்கட இன்ரவியூ? |
| | சிவராசா: | போயிருக்கு பாப்பம்... நாளைக்குத் தான் றிசல்ட் தெரியும். |
| சிவராசா அருணகிரியைப் பார்த்து: | சிவராசா: | அருணகிரி, நாளைக்கே யாழ்ப்பாணம் போகப் போறீங்களோ... இல்லை, மாமா வீட்டில நிண்டு ஆறுதலா... |
| | சங்கரலிங்கம்: | இல்லை ராசன்... நாங்கள் நாளை மெயிலில போறம்... நாளைக்குக் காலமை ஏலுமெண்டா ஒருக்கா அருணகிரியோட போய், சிலிப்பரேட்புக் பண்ண முடிஞ்சா... |
| | மாமா: | அது எடுக்கலாமெண்டுதான் நினைக்கிறன். நான் காலமை போய்ப் பாக்கிறன். |
| அப்போது ஒரு டொக்டர் அதாற் போக, மாமா அவரிடம் போய் ஏதோ கேட்கிறார். சங்கரலிங்கமும் அங்கு போய் விடுகிறார். சிவராசா அருணகிரியைப் பார்த்து: | சிவராசா: | என்ன அருணகிரி, ஒண்டும் பேசாமல் நிக்கிறாய். |
| | அருணகிரி: | ஆ... எப்பிடி இன்ரர்வியூ எல்லாம். |
| | சிவராசா: | இன்ரவியூ இருக்கட்டும்... ஏன் ஒரு |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
| --- | --- |
| | மாதிரி இருக்கிறாய்? |
| | அருணகிரி: என்ன மாதிரி... நான் நோர்மலாய்த் தான் இருக்கிறன். |
| | சகுந்தலா: நல்ல ஆக்கள் ... எல்லாரும் ஒரே மாதிரியான ஆக்கள்தான் ஃபிறெண்ட்ஸா இருக்கிறீங்கள்... கொஞ்சம் எண்டவுடனே அப்செட். |
| | சிவராசா: ஏன், என்ன விசயம் அருணகிரி. |
| | அருணகிரி: ஒண்டுமில்லை ராசன். |
| சங்கரலிங்கமும் மாமாவும் வந்து கொண்டே: | சங்கரலிங்கம்: அப்ப அருணகிரி, ராசன்... போவமே சகுந்தலா ... நாளைக்கு விடிய வாறம் கூட்டிக் கொண்டு போக... அருணகிரி, அந்த பாக்கை எடு. |
| அருணகிரி சகுந்தலாவின் கட்டிலடியில் இருக்கும் கபேட்டிற்கு மேல் இருந்து பாய்க்கைத் தூக்குதல். | |
| | சங்கரலிங்கம்: அப்ப பிள்ளை, இரவு சாப்பாட்டைச் சாப்பிடு... வா அருணகிரி... ராசன் போவமே. |
| எல்லோரும் போகிறார்கள். சிவராசா சகுந்தலாவைப் பார்க்கிறான். | |
| | சகுந்தலா: நாளைக்கு மாமாவீட்ட வர்றீங்களே. |
| | சிவராசா: காலமை ஐஞ்சு மணிக்கு ஷிப்ட்... ஒரு மணிக்கு முடிய, ஒண்டரை ரெண்டு போல வாறன்... |
| | சகுந்தலா: கட்டாயம் பாத்துக் கொண்டிருப்பன் ... உங்கட இன்ரவியூவைப் பற்றி நல்ல முடிவோட வரவேணும். |
| சிவராசா தலையாட்டிவிட்டுப் போகிறான். சங்கரலிங்கமும் மாமாவும் முன்னால் போக, அருணகிரியும் | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சிவராசனும் பின்னால் நடந்து போகிறார்கள். | | |
| | சிவராசா: | அருணகிரி... என்ன விசயம்... ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்? |
| | அருணகிரி: | ராசன், சகுந்தலாவுக்கு அதுக்கிடேல சுகமெண்டு டொக்டர் கூட்டிக் கொண்டு போங்கோ எண்டு சொல்லியிருப்பார் எண்டு நம்புறியே. |
| | சிவராசா: | இதில நம்பாம விட என்ன கிடக்கு அருணகிரி. |
| | அருணகிரி: | எனக்கெண்டா நம்பிக்கையில்லை .. டொக்டர் ஐயாவோடையும் மாமாவோடையும் நேற்றுக் கனநேரம் ஏதோ கதைச்சவர் பிறகு கொஞ்ச நேரம் ரெண்டுபேற்ற முகத்தையும் பாக்கேலாமல் கிடந்தது... அதுக்குப் பிறகுதான் யாழ்ப்பாணம் போறதைப் பற்றிக் கதைச்சவை... எனக்கெண்டால் ஐ மிச்சம்... ஐயாவை உனக்குத் தெரியாதே... வைராக்கியம் பிடிச்ச மனிசன்... ஒண்டையும் வெளிக் காட்டமாட்டார்... எனக்கெண்டால் ஒரே பயமாய்க் கிடக்கு ராசன்... என்ர தங்கச்சி சகுந்தலா. |
| அருணகிரியின் கண்களில் கண்ணீர் முட்டுகிறது. | | |
| | சிவராசா: | அருணகிரி... என்ன இது .. பேசாமல் வா... சகுந்தலாவுக்கு ஒண்டுமில்லை... ஐயாவுக்குத் தெரியாத விசயமே. |
| எல்லோரும் போய்க் காரில் ஏறுகிறார்கள். | | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| காட்சி **35** | | |
| இடம்: வெள்ளவத்தை இராஜ சிங்க றோட் கடற்கரை. | | |
| நேரம்: மாலை 3.00 மணி | | |
| **பாத்திரங்கள்** | | |
| சிவராசா, சகுந்தலா. | | |
| (இக்காட்சி முழுவதும் சகுந்தலா முகம் வெளிறி, பெலவீனமாக மூச்சுவிடக் கஷ்டப்பட்டுக் கதைக்க வேண்டும்) | | |
| சிவராசா வெள்ளவத்தைப் பக்கத்திலிருந்து கோல் றோட்டால் நடந்து வந்து ராஜசிங்க றோட்டில் திரும்புகிறான். தூரத்தே சகுந்தலா நிற்பது தெரிகிறது. சிவராசாவை கண்டுவிட்டு சகுந்தலாவும் சிவராசாவை நோக்கி நடந்து வருகிறாள். இருவரும் இடையில் சந்திக்கிறார்கள். | | |
| | சகுந்தலா: | ஏன் இவ்வளவு லேட்? இப்ப மூண்டு மணியாகுது. |
| | சிவராசா: | என்ன சகுந்தலா, உடம்பு ஏலாதனீர்... ஏன் இப்பிடி வெளிக்கிட்டுத் திரியிறீர். |
| | சகுந்தலா: | அதெல்லாம் எனக்கு ஏலும்... நான் நீங்கள் சொன்னதைக் கேட்டு ஒண்டரை மணி தொடக்கம் நிக்கிறன். எப்பிடி இன்ரவியூ றிசல்ட். |
| சிவராசாவின் முகம் இறுகுகிறது. | | |
| | சிவராசா: | எங்க ஐயா, அருணகிரி எல்லாரும். |
| | சகுந்தலா: | ஒவ்வொருதரும் ஒவ்வொரு அலுவலா |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | வெளிக்கிட்டுப் போட்டினம்... இனி ஆறு மணிக்குத்தான் வந்து சேரு வினம்... மாமி படுத்திருக்கிறா. |
| | சிவராசா: | ட்றெயின் சீற் புக் பண்ணியாச்சே. |
| | சகுந்தலா: | இரவு ஒன்பது மணி எக்ஸ்பிரசிலதான் செக்கண்ட் க்ளாஸ் ஸிலிப்பரேட் புக் பண்ணியிருக்கு... அதை விட்டிட்டு இன்ரவியூ ரிசல்ட்டைச் சொல் லுங்கோ. |
| | சிவராசா: | சகுந்தலா... என்ர துன்பங்கள் என் னோடையே இருக்கட்டும். |
| சகுந்தலா ஏமாற்றத்துடன்: | சகுந்தலா: | என்ன ராசன், அப்பிடிச் சொல்லு றீங்கள். |
| 45ம் இலக்கமிட்ட வீட்டுக்குள் போக எத்தனிக்கிறான் சிவராசா. சகுந் தலா அவனைத் தடுத்து: | சகுந்தலா: | வாங்கோ, இப்பிடியே கடற்கரை க்குப் போவம். |
| | சிவராசா: | இந்த வெய்யிலுக்கையோ... பிறகு உமக்கேதும் செய்தாலும். |
| | சகுந்தலா: | எனக்கு ஒரு வருத்தமுமில்லை... வாங்கோ வீட்டில இருந்து மனம் விட்டுக் கதைக்கேலாது... |
| இருவரும் கடற்கரையை நோக்கிப் போதல். | | |
| | சகுந்தலா: | ப்ளீஸ்... சொல்லுங்கோ ராசன், என்ன நடந்தது. |
| | சிவராசா: | எனக்கு ஃபோமன் போஸ்ட் கிடைக் கேல்லை, |
| இருவரும் சிறிது நேரம் மௌனமாக நடத்தல். | | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சகுந்தலா: | அண்ணா சொல்லிச்சுது, நீங்கள் தான் இருக்கிறவேக்க இந்த போஸ்ட்டுக்கு தகுதியானவரெண்டு. |
| | சிவராசா: | ஓ... எனக்கு அட்வான்ஸ் லெவலில சயன்ஸ் சப்ஜெக்டில 2—சீ, 2—எஸ் ஒரு வருஷம் வேர்க்கிங் எக்ஸ்பீரியன்ஸ் எல்லாம் இருக்கு. |
| | சகுந்தலா: | அப்படியிருக்க. |
| இருவரும் ரெயில் பாதையில் ஏறி சிறிது தூரம் நடந்து, கற்குவியல்களில் இறங்கி கடற்கரையை அடைகிறார்கள். | சிவராசா: | அப்படியிருக்க கந்தசாமி எண்டவனுக்கு குடுத்திருக்கினம். |
| | சகுந்தலா: | அவர் உங்களைவிட சீனியரோ? |
| | சிவராசா: | இப்ப சேர்ந்து நாலு மாசந்தான். |
| | சகுந்தலா: | படிப்பு? |
| | சிவராசா: | எட்டாம் வகுப்பிருக்குமோ தெரியாது. |
| கடற்கரை நீளத்திற்கு நடக்கிறார்கள். | சகுந்தலா: | அப்ப என்னண்டு? |
| | சிவராசா: | அவன் வேர்க்ஸ மனேஜருக்கு மாம்பழம் தொடக்கம் நல்லெண்ணை வரைக் குடுத்து, வீட்டு வேலை செய்து பந்தம் பிடிக்கத் தெரியும்... மனதுக்க ஒண்டை வெச்சுக் கொண்டு வெளியால எல்லாருக்கும் நல்ல பிள்ளையாய் நடிக்கத் தெரியும். எனக்கு அதொண்டும் தெரியாது. |
| | சகுந்தலா: | ஏன் வேர்க்ஸ் மனேஜர் உங்களோட சரியில்லையே? |
| | சிவராசா: | ஏன் சரியில்லை... அவர் தந்த கொமன்டேஷன் லெட்டர்லே மூண்டு இருக்குது.. ஏதன் முக்கிய வேலை எண்டா என்னை அல்லது கோபாலண்ணை எண்டொரு ஃபோமன் இருக்கிறார். அவரைக் கூப்பிட்டுத்தான் செய்விக்கிறார். |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சகுந்தலா: | இப்ப பிறமோஷனை மட்டும் கந்தசாமிக்கு குடுத்திருக்கிறார். |
| | சிவராசா: | கந்தசாமிட்ட நான் நல்லா ஏமாந்து போனன்... அவனுக்கு வேலை பழக்கினதே நான்... முதல் நாளே வீட்டை மாம்பழத்தோட வந்தான்... அப்பவே சிவகுரு சொன்னது, ஆள் பிழையானவன் எண்டு... சீ எளிய ராஸகல்... எடுத்த உடன என்ன மாதிரிப் பழகுவான் தெரியுமே ஒரு நாளைக்கு வா, போ எண்டு உரிமையோட கதைப்பான் ஒரு நாளைக்கு வாங்கோ, போங்கோ எண்டு மரியாதையாப் பழகுவான். |
| | சகுந்தலா: | இப்பிடி நேர்மையில்லாத, திறமையில்லாத ஆக்களை வேலைக்கெடுத்தால் கொம்பனிக்கெல்லோ கூடாது. |
| | சிவராசா: | அதை நாங்களெல்லோ நினைக்கிறம் சகுந்தலா, எனக்கு மனம் விட்டுப் போச்சு... இந்த உலகமே ஒரு பொய்யான, பிழையான வழியில போகுது... என்னைப் போல ஆக்களுக்கு இந்த உலகத்தில வாழ முடியாது... நான் ஒரு மிஸ்ஃபிட். |
| | சகுந்தலா: | ராசன், மனவருத்தப்படாதேங்கோ... எல்லாம் நன்மையா வரும். உங்கட வேர்க்ஸ் மனேஜர்தான் சம்பளத்துக்கு வேலை செய்யிறவன். கொம்பனியைப் பற்றி அக்கறைப்பட மாட்டான். முதலாளி என்னவாம்... அவற்ற ஃபக்டரியில திறமையான ஆக்களிருந்தால் அவருக்குத்தானே நல்லது. |
| | சிவராசா: | அதுதான் கோபாலண்ண சொன்னார். என்னைப்போய் நேரடியா முதலாளியோட கதைக்கட்டாம். |
| | சகுந்தலா: | ஓம் ராசன், நீங்கள் போய் முதலாளியோட கதையுங்கோ... உலகத்தில பிழையான விஷயங்கள் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | நடக்கிறதுதான், ஆனால் நிலைச்சு நிக்காது... நீங்கள் மனதைத் தளர விடாமல் போய்க் கதையுங்கோ. |
| ஒரு இடத்தில் நின்று, வந்த தூரத்தை சிவராசா திரும்பிப் பார்க்கிறான். | | |
| | சிவராசா: | வாரும் சகுந்தலா திரும்பிப் போவம், கன தூரம் வந்திட்டம். |
| இருவரும் திரும்பி நடக்கிறார்கள். | | |
| | சிவராசா: | அப்பிடி முதலாளிட்டைப் போய்க் கதைச்சும் சரிவராவிட்டால்? |
| | சகுந்தலா: | அது சரிவரும், வராவிட்டால்... |
| சகுந்தலா சிவராசாவின் முகத்தைப் பார்க்கிறாள். சிவராசா சகுந்தலாவைப் பார்த்து: | | |
| | சிவராசா: | வராவிட்டால்... |
| | சகுந்தலா: | சொன்னால் கோவிக்கக்கூடாது. |
| | சிவராசா: | ஏன் கோவம். |
| | சகுந்தலா: | உங்கட கொள்கையள எதிர்த்துப் பேசிறன் எண்டு. |
| | சிவராசா: | எனக்கு உம்மில கோவம் வராது: |
| இருவரும் சிறிது நேரம் மௌனம். | | |
| | சகுந்தலா: | அப்பிடிச் சரிவராட்டா நீங்கள் ஊருக்குத் திரும்பி வாங்கோ. |
| | சிவராசா: | வந்து... |
| | சகுந்தலா: | உங்கட தொழிலைச் செய்யுங்கோ. அல்லது நீங்கள் சொன்ன மாதிரி உங்கடை தொழிலை வைச்சுச் சாதி பேசிச்சினம் எண்டா, காணி குத்தகைக்கு எடுத்து வயல் செய்யுங்கோ... |



படிப்பகம்

www.padippakam.com

**காட்சி விளக்கம்**

**ஒலி**

சிவராசா: எங்கட சமூக அமைப்பு முறை மாறு மட்டும் எனக்கும் ஊருக்கும் ஒத்து வராது.

சகுந்தலா: சமூகம் தன்ரபாட்டில மாறும் எண்டு எதிர்பார்க்காதையுங்கோ ... அதுக்காக உங்களைப் போய்ப் போராட்டம் செய்து அடிபிடிபடவும் சொல்லேல்லை ராசன்... எங்கடை இந்தச் சாதிப் பிரச்சினை எண்டிறது ஒரு சாதாரண விஷயம்... முந்தின காலத்தில ஒரு வேளை அது ஒரு அடக்குமுறையாயிருந்திருக்கலாம் ... இப்ப அப்பிடி அடக்கியாள முடியுமே... உரிமையளைப் பறிக்க முடியுமே... வேணுமெண்டால் ஒருத்தரையொருந்தர் இழிவுபடுத்திறதுக்காகச் சாதியைச் சொல்லிப் பேசலாம். அது மனிசன்ர இயல்பு... தன்ர எதிரிய இழிவுபடுத்த வேணுமெண்டதுக்காகப் பேசிறது. எங்கட ஐயாவ எளிய வாத்தி எண்டு பேசிறதில்லையே... நடராசா மாமாவை எளிய கிளாக்கன் எண்டு பேசிறேல்லையே. அப்பிடித்தான் இதுவும்... கோவம் வாற நேரத்தில அப்பிடிப் பேசிறது... இந்தப் பேச்சுத்தான் இப்ப எங்கட சமூகத்தில ஒருத்தன்ரை மனதைப் புண்படுத்துது .. அல்லது ரோசமுள்ளவைக்கு ஆத்திரத்தை உண்டாக்குது... இது ஒரு உணர்வு ரீதியான பாதிப்பே தவிர மற்றும்படி எந்த விதத்திலையும் ஒருதரையும் பாதிக்கேல்லை.

சிவராசா: தன்மானமுள்ள ஒருதனும் அந்த உணர்வு ரீதியான பாதிப்பை ஏற்க மாட்டான்... பொருளாதாரப் பாதிப்பு ரெண்டாம் பட்சம்.

சகுந்தலா: உண்மைதான் ... அதுக்குத்தான் சொல்றன். ஊரிலை வந்து கமத்தைச் செய்யுங்கோ... உதாசீனங்களைப் புறக்கணியுங்கோ .. பொருளாதார ரீதியாக, கல்வி ரீதியாக முன்னேறுங்கோ ... எல்லும் பத்து



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | வருஷத்தில சாதியின்ர இந்தச் சின்ன பாதிப்பு கூட இல்லாமல்ப் போயிடும்... அதை விட்டிட்டு ஊரைவிட்டு வந்து இப்பிடிப் பட்டணத்தில வஞ்சகம், சூது, பொறாமை, கபடம் தான் வாழுறதுக்காக மற்றவைக்குக் கழுத்தறுக்கிறது, பந்தம் இதுகளோட போராடுறது உங்களை எல்லா விதத்திலும் பாதிக்கும், ராசன் உலகத்தில நம்பிக்கைத் துரோகம் பாதிக்கிற மாதிரி ஒருத்தனை ஒண்டும் பாதிக்காது... நகர வாழ்க்கையில அதை அடிக்கடி சந்திக்க வேண்டி வரும்... ஊர்ச் சனங்கள் பாவம், அடிப்படையில் வஞ்சகமில்லாததுகள் ... சண்முகம் மாமாவைப் பாக்கேல்லையே. |
| சிவராசா மெல்லச் சிரிக்கிறான். | | |
| | சிவராசா: | சகுந்தலா, நீர் பட்டதாரியாக முன்னமே இப்பிடிக் கதைக்கிறீர்... எக்கணம். |
| | சகுந்தலா: | உலகத்தில நடக்கிறதுகளை அவதானிச்சுச் சிந்திக்கிறதுக்குப் பட்டதாரியா இருக்கத் தேவையில்லை ராசன். |
| இருவரும் சிறிது நேரம் மௌனமாக நடக்கிறார்கள். | | |
| | சிவராசா: | சகுந்தலா, எனக்கென்னவோ ஊருக்கு வரப் பிடிக்கேல்லை. |
| இருவரும் சிறிது நேரம் மௌனமாக நடக்கிறார்கள். | | |
| | சிவராசா: | சகுந்தலா, என்னில கோவமே. |
| | சகுந்தலா: | ராசன், எனக்கு உங்களில கோவம் வராது... உங்கட விருப்பத்துக்குக் குறுக்க நான் ஒரு நாளும் நிக்க மாட்டன்... நான் நினைச்சதைச் சொன்னன். கணக்கக் கதைச்சிட்டன் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | | ஒலி |
|---|---|---|
| | | எண்டால் என்னை மன்னிச்சி டுங்கோ... |
| சகுந்தலாவின் கண் கலங்குகின்றது. | | |
| | சிவராசா: | சீ விசர்... நீர் ஒண்டும் கனக்கக் கதைக்கேல்லை... சரி அதை விடும்... இப்ப போறம், நான் இரவைக்கு ஸ்டேஷனுக்கு வாறன். |
| சகுந்தலா சிவராசாவின் முகத்தை உற்றுப் பார்க்கிருள். | | |
| | சிவராசா: | என்ன சகுந்தலா... |
| | சகுந்தலா: | ஃபக்டரியில கவனமா இருங்கோ... பிரச்சினையள் வந்தா என்னை நினையுங்கோ. |
| சிவராசா ஆதரவாக சகுந்தலாவின் வலது கரத்தைப் பற்றி முத்தமிடு கிறான். இருவரும் கடற்கரைக் கற் களின் மேல் ஏறுகிறார்கள். | | |

(காட்சி முடிவு)

காட்சி 36

இடம்: ஒரு சாராயக்கடை

நேரம்: இரவு 8.00 மணி

**பாத்திரங்கள்**

கந்தசாமி, சிவகுரு, பொன்சேகா, வேறு சில தொழிற்சாலை ஊழியர் கள்.

| | |
|---|---|
| 1. கந்தசாமி போதையில் தள்ளாடிய படி பாரை விட்டு வெளியே வந்து முன்னால் நிற்கும் தள்ளு | (பாருக்குள் இருந்து மது அருந்துபவர் களின் இரைச்சல் கூச்சல் முதலியன லேசாகக் கேட்கிறது) |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| வண்டில்க் கடலை வியாபாரியிடம் கடலை வாங்குகிறான். | | |
| 2. அந்த வழியால் நடந்து போகும் சிவகுருவைக் கந்தசாமி கண்டு விடுகிறான். | கந்தசாமி: | சிவகுரண்ணை ... சிவகுரண்ணை ... உங்களைத்தான்... கொஞ்சம் நில் லுங்கோ... |
| 3. சிவகுரு நின்று திரும்பிப் பார்க்க கந்தசாமி தள்ளாடியபடி அவனை நோக்கி வருகிறான். | சிவகுரு: | என்ன கந்தசாமி, என்ன விஷயம். |
| | கந்தசாமி: | இந்தாருங்கோ, கடலை கொஞ்சம் சாப்பிடுங்கோ ... சிவகுரண்ணை, இண்டைக்கு எனக்கு ஒரு சந்தோஷ மான நாள்... ஒரு சாதனை... எனக்கு ஃபோமன் வேலை கிடைச் சிட்டுது. |
| | சிவகுரு: | கேள்விப்பட்டனான்... |
| | கந்தசாமி: | என்னண்ணை, ஒரு மாதிரிச் சொல் லுறீங்கள்... உங்களுக்கு சந்தோஷ மில்லையே... |
| | சிவகுரு: | ஒராளுக்கு நல்லது நடந்தால் சந்தோஷப்பட வேண்டிய விஷயந் தானே. |
| | கந்தசாமி: | எனக்குத் தெரியும் உங்கட நல்ல மனசு. சிவராசாவுக்கு இந்த வேலை கிடைக்கேல்லையெண்டு உங்களுக்கு மனவருத்தமோவெண்டு நினைச்சன்... ஆனா அவன் ஒரு ராஸ்கல்... உங்களுக்கு அவன் செய்யிற துரோ கத்துக்கு ... நன்றி கெட்ட தனம் அண்ணை. |
| | சிவகுரு: | சிவராசா எனக்குத் துரோகம் செய்யிறானோ... என்ன கந்தசாமி சொல்லுறாய். |
| | கந்தசாமி: | வேண்டாம் கோபாலண்ணை... சீ... சிவகுரண்ண... இந்த சந்தோஷமான |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | நேரத்தில ஏன் அந்தக் கதையள்... இப்ப எங்க போறியள் ... வாங்கோவன் உள்ளுக்கு, என்ர ஃபிறெண்ட்ஸ் எல்லாம் இருக்கிறாங்கள். |
| | சிவகுரு: | வேண்டாம் கந்தசாமி, நான் போக வேணும். |
| | கந்தசாமி: | என்னண்ணை, இண்டைக்கு என்ர சந்தோஷத்தைக் கொண்டாட உங்களைக் கூப்பிடுறன், மறுக்கிறீங்கள்... அண்ணி கோவிப்பாவே... செல்லுங்கோ... தம்பி கந்தசாமியின்ர பார்ட்டி எண்டு, ஒண்டும் சொல்லமாட்டா... |
| | சிவகுரு: | இல்லைக் கந்தசாமி, நான் போறன்... உதுகள் எனக்குப் பழக்கமில்லை |
| | கந்தசாமி: | அண்ண, இப்பிடி என்ர மனத்தைப் புண்படுத்தக் கூடாது... அன்பாக் கூப்பிடுறன் ... சும்மா உள்ளுக்க வாங்கோ... கூல்ட்றிங் எண்டாலும் குடிச்சிட்டுப் போங்கோ... எனக்குப் பெருமையாயிருக்கும் என்னயோசிக்கிறியள், வாங்கோ... |
| இருவரும் பாருக்குள் போகிறார்கள். பாருக்குள் யூனியன் தலைவர் பொன் சேகா, மற்றும் கூட்டத்தினர் இருந்து மது அருந்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் நல்ல போதை. கந்தசாமி சிவகுருவை அவர்களிடம் அழைத்துப் போகிறான். | | |
| | கந்தசாமி: | ஃபிறெண்ட்ஸ்.. இவரத் தெரியுந்தானே? சிவகுரு அண்ணன். எங்கட முதலாளியின்ர வலது கை.. இவர் இல்லாட்டி அவர் அசையேலாது. |
| சிவகுரு ஒரு கதிரையில் அமர்கிறான். | பொன்சேகா: | வாங்க சிவகுரு, இருங்கோ... எப்பிடி? சொல்லுங்கோ உங்கட சிவராசா கிட்ட தொழிலாளர் எண்டா ஒற்றுமையா இருக்க வேணும் ... |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | யூனியனோடை சண்டை பிடிச்சுக் கொண்டு ஒண்டும் செய்யேலா. |
| | கந்தசாமி: | சிவகுரண்ணை, ஒண்டு சொல்றன்... கொம்ராட் பொன்சேகா எனக்கொரு தெய்வம் மாதிரி அண்ண... எல்லாம் அவரால வந்த வாழ்வு. |
| கந்தசாமி பொன்சேகாவின் கையைப் பிடித்துக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டு இருப்பது போல் இருக்கிறான். பின் எழுந்து பொன்சேகாவின் காலில் விழப் போகிறான். | | |
| | பொன்சேகா: | என்ன இது கந்தசாமி, எழும்புங்கோ... எல்லாம் தொழிலாளர் பலம்.... சிவகுரண்ணனக் கவனியுங்கோ. |
| கந்தசாமி கதிரையில் திரும்ப அமர்ந்து. சேர்வரைக் கூப்பிட்டு: | கந்தசாமி: | தம்பி, ஒரு திறமான கூல்ட்றீங்க் கொண்டா, எங்கட சிவகுரு அண்ணைக்கு... அது வரட்டுமண்ணை... உங்களோட ஒரு முக்கியமான விஷயம் கதைக்கவேணும். |
| | சிவகுரு: | என்ன விஷயம்... |
| கந்தசாமி ஒரு நமட்டு வஞ்சகச் சிரிப்புடன் சிவகுருவைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறான். | | |
| | கந்தசாமி: | சிவராசாவை உங்கட வீட்டில நெடுக வைச்சுக் கொண்டிருக்கப் போறீங்களே... |
| | சிவகுரு: | வைச்சிருந்தால் என்ன... |
| கந்தசாமி முகத்தை ஒருவித சீரியஸாக வைத்துக் கொண்டு:- | கந்தசாமி: | வேண்டாம் அண்ணை... அவனை மெல்ல விலத்திவிட்டிடுங்கோ. |
| | சிவகுரு: | ஏன்... என்ன விசயம்? |
| | கந்தசாமி: | நான் சொல்றன், இப்பிடியே விட்டுப் பிறகு ஊருலகத்துக்குத் தெரிஞ்சு, |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | | ஒலி |
|---|---|---|
| | | உங்களுக்கு மானக்கேடு வரமுன்னம் தடுத்துப் போடுறது நல்லது. |
| | சிவகுரு: | விசயத்தைச் சொல்லன். |
| அப்போது குளிர்பானத்தை சேர்வர் கொண்டு வந்து சிவகுருவிடம் கொடுக்கிறான். | கந்தசாமி: | அப்செட் ஆகாதையுங்கோ அண்ண... இது வெளியில கதைக்கிற விசயமில்ல. அண்டைக்கு நான் ராசன் அடிப்பட்டுக் கிடக்கிறான் எண்டு பாக்க உங்கட வீட்டுக்கு வந்தனா னெல்லே... அப்ப நீங்கள் இல்லை.. சிவராசா அண்ணியோட நடந்து கொண்ட விதம் அவ்வளவு நல்லா யில்லை. |
| சிவகுருவின் முகத்தில் கோபக்கனல் தெறிக்கிறது. | | |
| குளிர்பானத்தைக் கந்தசாமியின் முகத்தில் எற்றி, அவனை செம்மையாக அடிக்கிறான். மற்றவர்கள் ஸ்தம்பித்துப் போய்ப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். பார் கீப்பரும் சேர்வரும் வந்து இருவரையும் விலத்திவிடுகிறார்கள். | | |
| | சிவகுரு: | றாஸ்கல்... உந்த வேலையெல்லாம் வேற ஆரோடையும் வைச்சுக் கொள். |
| சிவகுரு பாரை விட்டு வெளியேறுதல். | | |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| காட்சி **37** | | |
| **இடம்:** சிவகுருவின் வீடு | | |
| **நேரம்:** இரவு 10.00 மணி | | |
| **பாத்திரங்கள்** | | |
| சிவராசா, சிவகுரு, நிலும். | | |
| சிவகுரு கதிரையில் இருக்கிறான். | | |
| நிலும் வாசற்படியில் இருக்கிறாள். | | |
| அப்போது சிவராசா வருகிறான். | | |
| | நிலும்: | ஆ... ராசன் வருகுது. |
| | சிவகுரு: | ராசன், எங்க போனனி... |
| சிவராசா வந்து கதிரையில் இருந்து கொண்டே: | சிவராசா: | இண்டைக்கு சகுந்தலா 9.05 எக்ஸ் பிரஸில யாழ்ப்பாணம் போகுது... ஸ்டேஷனுக்குப் போட்டு வாறன். |
| | நிலும்: | இண்டைக்கு முழுக்க நீங்க வரேல்ல. |
| | சிவராசா: | நான் வேலை முடிய சகுந்தலா வீட்டுக்கு வெள்ளவத்தைக்குப் போட்டு அப்பிடியே எம், டீ வீட்ட போட்டுப் பிறகு ஸ்டேஷனுக்குப் போட்டு வாறன். |
| | சிவகுரு: | எம். டீ. வீட்ட போனனியோ... எத்தினை மணிக்கு? |
| | சிவராசா: | ஏழு மணி இருக்கும். |
| | சிவகுரு: | என்னவாம்? |
| | சிவராசா: | அவருக்குக் கேட்ட உடன சரியான ஆத்திரம் வந்திட்டுது... அப்பிடி உண்மையா நடந்திருந்தால் அது பெரிய பிழை எண்டு போட்டு உடன வேர்க்ஸ் மனேஜருக்கு ரெலிஃபோன் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | பண்ணினார் ... ஆள் இல்லை ... பிறகு, 25ந் திகதி ஃபக்டரியில டிரக்டேர்ஸ் மீட்டிங் இருக்குதாம், காலம 10.00 மணிக்கு ... அப்ப வரட்டாம், தான் விசாரிச்சு முடிவு சொல்றாராம். |
| | சிவகுரு: | ராசன், உனக்கு முதலே சொல்லி வைக்கிறன் ... முதலாளி சொல்லிப் போட்டாரெண்டு நம்பிக்கொண்டிராதை. பிறகு ஏமாற்றத்தை உன்னால தாங்கேலாது. |
| | சிவராசா: | ஏன் சிவகுரு அப்பிடிச் சொல்லுறாய். |
| | சிவகுரு: | உவங்கள நம்பேலாது ... கதைக் கேக்க தேனொழுகக் கதைப்பாங்கள் ... ஆனால் குறி தங்கட விசயங்களில்தான் ... |
| | சிவராசா: | ஏன் சிவகுரு, தன்ர நிர்வாகத்தில இருக்கிற ஒரு இடத்தில பிழையான விசயம் நடக்குதெண்டால் தனக்குத்தான் கூடாதெண்டு நினைக்க மாட்டாரே. |
| | சிவகுரு: | நாங்கள் பிழை சரி பாக்கிற விதம் வேற ... அவங்கள் பாக்கிற விதம் வேற .. அவங்களுக்கு வாற லாபம் தான் அவங்களுக்குச் சரி. |
| | சிவராசா: | இதில முதலாளிக்கு வாற லாபம் என்னவாயிருக்கும். |
| | சிவகுரு: | 25ம் திகதியெல்லே உன்னை வரச் சொல்லியிருக்கிறார் . 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு வேர்க்ஸ் மனேஜர் வீட்டில முதலாளிக்கு டின்னர் ... அண்டைக்கு அவர் தானே கார் எடுத்துக் கொண்டு போவார்.. என்னைக் கூப்பிட மாட்டார். வேணுமெண்டால் நீ வா, உனக்குக் காட்டிறன் அவருக்கு வாற லாபங்கள் என்னெண்டு. |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
| --- | --- |

காட்சி 38

இடம்: வேர்க்ஸ் மனேஜரின் வீடு.

நேரம்: இரவு 9.00 மணி

**பாத்திரங்கள்**

சிவராசா, சிவகுரு, எம். டீ., வேர்க்ஸ் மனேஜர், வேர்க்ஸ் மனேஜர் மனைவி.

வேர்க்ஸ் மனேஜரின் வீட்டு போட்டிக் கோவில் முதலாளியின் கார் நிற்கிறது.

சிவகுருவும் சிவராசாவும் மெல்ல வேர்க்ஸ் மனேஜரின் வீட்டு வளவுக்குள் நுழைகிறார்கள்.

ஒரு ஜன்னலடியில் போய் அதனூடாக உள்ளே பார்க்கிறார்கள்.

முன்னறையில் வேர்க்ஸ் மனேஜர் போதையில் படுத்திருக்கிறார்.

சிவகுருவும் சிவராசாவும் இன்னுமொரு ஜன்னலை நோக்கி நகர்ந்து அதனூடாகப் பார்க்கிறார்கள்.

டைனிங் டேபிளில் முதலாளி இருக்கிறார். வேர்க்ஸ் மனேஜரின் மனைவி மிக நெருக்கமாக இருந்து முதலாளிக்கு உணவூட்டுகிறாள்

சிவராசாவின் முகம் ஆச்சரியத்துடன் தெரிகிறது.

(கட்)

சிவகுருவும் சிவராசாவும் றோட்டில் நடந்து வருகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சிவராசா: | என்ன கண்றாவி சிவகுரு... முன்னால மனேஜர் வெறியில கிடக்கிறான். |
| | சிவகுரு: | வெறி பாதி... நடிப்புப் பாதி... உப்பிடிக் கண்டும் காணாம இருந்து முதலாளியத் திருப்திப்படுத்தித் தன்ர காரியத்தைச் சாதிக்கிறதுதானே அவனுக்கு முக்கியம்... |
| | சிவராசா: | சீ... என்ன மானக்கேடு... இப்பிடி மானங்கெட்டுப் பதவில இருக்க வேணுமே. |
| | சிவகுரு: | அவங்களுக்கேத்த பெண்சாதிமாரும் வந்து வாய்ச்சிருக்கிறாளவை. |
| காறித் துப்பி: | சிவராசா: | சீ... மானங்கெட்ட பொம்பிளையள். விபச்சாரியள், இவையளைவிட நேர்மையானவளவை... |
| சிவகுரு ஒரு புன்முறுவலுடன்: | சிவகுரு: | ராசன், இதின்ரை வளைவு நாளைக்கு உனக்குத்தாற பதிலில தெரியும்... ஏனெண்டா கந்தசாமிக்கு ஃபோமன் வேலை குடுக்க முழுக்க முழுக்க சப்போட் பண்ணினது வேர்க்ஸ் மனேஜர் தான்... |
| | சிவராசா: | யூனியன் லீடர் பொன்சேகாவுந்தானே. |
| | சிவகுரு: | யூனியன் கந்தசாமிக்கு சப்போட் எண்டாலும் ராசன், உனக்கு அந்த போஸ்ட்டத் தந்தால் அவங்கள் வெளிப்படையா அதை எதிர்க்கேலாது... உனக்கும் யூனியனுக்கும் சரியில்லையெண்டதை வைச்சுக் கொண்டு வேர்க்ஸ் மனேஜர் விளையாடிவிட்டிட்டார். நீ கேட்டால் யூனியன் எண்டு சொல்லித் தப்பலாந்தானே... உனக்குத் தனிச்சு ஒண்டும் செய்யேலாது. |
| | சிவராசா: | பார் சிவகுரு, சுரண்டலுக்கெதிரா இப்பிடி எத்தினை அமைப்புகளை, |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | சட்டங்களை வைச்சாலும் கள்ளங்கள் தான் அதைத் தந்திரமாப் பிரயோசனப் படுத்தி நன்மையடையிறாங்கள். |

(காட்சி முடிவு)

காட்சி 39

இடம்: தொழிற்சாலை போட் றூம்

நேரம்: காலை 10.00 மணி

பாத்திரங்கள்

சிவராசா, முதலாளி, வேர்க்ஸ் மனேஜர், பியோன், செக்கியூரிட்டி காட்ஸ்.

போட் றூம் தள்ளுக் கதவுக்கு மேலே உள்ள மணிக்கூட்டில் பத்து மணி. மணிக்கூட்டிற்குக் கீழே நாட்காட்டியில் 25ம் திகதி.

போட் றூமுக்கு முன்னால் உள்ள வரவேற்பறையில் சிவராசா நிற்கிறான்.

பியோன் தள்ளு கதவைத் தள்ளிக் கொண்டு போட் றூமுக்குள் இருந்து வரவேற்பறைக்குள் வருகிறான்.

பியோனிடம் சிவராசா ஒரு துண்டுக் கடிதத்தைக் கொடுக்கிறான். பியோன் உள்ளே போய் விட்டு வந்து சிவராசாவிடம் போட் றூமுக்குள் போகும்படி சைகை செய்கிறான்.

சிவராசா தள்ளுகதவைத் தள்ளிக் கொண்டு போட் றூமுக்குள் நுழைகிறான்.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| போட் றூம். | | |
| ஒரு பெரிய மேசை முகப்பில் முத லாளி அமர்ந்திருக்கிறார். மேசை யைச் சுற்றிவர வேர்க்ஸ் மனேஜர் முதலாக சில 'தொழிற்சாலை உயர் உத்தியோகத்தர்கள் அமர்ந்திருக்கி றார்கள். முதலாளி சிவராசாவைப் பார்க்கிறார். வேர்க்ஸ் மனேஜர் குனிந்து மேசையைப் பார்த்தபடி இருக்கிறார். | | |
| | முதலாளி: | என்ன சிவராசா, எல்லாத்தையும் குழப்பி வைச்சிருக்கிறாய். |
| சிவராசா திகைத்து:- | சிவராசா: | என்ன சொல்றீங்கள் சேர். |
| | முதலாளி: | நீ தகுதியானவனாயிருந்தும் உனக் குரிய பதவியைத் தரேல்லையெண்டு நீ சொன்னதை நம்பி, இங்க வந்து விசாரிச்சால் உன்னைப் பற் றிப் பெரிய றிப்போர்ட் எல்லாம் இருக்குது. |
| | சிவராசா: | சேர்... என்ர வேலையைப் பற்றி ஒரு சின்னக் குறையும் ஒருதரும் சொல்லுறதில்லை. வேர்க்ஸ் மனே ஜர் எனக்கு ரெண்டு மூண்டு கொமெண்டேஷன்ஸ் தந்திருக்கிறார். என்ற திறமையில ஏதும் குறை யிருக்குதோ எண்டு வேர்க்ஸ் மனே ஜரிட்டக் கேட்டுப் பாருங்கோ சேர். |
| முதலாளி வேர்க்ஸ் மனேஜரைப் பார்க்கிறார். வேர்க்ஸ் மனேஜர் குனிந்திருந்தபடியே மேல்க்கண்ணால் முதலாளியைப் பார்த்து ஒரு அலட் சியமான விஷமப் புன்னகை செய்கிறார். முதலாளியும் ஒரு அர்த்தமுள்ள நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார். மற்றவர்கள் முகத்திலும் ஒரு பரிகாசமான புன்சிரிப்பு. சிவராசா இவர்களைப் பார்க்கிறான். | | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| முதலாளியின் முகம் இறுக்கமாகிறது. | முதலாளி: | பாத்தியா சிவராசா ... உன்ரை வேலையைப் பாராட்டி கொமன்டேஷன் தந்த வேர்க்ஸ் மனேஜர் எப்பிடி உனக்குப் பிறமோஷன் தராமல் போவார்... யோசிச்சுப் பாத்தியா... சும்மா கண்மூடித்தனமாப் பெரியாக்களைப் பிழை சொல்ல வெளிக்கிடக் கூடாது. |
| | சிவராசா: | எனக்கும் அதுதான் சேர் விளங்கேல்லை. |
| | முதலாளி: | எது? |
| | சிவராசா: | என்ர வேலையைப் பாராட்டிற வேர்க்ஸ் மனேஜர், ஏன் எனக்கு உரிய பிறமோஷன் தரேல்ல எண்டது. |
| | முதலாளி: | சிவராசா, நாங்கள் என்ன செய்தாலும் அதுக்கு ஒரு சரியான காரணம் இருக்கும்... உனக்கும் யூனியனுக்கும் என்ன பிரச்சினை... யூனியனுக்கு உன்ர பேரைக் கேட்டாலே ஆத்திரம் வருகுது. |
| | சிவராசா: | யூனியனுக்கில்ல சேர், லீடர் பொன் சேகாவுக்கு. |
| முதலாளியின் முகத்தில் கடுமை: (முதலாளியின் இந்த வசனம் தொடங்க அடிக்கடி சிவராசாவின் முகம் காட்டப்பட்டு, அவனுக்கு முதல் நாள் இரவு வேர்க்ஸ் மனேஜரின் வீட்டில் முதலாளியும் வேர்க்ஸ் மனேஜர் மனைவியும் நெருக்கமாக இருந்த காட்சிகள் மின்னல் போல நினைவில் வந்து போவதுக் காட்டப்படல் வேண்டும்) | முதலாளி: | எனக்கு வியாக்கியானம் வேண்டாம்... உனக்குப் ப்றமோஷன் தந்தால் யூனியனுக்குப் பிடிக்காது... நாங்கள் தொழிற்சாலை நடத்துறனாங்கள். யூனியனைப் பகைச்சு ஒண்டும் செய்யேலாது... நீ உழைக்க வந்தனி, சின்னப் பெடியன்... இன்னும் எவ்வளவோ காலம் உழைச்சு முன்னுக்கு வரவேண்டியனி ... சமுதாயத்தில உள்ள அமைப்புக்களோட இணைஞ்சு கட்டுக்கோப்பா வாழ்ந்து, ஒற்றுமையா விசயங்களைச் சாதிக்கப் பழகவேணும். எதிலையும் ஒரு நிதானம், பொறுமை வேணும்... இப்ப சும்மா குழந்தைப் பிள்ளைத்தனமா |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | யூனியனோட பகைச்சுக் கொண்டு நிக்கிறாய் உனக்கு வேலை தந்து போட்டு தாங்கள் கரைச்சல்ப் படவே: |
| | சிவராசா: | சேர், அவங்கள் அநியாயமா ஸ்ட்ரைக் செய்ய வெளிக்கிட, நான் அதைக் கண்டிச்சநாலதான் எனக்கும் அவங்களுக்கும் பகை வந்தது. |
| | முதலாளி: | இப்ப பார் சிவராசா, நீ சின்னப் பெடியன்... சொல்லுறதைக் கேள்... உலகம் நாகரீகமடைஞ்சு இப்ப ஒவ்வொரு அமைப்புக்களை உருவாக்கி இயங்கிக் கொண்டு வருகுது... அந்தந்த அமைப்புகள் அது அதுக்குரிய கடமைகளைச் செய்யும். தொழிலாளர் யூனியன் எண்டா, ஸ்ட்ரைக் செய்யிறது அவசியமெண்டால்ச் செய்யத்தான் வேணும். நாங்கள் அதை விசாரிச்சுத் தீர்த்து வைக்கத்தான் வேணும். எல்லாம் ஒரு ஒழுங்கு முறையோட நடக்கும்.. அவங்கள் ஸ்ட்ரைக் செய்தால் நாங்கள் எல்லோ அதை விசாரிச்சுத் தீர்த்து வைக்கிறது... இப்ப அண்டைக்கு ஸ்ட்ரைக் செய்யப்போறம் எண்டாங்கள் ... என்ன நடந்தது... நாங்கள் தீர்த்து வைக்கேல்லையா.. நீ, ஏன் வீணாத் தலையைக் குடுக்கிறாய்... |
| | சிவராசா: | சேர், நீங்கள் சொல்றதைப் பாத்தால் எல்லாம் ஒரு சம்பிரதாயம் மாத நீங்கள் கருதுறியள் போலக் கிடக்கு... உலகத்தில நியாயத்தை நிலைநாட்டத்தான் சேர் இந்த அமைப்புகள் இருக்கு. |
| | முதலாளி: | இப்ப நாங்கள் நியாயப்படி நடக்கேல்லையே. |
| | சிவராசா: | சேர், இன்ரவியூவுக்கு வந்தவையளில எனக்குத்தான் தகுதியிருக்கு... எனக்குப் ப்றமோஷன் தாறதுதான் நியாயம். |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | முதலாளி: | நியாயம், அநியாயம் ஓராளோட மட்டும் சம்பந்தப்பட்டதில்லை...நீ தொழிலாளரோட ஒற்றுமையாயில்லை ... அவ்வளவு தொழிலாளருக்கும், உனக்குப் ப்றமோஷன் தாறது நியாயமாப் படேல்ல ... இப்ப இதில எது கூட நியாயம். |
| சிவராசாவின் முகத்தில் கோபம் தெரிகிறது. | | |
| | சிவராசா: | சேர், எனக்கு வேண்டிய தகுதி எல்லாம் இருக்கு... இப்ப எனக்கு இந்த ப்றோமஷன் தந்தால் யூனியனால அதை வெளிப்படையா எதிர்க்க ஏலுமா? அதைச் சொல்லுங்கோ... அப்பிடி எனக்கு ப்றமோஷன் தாறதுக்கு ஸ்ட்ரைக் செய்ய முடியுமெண்டால் சொல்லுங்கோ, நான் நீங்கள் சொல்லுறதை ஏற்றுக் கொள்ளுறன். |
| முதலாளி கடுமையாக: | முதலாளி: | ஓகே... சிவராசா, யூ கென் கோ நௌ... எங்களுக்கு முக்கியமான வேலையள் இருக்கு... உன்னோட இவ்வளவு நேரம் கதைச்சதே ரூமச். |
| | சிவராசா: | சேர், முடிவா என்ன சொல்றீங்கள். |
| முதலாளியும் மற்றவர்களும் சிவராசாவைப் பொருட்படுத்தாமல் ஃபைல்களைப் புரட்டி ஏதோ தமக்குள் கதைத்து நிலமையைச் சுமூகமாகத் தொடர்வது போல் பாவனை செய்கிறார்கள். | | |
| தான் அலட்சியப்படுத்தப்படுவது கடும் கோபமாகச் சிவராசாவின் முகத்தில் பிரதி பலிக்கிறது. | | (கோபத்தின் உச்சிக்குச் செல்லும் மனநிலையை விளக்கும் இசை) |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| <u>ஃப்ளாஷ்பாக் காட்சிகள்</u> ஸ்ட்ரைக் செய்யப் போவதாகச் சொன்ன பொன்சேகாவைக்கண்டித்த காட்சிகள். (26ம் காட்சிகள்) | | |
| முதலாளி வேர்க்ஸ் மனேஜரின் மனைவியுடன் உறவாடிய காட்சிகள். முதலாளி, சிவராசாவுக்குப் ப்றமோஷன் கொடுக்காததற்குக் காரணம் யூனியன்தான் என்று சொல்லுவார் என்று சிவகுரு முதல் நாள் சொன்ன காட்சிகள் எல்லாம் மாறி மாறி மின்னி மறைகின்றன. | | |
| சிவராசா முகத்தில் கோபக்கனல் தெறிக்கிறது. வெறிப்பிடித்தவனாகிறான். | சிவராசா: | டேய் ராஸ்கல்... |
| எல்லோரும் திகைத்து நிமிர்ந்து சிவராசாவைப் பார்க்கிறார்கள். | | |
| சிவராசா முதலாளியின் முகத்தில் காறித் துப்புகிறான். | | |
| மேசையில் கிடந்த பூச்சாடியை எடுத்து முதலாளியை நோக்கி எறிகிறான், முதலாளி விலக அது சுவரில் மோதி உடைகிறது. | | |
| எல்லோரும் கலவரத்துடன் எழுந்து நிற்கிறார்கள். பியோன் ஓடி வந்து சிவராசாவை பிடிக்க முயல்கிறான். அவன் அடங்காது திமிறிக் கொண்டு உரத்த தொனியில்: | சிவராசா: | எளிய நாயளே, மானங் கெட்ட சென்மங்கள்... உங்களுக்கென்னடா கோட்டும் சூட்டும் .. உரிஞ்சு போட்டு றோட்டு றோட்டாத் திரியுங்கோடா... மூளைகெட்ட சென்மங்கள். |
| சிவராசாவின் கோப வெறி உச்சக் கட்டத்துக்குப் போய் அழுகையாக வெடிக்கும் நிலைக்கு வந்து விடுகிறான். | | உலகம், சமுதாயம், அமைப்பு, இயக்கம், நியாயம், உண்மை, நேர்மை, சத்தியம், பொறுமை இதுகளுக்கெல்லாம் புனிதமான அர்த்தங்கள் இருக்கடா... அது தெரியுமா உங்களுக்கு... அதுகளை எல்லாம் உங்கட சுயநலங்களுக்கு ஏற்ற மாதிரி |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | | மாத்திப் பிரயோகிச்சு அந்த வார்த்தைகளின்ர புனிதத் தன்மையையே கெடுக்கிறீங்களேயடா... எனக்குரிய ப்றமோஷனை நான் கேக்கிறது ஞாயமில்லையாம் எனக்குப் ப்றமோஷன் குடுக்கக் கூடாதெண்டு யூனியன் சொல்லுறது நியாமாம்... அதால தாங்கள் தொழிலாளரை மதிச்சு எனக்குப் ப்றமோஷன் தரேல்லையாம்... ஒற்றுமையாயிருந்து காரியம் சாதிக்க வேணுமாம்... டேய், ஆருக்கடா காது குத்துறியள்... இந்த உலகத்தில ஒரு தனிமனிதன் உண்மையா, நேர்மையா சத்தியமா, திறமையோட வாழ முடியாதபடி செய்து போட்டியளேடா.. பத்துக் கள்ளங்கள் சேந்து செய்யிற அநீதி எல்லாம் ஞாயம்... ஒருத்தன் நீதியா நடந்தா அது அநீதி... அது தானேடா உங்கட சித்தாந்தம்... டேய் துரோகியளே, ஒற்றுமை, அமைப்பு இயக்கம், சமுதாயம் இதுகளுக்கெல்லாம் உண்மையான, புனிதமான அர்த்தங்கள் இருக்கடா... அதுகளை அநீதியான வழியில பிரயோகிச்சு, அதுகளையெல்லாம் அர்த்தமில்லாத சடங்குகளாக்கிப் போட்டியளே ... உங்கட சுயநலங்களுக்காக இந்த வார்த்தைகளைப் பிழையாகப் பிரயோகிச்சு உலகத்தையே பாழாக்கிப் போட்டீங்களேயடா துரோகியளே. |
| செக்கியூரிட்டி காட்ஸ் விரைந்து வந்து சிவராசாவைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறார்கள். போட்றூமுக்கு வெளியே இழுத்து வருகிறார்கள். சிவராசா திமிறி போட்றூமைப் பார்த்துக் கத்துகிறான். | | |
| | சிவராசா: | டேய் நாசமாய்ப் போவாரே... உலகம் அழியப் போகுதடா... எனக்கு மட்டும் சக்தியிருந்தால், இப்பவே இந்த உலகத்தை சாம்பலாக்கிப் போடுவனடா... பொம் வைச்சுத் தகர்ப்பனடா... உங்களையெல்லாம் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| சிவராசாவை இழுத்துப் போகிறார்கள் | | தலைக்கீழாக தொங்க வைச்சு மூளை சிதற சுட்டுப் பொசுக்குவனடா. |

— ஃபேட் அவுட் —

(காட்சி முடிவு)

காட்சி 40

இடம்: சிவகுருவின் வீடு

நேரம்: இரவு 9.00 மணி

**பாத்திரங்கள்**

சிவராசா, நிலும், தபாற்காரன்.

| காட்சி விளக்கம் | | |
|---|---|---|
| சிவராசா அரைகுறைத் தாடியுடன் ஒரு கதிரையில் அமர்ந்து குனிந்த பார்வையுடன் இருக்கிறான். | | |
| உள்ளே நிலும் ஏதோ வேலை செய்து கொண்டிருக்கிறாள். | | |
| ஒரு தந்திச் சேவகன் மோட்டார் சைக்கிளில் வருவது தெரிகின்றது. நிலும் போய்த் தந்தியை வாங்கிப் பார்க்கிறாள். | நிலும்: | சிவராசா... உங்களுக்கு. |
| கொண்டு வந்து சிவராசாவிடம் கொடுக்கிறாள். சிவராசா அதை உடைத்துப் பார்த்துவிட்டு அதிர்ச்சியுடன்: | சிவராசா: | அக்கா... |
| | நிலும்: | என்ன ராசன்? |
| | சிவராசா: | சகுந்தலாவுக்கு சீரியஸாம். |
| சிவராசா மேசையிலுள்ள கடிகாரத்தைப் பார்க்கிறான். மணி 4.00. | சிவராசா: | அக்கா, இப்ப நாலு மணி... நான் 7.15 மெயிலில போகப் போறன். |

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

காட்சி விளக்கம் | ஒலி

காட்சி 41

இடம்: சங்கரலிங்கத்தின் வீடு

நேரம்: காலை 9.00 மணி

பாத்திரங்கள்

சிவராசா, அருணகிரி, சங்கரப் பிள்ளை, சண்முகம் மாமா, செல்வி, சகுந்தலா, கிராமத்து இளைஞர்கள், சனங்கள்.

செத்த வீடு.

சங்கரப்பிள்ளையின் வீட்டு கேற்றைத் திறந்து சிவராசா வருகிறான். வள வில் கிராமத்து சனங்கள் கவலை தோய்ந்த முகத்துடன் நிற்கிறார்கள்.

வளவின் ஒதுக்குப் புறமான பக்த் தில் இருந்து பறை மேளம் அடிக்கி றார்கள்.

விறாந்தையில் மூவர் இருந்து தேவா ரம் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மூலையில் சங்கரலிங்கம் சிலை யாக அமர்ந்திருக்கிறார்.

சிவராசா ஹோலுக்குள் போகிறான்.

சகுந்தலாவின் உடலைப் பெட்டியில் வைத்திருக்கிறார்கள். (மூடவில்லை) தலைமாட்டில் குத்துவிளக்குகள்.

ஒரு சிறுமி பக்கத்தில் நின்று உடலில் இலையான் மொய்க்காதவாறு விசிறி யால் விசுக்கிக் கொண்டு நிற்கிறாள்.

சிவராசா கல்லாய்ச் சமைந்து நிற்கிறான்.

சிவராசாவின் நினைவில் வருவது போல் சகுந்தலாவின் உடலில்



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| சுப்பர் இம்போஸ் பண்ணிப் பழைய காட்சிகள் காட்டப்படுகின்றன:<br><br>1. சகுந்தலாவை சிவராசா பேராதனையில் சந்தித்த காட்சிகள் (காட்சி 29)<br><br>2. சிவராசா கொழும்புக்குப் போகுமுன் சகுந்தலாவைக் கிணற்றடியில் சந்தித்த காட்சிகள் (காட்சி 11)<br><br>3. சிவராசாவும் சகுந்தலாவும் சிறுவர்களாகப் பழகிய கால நினைவுகள். (காட்சி 12)<br><br>4. மகரகம ஆஸ்பத்திரியில் கட்டிலில் படுத்துக் கொண்டு தனக்கு ஒரு வருத்தமும் இல்லை என்று சொன்ன காட்சி (காட்சி 34)<br><br>5. வெள்ளவத்தைக் கடற்கரையில் கதைத்த காட்சி (காட்சி 34)<br><br>திடீரென அருணகிரி அழுகை பீறிட ஓடி வருகிறான். சிவராசாவைக் கட்டிக் கொண்டு:- | அருணகிரி: பாத்தியே ராசன், என்ர தங்கச்சியை... அவளுக்கு ஒண்டுமில்லை எண்டு சொன்னியே... ஐயோ ராசன், என்ர நெஞ்சு வெடிக்கப் போகுது... கான்சர் முத்தி எனி ஒண்டும் செய்யேலாதெண்டு சொல்லியிருக்கிறாங்கள்... அந்த நேரமும் தான் சாகப் போறதெண்டு தெரியாமல் என்ர தங்கச்சி எத்தினை சந்தோஷமா இருந்தாள்... நான் அண்டைக்குச் சொல்ல, நீ அப்பிடி இருக்காது எண்டு சொல்லேக்க எனக்கு நெஞ்சில பால் வாத்த மாதிரி இருந்துதே... ஐயோ... இப்ப... ஐயோ என்ர தங்கச்சி... |
| சிவராசா முட்டி வரும் அழுகையை அடக்கி விம்மி அழுகிறான். அருணகிரி வாய்விட்டு அழுகிறான். | |

— ஃபேட் அவுட் —

(காட்சி முடிவு)



படிப்பகம்

www.padippakam.com

காட்சி விளக்கம் | ஒலி

காட்சி 42

இடம்: சிவராசாவின் வீடு.

நேரம்: காலை 9.00 மணி

**பாத்திரங்கள்**

சின்னான், செல்லி, சிவராசா, சிவகுரு, நிலும், குழந்தை, சண்முகம், அருணகிரி, சங்கரலிங்கம், மற்றும் கிராமத்து இளைஞர்கள், சிறுவர், சிறுமியர்.

சின்னான் பாயில் படுத்திருக்கிறான்.

சிவராசா திண்ணையில் வெறித்த நோக்குடன் இருக்கிறான்.

தபாற்காரன் வருகிறான்.

செல்லி போய்க் கடிதத்தை வாங்கி வந்து சிவராசாவிடம் கொடுக்கிறாள். சிவராசா கடிதத்தைப் பிரித்துப் பார்க்கிறான்.

கலண்டரில் திகதியைப் பார்க்கிறான். திகதி ஒன்பது.

செல்லி: என்னவாம்... ஆர் போட்டிருக்கினம்...

சிவராசா: அது சிவகுரு.

செல்லி: என்னவாம்?

சிவராசா: நான் சொன்னன்... ஒஃபிஸில நடந்த விஷயங்களைப் பற்றி விசாரணையாம்... என்னை வரச் சொல்லி வந்த ஓடரை சிவகுரு அனுப்பியிருக்கு.

செல்லி: எப்பவாம்?

சிவராசா: பத்தாந்திகதி.



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| | செல்வி: இண்டைக்கு ஒன்பதாந்திகதி... அப்ப பின்னேரம் போறியே? |
| சிவராசா ஓடரைப் பார்க்கிறான். அவன் மனதில் பழைய எண்ணங்கள் தோன்றுகின்றன. | |
| (ஃபிளாஷ்பாக் காட்சிகள்) | |
| 1. யூனியனின் ஸ்ட்ரைக்கை எதிர்த்து வாதாடியது. (காட்சி 26) | |
| 2. முதலாளி வேர்க்ஸ் மனேஜரின் மனைவியுடன் நெருக்கமாக இருந்த காட்சிகள் (காட்சி 38) | |
| 3. சண்முகத்துடன் சந்தையடியில் சண்டை பிடித்த காட்சிகள் (காட்சி 2) | |
| 4. முதலாளியுடன் கடைசி நாள் இடம் பெற்ற வாக்கு வாதம் (காட்சி 39) | |
| 5. சண்முகம் கொழும்பில் வந்து பழையவற்றை மறந்து விடும்படி சொன்னது (காட்சி 21) | |
| 6. தகப்பனுக்குச் சுகமில்லையென்று யாழ்ப்பாணம் போக சண்முகம் செய்த உதவிகள் (காட்சி 24) | |
| 7. கந்தசாமி தனக்கு மாம்பழம் கொண்டு வந்தது (காட்சி 19) | |
| 8. மீண்டும் முதலாளியுடன் கடைசி நாள் இடம்பெற்ற வாக்குவாதம் (காட்சி 39) | |
| 9. கடற்கரையில் வைத்து சகுந்தலா சொன்ன வார்த்தைகளுடனான காட்சி நினைவுக்கு வரல். (காட்சி 35) | |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி | |
|---|---|---|
| | சகுந்தலா: | அதுக்குத்தான் சொல்லுறன்... ஊரில வந்து கமந்தைச் செய்யுங்கோ... உதாசீனங்களைப் புறக்கணியுங்கோ... பொருளாதார ரீதியா, கல்வி ரீதியா முன்னேறுங்கோ... இன்னும் பத்து வருஷத்தில சாதீன்ர இந்தச் சிறு பாதிப்புக் கூட இல்லாமல்ப் போயிடும். அதை விட்டிட்டு, ஊரை விட்டு வந்து இப்பிடி பட்டணத்தில வஞ்சகம், சூது, பொறாமை, கபடம், தான் வாழ வேண்டி மற்றவைக்குக் கழுத்தறுக்கிறது, பந்தம் இதுகளோட போராடுறது உங்களை எல்லா வகையிலும் பாதிக்கும். ராசன், உலகத்தில நம்பிக்கைத் துரோகம் பாதிக்கிற மாதிரி ஒரு தனை ஒண்டும் பாதிக்காது... நகர வாழ்க்கையில அதை அடிக்கடி சந்திக்க வேண்டி வரும். ஊர்ச்சனங்கள் பாவம்... அடிப்படையில வஞ்சகமில்லாததுகள்... சண்முகம் மாமாவைப் பாக்கேல்லையே. |
| ஃபிளாஷ்பாக் காட்சி முடிவு:<br><br>சிவராசா முகத்தில் ஒரு தெளிவு. | | |
| | சிவராசா: | அம்மா... அந்த நெருப்புப் பெட்டியை எடுத்துவானை. |
| செல்லி நெருப்புப் பெட்டியைக் கொடுக்கிறாள். சிவராசா நெருப்புக்குச்சைத் தட்டி விசாரணைக்கு வரச் சொல்லி வந்த ஓடரை எரிக்கிறான். | | |
| | செல்லி: | ஏன் மோனே... என்ன செய்யிறாய்? நீ கொழும்புக்குப் போகேல்லையே. |
| | சிவராசா: | இல்லையணை... |
| நெருப்பு எரிகிறது:<br>அதனூடாக காட்சிகள் மிதந்து வருகின்றன: | பாடல் 4: | மெதுவாக ஒலிக்கத் தொடங்குகிறது. பேதங்கள் அற்ற, பொருளாதாரத் |



படிப்பகம்

www.padippakam.com

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| 1. சிவராசா வயல் உழுகிறான். இளைஞர்கள் சேர்ந்து கடுமையாக உழைக்கிறார்கள். | தில் மேம்பட்ட, கல்வியால் மேம்பட்ட, வஞ்சகம், சூது, பொறாமை, அற்ற ஒற்றுமையான சமுதாயத்தை — அமைக்க எல்லோரும் உழைப்போம் என்னும் பெருள் பொதிந்த பாடல். |
| 2. றெயில்வே ஸ்டேஷனுக்கு முன்னால் சிவராசா மற்றும் இளைஞர்கள் நிற்கிறார்கள். சிவகுரு மனைவி நிலும், பிள்ளை சகிதம் வருகிறான். | |
| 3. கிராமத்தில் செல்லி முதலிய பலரும் சிவகுரு, நிலும், மகள் ஆகியோரை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். | |
| 4. சிவராசா கஷ்டப்பட்டு ஒரு பாரவண்டியை இழுத்து வருகிறான். சண்முகம் வந்து தானும் கை கொடுத்து இழுத்து உதவுகிறான். | |
| 5. சின்ன ஆச்சிரமம் போன்ற ஒரு இடத்தை ஊர்ச்சனங்கள் சேர்ந்து கட்டுகிறார்கள். | |
| 6. அவ்வாச்சிரமத்தில் ஒரு பக்கம் சிறு பிள்ளைகளுக்கும் ஒரு பக்கம் முதியவர்களுக்கும் சிவராசா, அருணகிரி, முதலான இளைஞர்கள் பாடம் நடத்துகிறார்கள். | |
| 7. நிலும் சிறு பிள்ளைகளுக்கு பாடல் சொல்லிக் கொடுக்கிறாள். | |
| 8. பிள்ளையார் கோவில்த் திருவிழா. ஊர்ச்சனங்கள் மகிழ்ச்சியாகக் காணப்படுகிறார்கள். எல்லா இளைஞர்களும் சுவாமி காவி ஊர்வலம் வருகிறார்கள். | |
| 9. கதாபாத்திரங்கள் முதல் சனங்களின் மகிழ்ச்சி பொருந்திய முகங்களின் குளோஸப்புகள். | |
| 10. சிவராசாவின் முகம். | |



படிப்பகம்

| காட்சி விளக்கம் | ஒலி |
|---|---|
| 11. சகுந்தலா வெள்ளவத்தைக் கடற் கரையில் கதைத்த காட்சி. | காட்சிக்குரிய வசனங்கள். |
| 12. சிவராசா கடுதாசி எரிந்த சாம் பரைப் பார்த்துக் கொண்டு இருக்கிறான். முகத்தில் ஒரு தெளிவு, உறுதி. | பாடல் முடிவு. |
| எழுந்து நிற்கிறான். | |

சுபம்

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

NATIONAL FILM CORPORATION OF SRI LANKA

**දෙමළ තිර රචනා තරගය — 1981**

**தமிழ் திரைப்படக் கதை வசன எழுத்துப் பிரதிப்போட்டி — 1981**

**TAMIL FILM SCRIPT COMPETITION — 1981**

மேற்படி கூட்டுத்தாபனம் 1981 ஆம் ஆண்டில் அகில இலங்கை ரீதியில் நடத்திய தமிழ் திரைப்படக் கதை வசன எழுத்துப் பிரதிப் போட்டியில்

திரு ப. விக்னேஸ்வரன் அவர்கள் எழுதிய கிராமத்தின் இதயம் என்ற எழுத்துப் பிரதி முதலாம் பரிசு பெற்றமையைப் பாராட்டி இச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

සභාපති, දෙමළ තිර රචනා ඇගයීම් කමිටුව
தலைவர், தமிழ் திரைப்படக் கதை வசன எழுத்துப் பிரதி மதிப்பீட்டுக்குழு
Chairman, Tamil Film Script Evaluation Committee

සභාපති, ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව
தலைவர், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்.
Chairman, National Film Corporation of Sri Lanka.

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



இந்த நூலின் ஆசிரியர் திரு. ப. விக்னேஸ்வரன் 09-06-1950ல் காங்கேசன்துறையில் பிறந்தவர். அதே ஊரில் நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயின்றவர். கல்லூரி நாட்களில் விளையாட்டுத்துறையிலும், கலைத் துறையிலும், (குறிப்பாக நாடகத்துறை) பிரபலமாக விளங்கியவர். சிறு வயது முதல்பல மேடை நாடகங்களில் நடித்த இவர் குறிப்பிடக்கூடிய சில மேடை நாடகங்களை இயக்கியுமுள்ளார். மேடை நடிப்பு, சிறுகதை, வானொலி உரைச்சித்திரம், திரைக்கதைப் பிரதி, டெலி நாடகம் போன்றவற்றில் மிகவும் அங்கீகாரம் பெற்ற பரிசுகளைப் பெற்றவர் திரு. ப. விக்னேஸ்வரன் தனது பத்தொன்பதாவது வயதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சி உதவித் தயாரிப்பாளராக சேர்ந்துகொண்டார்.

இவர் வெகுஜனத்தொடர்புத் துறையில் (வானொலி, தொலைக்காட்சி) இருபது வருடங்களுக்கு மேல் அனுபவமுடையவர். பல பரிமாணங்களைக்கொண்ட ஒரு கலைஞன் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராக, அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பவராக, நேர்முக வர்ணனையாளராக, வானொலி நாடக, உரைச்சித்திரக் கலைஞராக, நாடக, உரைச்சித்திர எழுத்தாளராக, ஒலிச்சித்திரம், இரசமஞ்சரி, பரீட்சார்த்த நாடகங்கள், சிறுகதை, கவியரங்கம், கதம்பம், பிரதான நாடகங்கள் முதலிய நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராக - இப்படிப் பல்வேறு துறைகளில் வானொலியில் பிரகாசித்த இவர், இலங்கையின் தொலைக்காட்சித் துறையில் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்கிறார். இலங்கையின் முதல் தொலைக்காட்சி நாடகம் (Tele Drama), மற்றும் குறுகிய காலத்தில் மிக அதிகமாக பல்வேறுபட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மிக அதிகமான, தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றைத் தாயாரித்தவர் என்ற பெருமையைப் பெறும் இவர், தொலைக்காட்சிச் செய்தி அறிவிப்பாளராகவும் நேர்முக வர்ணனையாளராகவும் இருக்கிறார். கடந்த ஆறு வருடங்களாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாகவுள்ளார்.

(தலைவர், இலங்கை ஒலி - ஒளி நேயர் மன்றம்)

படிப்பகம்